வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
# SUTANTIRAN

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.

திறம் சலவைக்கு

மில்க் வைற் சோப்



மில்க் வைற் சோப் தொழிற்சாலை

யாழ்ப்பாணம்

புத்தகம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 1991 புரட்டாதி திங்கள் 10-ம் நாள் (25—9—60) ஞாயிற்றுக்கிழமை ரபி.ஆகிர் 3 | இதழ் 17

# அரசாங்கம் பாடசாலைகளைக் கையேற்றால்

## வடக்கிலும் கிழக்கிலும் சிங்களம் திணிக்கப்படும்

## யாழ்ப்பாணப் பாடசாலைகள் தரத்திலும் குறைக்கப்படலாம்

## உயர்தரக் கல்வி அதிகாரி வெளியிட்ட அந்தரங்கக் கருத்து

(சுதந்திரன் நிருபர்)

இலங்கை அனைத்துக்கும் ஒரு தேசியக் கல்வித் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதே அரசாங்கம் பாடசாலைகளைக் கைபேற்றதன் முக்கிய நோக்கம் என்றும், அந்த தேசியக் கல்வித் திட்டம் நான்கு அம்சங்களை உடையதாய் அமையும் என்றும் வித்தியாபகுதியைச் சேர்ந்த ஒரு உயர்தரக் கல்வி அதிகாரி அந்தரங்கமாக அபிப்பிராயம் வெளியிட்டார் என்று தெரியவருகிறது.

அரசாங்கம் உத்தேசித்துள்ள தேசியக் கல்வித் திட்டத்தைப் பின்வரும் நான்கு அம்சங்களின் கீழ் அமுல் செய்ய திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாகப் பிரஸ்தாப அதிகாரி விளக்கம் கூறினாராம்.

1. தரமான கல்வியைப் பெறும் விஷயத்தில் சகலருக்கும் சம சந்தர்ப்பம் அளிப்பது.

2. ஒவ்வொரு பிள்ளைக்கும் அதனதன் சமயச் சூழலுக் கேற்பச் சமயக் கல்வியைப் போதிப்பது.

3. பாடசாலைகளை தாரவாரியாகப் பிரித்து நுணைப் பாடசாலைகள், தொழிற்பாடசாலைகள், உயர்தரப் பாடசாலைகள் என்று கருத்து மாணவரின் திறமைக்கும் நாட்டத்திற்கும் ஏற்ப பாடசாலைகளை நடத்துவது.

4. வடக்கு கிழக்கு உட்படச் சகல பாடசாலைகளிலும் அரசகரும மொழியாகிய சிங்களத்தை எல்லா மாணவர்களும் ஏற்றுப் படிக்கும்படி செய்வது

கல்வி அதிகாரியின் மேற்படி விளக்கம் தமிழ் பேசும் மக்களிடையே கலக்கத்தை உண்டுபண்ணுமென்பதில் சந்தேகமில்லை.

'இரண்டாவது, மூன்றாவது அம்சங்களைப்பற்றி யாரும் கவலைப்படவில்லை. முதலாவது, நான்காவது அம்சங்கள் தமிழ் பேசும் மக்களைப் பாதிப்பனவாகும்' என்று ஒரு பிரமுகர் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார்.

### சதியானால் என்ன செய்வது?

அப்பிரமுகர் சுதந்திரன் நிருபரிடம் கூறியதாவது:

"கல்வித்துறையில் சகலருக்கும் சமசந்தர்ப்பம் அளிப்பது வரவேற்கக் கூடியதே. ஆனால் நடைமுறையில் எத்தகைய பாரபட்சம் காட்டப்படுமோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது. பள்ளிக்கூட வசதிகள் குறைவாக உள்ள இடங்களில் வசதிகளைக் கூட்டினால் நல்லதுதான். ஆனால் யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் பள்ளிக்கூடங்கள் அதிகமாக உள்ளன

(8-ம் பக்கம் பார்க்க)

## உடுவில் பிரதிநிதியின் உறைப்பான கடிதம்

## பிரதமர் ஞாபகதின சுற்றுநிருபம் வாபஸ்

### தேசிய கல்வித்திட்டம் இதுதானா?

பண்டாரநாயகா முதலாவது ஞாபகார்த்த தினத்தையொட்டி பாடசாலைகளுக்கு விடுக்கப்பட்ட சுற்றுநிருபம் கல்வி மந்திரியின் தலையீட்டின்பேரில் வித்தியாபகுதியால் வாபஸ் பெறப்பட்டிருக்கிறது.

பாடசாலை முகாமைக்காரர்களும், தலைமை ஆசிரியர்களும் மேற்படி ஞாபகார்த்த தினத்தையொட்டிய நிகழ்ச்சிகள்பற்றி வட்டார வித்தியாபதிக்கு அறிக்கை அனுப்ப வேண்டும் என்று கோரப்பட்டிருந்தார்கள். "இது ஒரு பயமுறுத்தல்" என்று ஆட்சேபித்ததுடன், உடுவில் பிரதிநிதி திரு வி. தர்மலிங்கம் 'விவேகமற்ற-கண்ணியத்திற்கு அப்பாற்பட்ட செயல்' என்று வர்ணித்திருந்தார். கடிதம் முழுமையாய்க் கீழே தரப்படுகிறது:

வித்தியாபதி அவர்கட்கு,
கொழும்பு

பண்டாரநாயகா ஞாபக தினம்:
செப். 26, 1960

ஐயா!

உங்கள் 16-9-60 சுற்று நிருபம் எனக்கு மலைப்பையூட்டுவதாயிருக்கிறது. அக்கடிதத்தின் உண்மை நோக்கம் எனக்கு விளங்குவதாயில்லை. காலஞ்சென்ற பண்டாரநாயகாவின் முதலாவது சிராத்த தினம் தகுந்த முறையில் கொண்டாடப்பட வேண்டுமென்ற வேண்டுகோளுடன் இந்நிருபம் ஆரம்பமாகிறது. இவ்வேண்டுகோளுடன் கடிதம் நின்றிருந்தால் நான் ஆட்சேபிக்க ஏதுவும் இருந்திருக்காது. ஆனால் உங்கள் கடிதத்தின் இறுதிப் பகுதி உங்கள் ஆரம்பவேண்டுகோளை ஒரு கட்டளையாக மாற்றிவிடுகிறது. இது பாடசாலை முகாமைக்காரர்களையும் தலைமை ஆசிரியர்களையும் நேர்முகமாக இழிவுபடுத்துஞ் செயலென்பதில் சந்தேகமில்லை. அத்துடன் காலஞ்சென்ற

(8-ம் பக்கம் பார்க்க)



அமரர் வன்னியசிங்கம் அவர்களின் பிறந்த இடமான கொல்லங்கலடிக் கிராமத்தில், மாவை கொல்லங்கலடி சனசமூக நிலையத்தினரால் அவரது நினைவு விழா நடாத்தப்பட்டது. அவ்வைபவத்தில் பொ. சிரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அமரர் வன்னியசிங்கம் அவர்களின் படத்தை திரைநீக்கம் செய்து வைக்கிறார். பக்கத்தில் மாவைநாட்டுத் தலைவர் வி. எம். சுப்பிரமணியமும், தெல்லிப்பளை கிராமச் சங்கத் தலைவர் திரு கு. கதிரையாண்டியும் காணப்படுகின்றனர்.

சகலவித மூலநோய் நிவாரணி

றிச்லெட்ஸ்
ப்ளட் பியூரிபயர்
(RICHELET'S BLOOD PURIFIER)

இரத்த சுத்தி செய்து



மூலம்
வாதம்
படை (ECZEMA)
மாத விடாய்
கோளாறுகள்



முதலானவைகளைக் குணப்படுத்துவதில் நிகரற்ற சஞ்சீவி இது. ஒரு போத்தல் முடிந்ததுமே ... பூரண பலனை அடைய வேண்டும் என்ற ஆசையும் நம்பிக்கையும் தானகவே ஏற்படும்

எங்கும் கிடைக்கும்.

வெஸ்டன் ஏஜன்சீஸ்,
63, பேங்ஷால் வீதி, கொழும்பு
(போன் : 2885)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது இலட்சியத்துக்காகக் கூட்டுப்பணி புரிய மாணவர்கள் பழக வேண்டும்

## சகிப்புத் தன்மை வளர்ந்தாலே ஜனநாயகம் நிலைக்க முடியும்

## 'மாவை மாணவன்' வெளியீட்டில் அமரர் வன்னியசிங்கம் தீட்டிய கட்டுரை

சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பு அமரர் வன்னியசிங்கம் 'மாவை மாணவன்' என்ற வெளியீட்டில் 'உங்களிடமிருந்து தாய்நாடு எதிர்பார்ப்பதென்ன?' என்ற தலைப்பில் ஒரு அருமையான ஆங்கிலக் கட்டுரையைத் தீட்டியுள்ளார். அக்கட்டுரை கடந்த வாரம் சுதந்திரனில் இடம்பெற்றது. அதன் தமிழாக்கம் இங்கு தரப்படுகிறது.

மாணவருக்கென நடாத்தப்படும் பத்திரிகையில் தமிழில் எழுதுவதையே நான் விரும்பியிருப்பேன். அப்பொழுதுதான் கீழ் வகுப்புகளிலுள்ள மாணவர்களும் நான் கூறுவதை எளிதில் புரிந்துகொள்ள முடியும். ஆனால் ஆங்கிலத்தில் எழுதும்படி என்னைக் கேட்டுக்கொண்டார்கள். எனவே நான் ஆங்கிலத்தில் எழுதுகிறேன். இரண்டாவதாக, மாணவர்களுக்காகவே இத்தச் சில வார்த்தைகளை எழுதுவதினால் தர்க்கத்திற்குரியனவையும் நான் எழுதவும் விரும்பவில்லை.

இந்நாட்டின் தேசாதிபதியவர்கள் உத்தியோக நியமனங்களில் உற்றார் உறவினர்களுக்குப் பட்சபாதம் காட்டுவதில் எதுவும் தவறிருப்பதாக கருதுபவரல்ல. இலங்கையிலுள்ள ஒரேயொரு கைத்தொழில் அரசாங்க ஊழியம் என்றே கூறப்படுகிறது. எனவே பெருமளவில் செல்வாக்கிருந்தாலன்றி, ஒருத்தர் அரசாங்க சேவையில் சேர நினைக்கவும் இயலாது. ஆகவே பெரும்பாலான மாணவர்கள் கல்விப் பயிற்சி முடிந்ததும், தத்தம் வாழ்க்கையை எவ்வாறு அமைத்துக்கொள்ள வேண்டும் என்று சிந்திக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

### சிலமா? பலமா?

ஆங்கிலத்தில் போதிய அளவு பயிற்சி பெற்ற ஒருவர் அகலசகலமாக ஒரு உத்தியோகத்தில் அமர்ந்துவிடலாம் என்ற காலம் மறைந்துவிட்டது. எனவே இந்தக் காலத்தில் கல்வியினால் ஒரேயொரு பயன் மாத்திரம் கிடைக்கும் என்றே உறுதி கூறலாம். அதாவது கல்வி ஓரளவு அறிவைக் கொடுக்கிறது. "அறிவே சீலம்" என்று சோக்கிரதிஸ் போதித்தார். ஆனால் "அறிவே பலம்" என்றும் ஒரு பொன்மொழி உண்டு. இருந்தும் சீலமும் அறிவும் ஒத்துப்போவதில்லை. இதை நாம் அனுபவத்தில் காண்கிறோம். சில சமயம் அறிவு தீமைத் செய்யவும் உதவுகிறதல்லவா? அதுபோலவே, 'அறிவே பலம்' என்று கூறுவதும் சரியல்ல. அறிவைப் பலமாக மாற்றுமுன், அறிவைப் பயன்படுத்தி உபயோகத்தில் கொண்டு வர வேண்டும். எனவே பலத்தைத் தேடுவதில் அறிவு ஒரு ஆதாரமாக இயங்குகிறது.

### அறிவு எதற்கு?

உங்களுக்குத் தேவையான அறிவு பாடசாலைகளில் புகட்டப்படுகிறது. இதை எப்படி ஒரு கருவியாக நீங்கள் பயன்படுத்தலாம்? இதை நான் சுருக்கமாக உங்களுக்குக் கூற விரும்புகிறேன். உங்கள் அறிவைத் தகுந்த வழியில் நீங்கள் பயன்படுத்தினால் உங்கள் தாய்நாடு உங்களிடம் எதிர்பார்ப்பதை நீங்கள் வெற்றியுடன் நிறைவேற்றி வைத்தவர்களாவீர்கள்.

எந்த ஒரு மனிதனும் சமுதாயத்திற்குச் சுமையாயிருக்கக்கூடாது. தன் தன் பொறுப்புகளைத் தானாகவே நிர்வகிக்கக்கூடியவனாய் வாழ வேண்டும். அதாவது மற்றவர்களில் சாய்ந்து நிற்காது, சமூகத்தில் அனுமதிக்கப்பட்ட தார்மீக, சட்ட வரம்புகளுக்குட்பட்டுத் தேகதிடமுள்ள ஒவ்வொருவரும் தன்னைத்தானே கவனித்துக்கொள்ளக்கூடியவராயிருக்க வேண்டும்.

### திடசித்தம்

சமக்காரர்களாகவோ, வியாபாரிகளாகவோ, தொழிலாளிகளாகவோ வாழ்வது தமது அந்தஸ்திற்குக் குறைவானது என்று படித்த வாலிபர்கள் கருதுகிறார்கள். இன்றிருக்கும் வேலையின்மைக்கு இந்தக் கருத்தும் ஓரளவு காரணமாய் அமைந்துள்ளது. புதுப் புதுத் துறைகளில் துணிந்திறங்கும் போராட்ட மனப்பான்மை இவர்களிடமில்லை. ஆனால் தார்மீக சட்ட வரம்பிற்குட்பட்ட வழிகளில் தன்னைத்தானே பேணிக்கொள்ள வேண்டும் என்று ஒருவன் திடங்கொள்வானானால் அது அவன் சக்திக்கப்பாற்பட்ட ஒன்றாயிருக்கவே இருக்காது.

இருந்தும், இன்னுமொன்று! உணவினால் மாத்திரம் மனிதன் உயிர் வாழ்வதில்லை. சமுதாயத்தில் ஒரு அங்கத்தவன் என்ற முறையில் சமூகத்திற்கு நாம் ஆற்ற வேண்டிய பங்கையும் செலுத்தாதிருக்கக் கூடாது. இப்பங்கு சமயப் பணியாயிருக்கலாம்; பதவிலைகாக இருக்கலாம்; கல்வியூட்டலாயிருக்கலாம்; அல்லது, வேறெந்தச் சமூக சேவையாயுமிருக்கலாம்.

### சகிப்புத்தன்மை

அத்துடன் நீங்கள் "சகிப்புத்தன்மை"யையும் வளர்த்தல் அவசியம். ஜனநாயகம் இயங்க வேண்டுமானால் சகிப்புத்தன்மை மிக அத்தியாவசியமானது. பல பேருடன் சேர்ந்து ஒத்துழைக்கவும், ஒரு பொது இலட்சியத்திற்காகக் கூட்டுப் பணிபுரியவும் பழகிக்கொள்ள வேண்டும். தோல்வியை திருப்தியுடன் ஏற்றுக்கொள்ளத் தெரிய வேண்டும். இவையனைத்தையும் ஒருங்கே [illegible] சகிப்புத்தன்மை. [illegible] யையும் ஒத்துழைப்புணர்ச்சி யையும் வளர்த்துக் கொள்வீர்களானால், நிச்சயம் எதிர்காலம் சிறப்புடையதாயமையும். இந்நாட்டு மக்கள் பலதுறைகளில் பின்தங்க வேண்டி வந்தது ஒருத்தரில் ஒருத்தர் பரஸ்பர நம்பிக்கையில்லாததினாலும் தன்னில் தானே சுய நம்பிக்கை இல்லாததினாலுமே.

### நாட்டுப் பணி

நான் கூறிய இந்தச் சில கருத்துக்களுக்கமைய மாணவர்களாகிய நீங்கள் உங்கள் வாழ்க்கைக்கு நீங்களாகவே சட்டம் வகுத்துக் கொள்ளுவீர்களானால், சமூகத்திற்குப் பயனுள்ள நல்ல குடிமக்களாக நீங்கள் வளருவீர்கள். நாடு உங்களிடம் எதிர்பார்க்கும் பணியை நல்ல முறையில் ஆற்றியவராவீர்கள்.

இந்த நல்ல பணிக்கமைய உங்கள் முதியோர்கள் நடக்கத் தவறி விட்டார்களானால் நீங்களும் அதே தவறிழைக்கவேண்டியவர்களல்ல. அவர்கள் தோல்வியுற்ற துறையில் நீங்கள் வெற்றி [illegible] காண்பது மாண்புமிக்க செயலன்றோ!

தமிழாக்கம்: செ. குமாரசாமி


## ஆரோக்கியாமிருதலேஹியம்

தேர்வனம்சேரத கபேதி

[illegible]

ரூ. 5-50 ரூ. 3-00 ரூ. 1-60

S. N. GURU MEDICAL HALL
110, NEW CHETTY STREET COLOMBO 13



## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கைகளுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளிவேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, சிரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

**பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.**

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

**பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.**

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

**ஆனந்தா வைத்தியசாலை,**

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


## சங்கப் பலகை

# 'தியாகமாமலை'

அமரர் கு. வன்னியசிங்கமவர்களின் ஆற்றல், திறமை தகைமை ஆதியனவற்றைப் பற்றி பண்டிதர் க. சச்சிதானந்தன் 'தியாகமாமலை' என்ற ஒரு அருமையான நூலை எழுதியுள்ளார். உள்ளத்தைத் தொடும் உணர்ச்சிமிக்க துள்ளு தமிழ் நடையில் நூல் ஆக்கப்பட்டிருக்கிறது அழகான மூவர்ண அட்டையோடு கூடிய இந்நூல் யாவராலும் படிந்தது. மறைந்த மாபெரும் தலைவரின் மாண்புகளை அறிய அரிய வாய்ப்பினை அளிக்கின்றது. இந்நூலுக்குத் தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் முன்னுரை தந்துள்ளார். அதை இங்கு பிரசுரிக்கிறோம்.

ஒரு மனிதனின் வாழ்க்கை எண்ணுக்கடங்கிய சில ஆண்டுகளுக்குள் அடங்கியது. ஆயினும், அவனுடைய செய்கையும், கீர்த்தியும் எண்ணுக்கடங்காக் காலத்துக்கு நிலைக்கும். திருவாளர். கு. வன்னியசிங்கம் அவர்கள் சீவித்த ஆண்டுகள் நாற்பத்தொன்பதேயாகும். அவர் இலங்கை வாழ் இனத்திற்குச் செய்த தொண்டு பல நூற்றாண்டுகளாகப் பாராட்டப்படும்.

ஆகவே, நாம் மறக்கக்கூடாத ஒருவரின் வாழ்க்கை வரலாறு எழுத்தில் வைக்கத் தகும். அந்தக் கடமையைச் செய்து வைத்த இந்நூல் ஆக்கியோன், பண்டிதர். க. சச்சிதானந்தன் எமது நன்றிக்கு உரித்தானவராவர்.

பெரியாராகிய திரு. கு. வன்னியசிங்கம் அவர்கள் பங்குபற்றிய சம்பவங்கள் மூலமாக அவரின் சரித்திரத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். குறிக்கப்பட்ட சம்பவங்களில் எதுவும் அவரில்லாமல் நடைபெற்றிருக்க மாட்டாதென்பதை இப்புத்தகத்தைப் படிக்கும் வாசகர்கள் மனதில் வைத்து வாசிக்கும்போதுதான் திரு. கு. வன்னியசிங்கத்தின் பெருமை விளங்கும்.

பல அரிய பெரிய குறிக்கோள்களைக் கொண்டிலங்கிய அன்னாரின் இரண்டு விசேடங்களை மாத்திரம் தனியாக எடுத்துக் கூறுவது என் கடமை.

முதற்தொடங்கித் தமிழ்ப் பேசும் மக்களின் விடுதலை இயக்கமாகிய தமிழரசு இயக்கத்தில் அவருடன் ஒத்துழைத்தவன் என்ற முறையில் நான் அவரைப் பற்றிக் கூறும் சாட்சியாவது திருவாளர் வன்னியசிங்கமில்லாமல் தமிழரசு இயக்கம் உற்பத்தியாகியிருக்கவும் மாட்டாது. இன்று அதிருக்கும் உயர்வுக்கு வளர்ந்திருக்கவும் மாட்டாது என்பதே அந்த இயக்கத்தை உச்ச நிலையில் விட்டு எங்கள் நண்பன் பிரிந்து விட்டார்.

இரண்டாவதாக, எடுத்துக் காட்ட வேண்டிய குறிப்பு: திரு. வன்னியசிங்கம் ஒரு பெரும் தியாகி. உண்மையாக அவர் இனத்திற்குச் செய்த சேவையினால் நடுவயதில் காலமாக வேண்டி வந்தது. அவரைக் கொன்ற நோய் சிலவருடங்களாக அவரைப் பீடித்திருந்தது. அவருடைய வைத்தியர்களின் புத்திமதிப்படி அவரது வேலைகளைக் குறைத்திருந்தால் இன்னுஞ் சில காலம் வாழ்ந்திருப்பார். அப்படி நோய் கொண்டிருந்தும் தன்னிடம் உதவியை நாடி வரும் எவருடைய பணியையும் ஏற்றுக்கொண்டு இடைவிடாமல் தொண்டு செய்தார். இதன் பலன், நோய் பெருகி அவர் சடுதியாய்க் காலமானார்.

இந்த நூல் எவரும் படித்து விளங்கக்கூடிய எளிதான வசன நடையில் எழுதப்பட்டுள்ளது. மேலும், வாசிப்பவர்களின் மனதைக் கவரக்கூடிய கதை வடிவங் கொண்டது. இருபதாம் நூற்றாண்டின் இலங்கைச் சரித்திரப் புத்தகங்களுள் இடம் பெறத் தகுதியுள்ளது.

'தியாகமாமலை'
விலை: ரூ. 1—00.

கிடைக்குமிடம்:-
கு. நடராசா,
"சத்தியஸ்தன்"
மல்லாகம்.

## முரசொலி நாடக மன்றம்

இலங்கை முரசொலி நாடக மன்ற உறுப்பினர் கூட்டம் கடந்த 28-8-60-ல் நாடக மன்ற பணிமனையில் தோழர் இரா. திருமறவன் தலைமையில் நடைபெற்றது. கீழ்காணும் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:-

தலைவர்: திரு. இரா. திருமறவன், துணைத் தலைவர்: திரு. எம். சாஹுல் ஹமீது, செயலாளர்: திரு. எம். எச். தமிழ்ச் செல்வன், பொருளாளர்: திரு. புகழரசு, பொறுப்பாளர்: திரு. "நாடோடி", விளம்பரச் செயலாளர்: திரு. அ. தங்கையா. செயற்குழு உறுப்பினர்கள்: மயில்வாகனம், கே. முகைதீன், எம். மீரா, பி. சந்திரன், எம். இ. ஹனிபா, எம். ஜி. எம். பீசுருல் ஹாபி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத்

# தமிழர்களின் 2000 வருடச் சரித்திரம் எங்கே?

## சிங்கள பௌத்தர்களே இலங்கைச் சரித்திரத்தைக் கட்டி யெழுப்பியவர்களாம்!

## புதைபொருள் ஆராய்ச்சித் துறையின் 70 வருடச் "சாதனை"

இலங்கை அரசாங்கத் தகவற் பகுதியால் வெளியிடப்படும் "Ceylon Today" என்ற பிரசுரத்தின் ஜூலை இதழிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது இக் கட்டுரை. "The Archaeological Survey of Ceylon, 1890—1960" என்ற தலைப்பில் இதை எழுதியிருக்கிறார் புதைபொருளாராய்ச்சித்துறை முன்னாள் உதவி ஆணையாளர் (பிரசுரப் பகுதி) திரு. டி. ரி. தேவேந்திரா.

புதைபொருளாராய்ச்சி இலங்கை அரசாங்கத்தின் ஒரு துறையாக 70 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை சிவில் சேர்விஸில் கடமையாற்றிய பெல் (H. C. P. Bell) என்பவர் 1890ல் ஜூலை 7ந் தேதி முறையான புதை பொருளாராய்ச்சியை இலங்கையில் ஆரம்பித்து வைத்தார். அப்பொழுது அவர் கேகாலையில் நீதித் துறையில் பணியாற்றி வந்தவர். அத்துடன் புதைபொருளாராய்ச்சி ஆணையாளராகவும் நியமனம் பெற்றார். அனுராதபுரத்தில் தான் இவர் ஆராய்ச்சியை ஆரம்பித்தார். உற்சாகம் நிறைந்த இவரின் பணி காரணமாக இன்று புகழ் பெற்றுவிட்ட "கேகாலை அறிக்கை" வெளிவந்தது. இதற்குச் சுமார் 50 வருடங்களுக்கு முன்னர் சில பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்கள் உள்ளூர்க் கல்விமான்களுடன் சேர்ந்து சில ஆராய்ச்சிகளிலீடுபட்டிருந்தனர். அந்தக்காலத்தில், புகழும் பெருமையும் நிறைந்த இந்திய பழம்பெரும் நாகரிகத்தின் மாண்பு மெல்ல மெல்ல ஐரோப்பாவில் பரவ ஆரம்பித்திருந்தது. எனவே, இலங்கையிலும் இவ்வாராய்ச்சி நடைபெறச், சூழ்நிலையும் வாய்ப்பளித்தது.

### ஆராய்ச்சித்திறன்

திரு பெல்லின் முயற்சியால் 14ம் நூற்றுண்டுவரையுள்ள 17 நூற்றுண்டுகாலச் சரித்திரம் அனுராதபுரம், பொலநறுவை, சிகிரியா, யப்பாகுவா ஆகிய நகரங்களிலிருந்து தோண்டி எடுக்கப்பட்டது. அவர் மறைந்து அரை நூற்றுண்டுக் காலமாகியும் அவரின் அடிப்படை ஆராய்ச்சி உண்மைகள் இன்னும் தகர்க்கப்பட்டதில்லை. அவ்வளவு ஆரம் அவர் ஆராய்ச்சியில் விஞ்ஞான நோக்கும் நுண்மையுமிருந்தன.

### ஒரு இனத்திற்கு மட்டுமல்ல

பெல் ஆரம்பித்து வைத்த ஆராய்ச்சி இரண்டு தடவைகளில், உலக மகாயுத்தங்களின்போது, மாத்திரமே தடைப்பட்டிருக்கின்றது. இவரின் பின் இந்தத் துறைக்குத் தலைமைவகித்த நால்வரில் ஹோக்காற் (A. M. Hocart) என்பவரும் பரணவித்தான என்பவரும் புதைபொருளாராய்ச்சியில் பெரும் பணி புரிந்திருக்கிறார்கள்.

இந்த ஆராய்ச்சிகளின் பயனுக கிடைத்த புதைபொருட்கள் இங்கு வாழ்ந்த எல்லா இன மக்களினதும் கலாச்சாரத்தைத் தழுவியனவாயிருக்கின்றன. இக் கலாச்சாரங்கள் அனைத்தைப்பற்றியுமே ஆராய்ச்சிகள் நடைபெற வேண்டுமென்பது சட்டபூர்வமானது.

### இலங்கையின் மகிமை

இந்தக் கலாச்சாரங்கள் இனவாரியில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பாரசீகத்தவர், சீனர், போர்த்துக்கீய, ஒல்லாந்த, ஆங்கிலேய ஐரோப்பியர்கள் ஆகியவர்களைத் தழுவிநிற்பன. மதவாரியில் பௌத்தர்கள், இந்துக்கள், இஸ்லாமியர், கிறிஸ்தவர்கள் ஆகியோரைத் தழுவி நிற்பன. மனித இனத்தின் சரித்திரத்தைக் கற்க விரும்பும் அறிஞர்களுக்கு ஏற்ப, எத்தனை விதவிதமான கலாச்சாரங்களின் சங்கமத்தைக் காண்கிறோம், இலங்கையிலே!

### சிங்கள பௌத்தர்களுக்கே முதலிடம்!!

உண்மையில் சிங்கள பௌத்தர்களைப்பற்றியே இவ்வாராய்ச்சிகளின் பெரும் பகுதி தழுவி நிற்கிறது. ஏனெனில் மற்றவர்களைவிட சிங்கள பௌத்தர்களே இந் நாட்டின் 2000 வருடச் சரித்திரத்தைக் கட்டியெழுப்பியிருக்கிறார்கள். இதைவிட சிங்கள பௌத்தர்களின் சிலைகளும் சின்னங்களுமே இடை யறுது தொடரும் 2000 வருட சரித்திரத்தைக் கதையாகச் சொல்லுகின்றன! இந்தப் பரந்த உலகில் வேறெங்கும் இந்தத் தொடர்பறுத கோவையை எவரும் காண முடியாது

கொள்ளுகிறார்கள். புதிய கண்டுபிடிப்புகளை, ஆராய்ச்சியாளரின் மனப் போக்கிற்கேற்றவாறு களங்கப்படுத்தித் திரித்துக் கூறும் இயல்பு இங்கு இல்லை. மனத்துவேஷம், பாரபட்சம் போன்ற குணங்கள் விஞ்ஞான ஆராய்ச்சியில் இம்மியும் இடம்பெற முடியாதல்லவா?

### ஆராய்ச்சியாளரின் கஷ்டங்கள்

இலங்கையின் பழைய பட்டினங்கள் நீண்ட பல நூற்றுண்டுகளாக காடுமண்டியிருந்திருக்கின்றன. இவற்றின் தோற்றம் எப்படியிருந்தி

### மின்னல்

—மு. பொன்னம்பலம்—

அரக்கர் இருவர்கள் வானச்சுவரின்மேல்
அடித்துப் புரண்டொன்றும் மோதியதால்
தெறித்துப் பறந்ததோ கண்ணைப் பறித்திடும்
தீச்சுடர் போன்றயிம் மின்னலடா!

முத்தை மிறைத்திடும் உப்புநீர் ஆழிபோம்
முட்டியடிவாணைத் தாக்கியதால்
பிய்த்துக் கிளம்புதோ பொற் பிழம்பென்னுமிப்
பொனவொளி பாய்ச்சிடும் மின்னலடா!

வெண்ணிலா வீசிடும் தண்ணொளி கண்டுளம்
வெதும்பிக் கிடந்தவிண் மீன்களெல்லாம்
மின்னலாய் மாறியே தம்மொளிகாட்டிட
முகிலைக் கிழித்தோடி வந்தனவோ?

தேவருலகினில் காதலர் கூடியே
தித்திக்கும் முத்தங்கள் கன்னங்களில்
ஆவலுடன் பரி மாறுவதோ மின்னல்
ஆகத் தெறித்தொளி காட்டுதடா!

கொட்டும் மழையொடு கட்டியணைத்தின்பக்
கொட்டமடித்திடும் மின்னல் வானை
விட்டுச் சிலவேளை பட்டென் பாரினில்
பாய்ந்து வருவதன் விந்தை யென்னே!

### ......இருந்தும் அரசாங்கத்தின் நேர்மை அப்பழுக்கற்றது

ஆனல் புதைபொருளாராய்ச்சித் துறையோ, இவ்வாறு சிங்கள பௌத்தர்களுக்குப் பாரபட்சம் காட்டுவதாயில்லை. இவர்களின் பழமையில் காட்டும் ஆர்வத்தைத் தமிழ் இந்துக்கள்மீதும், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் ஐரோப்பியர்கள் ஆகியோரின்மீது இலங்கைப் புதைபொருளாராய்ச்சித்துறையினர் காட்டத் தவறுவதில்லை.

அரசாங்கம் எவ்வாறு இதில் பாரபட்சமற்று நடக்கிறதோ அதேபோல அத்துறையில் [illegible] வர்களும் [illegible] மையாகவே பிடித்துக்

குக்கும் என்பதைக் கற்பனை பண்ண விரும்புவோர் இன்று சித்துல் பாகுவா, செருவிலை, தீகவாபி, தாந்தாமலை ஆகிய இடங்களிருக்கும் நிலையைப் பார்த்துக்கொள்ளலாம். ஆராய்ச்சி ஆரம்பிக்க 60 வருடங்களுக்கு முன்னர் ஒன்றிற்குள் ஒன்ருக மறைந்திருந்த புதைபொருட்களை வனவிலங்குகள் மலிந்த அடர்ந்த காடுகள் மறைத்து வைத்திருந்தன. அனுராதபுரத்தின் புனித போதி மரச் க்ஷேத்திரத்தின் முன்னும் ருவன்வலிதாகபாவின் முன்னும் ஒரு சிறு வெளியே திறந்திருந்தது. ஆயிரங்கால் மண்டபத்திலுள்ள 1600 தூண்களுக்கு [illegible] கூட்டம் கூட்டமாக மான் [illegible] டிருக்கும்.

### அவர்களுக்குப் பரிசு

1864-ம் ஆண்டு வரை, டிஸம்பர் மாத நடுப்பகுதியிலிருந்து மூன்று மாத காலத்திற்கு அரசாங்கக் கந்தோரிகள் மூடப்பட்டிருக்கும். மலேரியாக் கொள்ளையிலிருந்து மனிதர்களைக் காப்பாற்றுவதற்காக இது நிகழ வேண்டியிருந்தது. ஆராய்ச்சி ஆரம்பித்த அந்தக்காலத்தில் இந்தப் பட்டினங்களெல்லாம் இதே நிலையில் தானிருந்தன இன்று நவீன வசதிகளுடன் கூடிய பட்டினங்களை பார்ப்பவர்கள் புதைபொருளாராய்ச்சியாளர் அனுபவித்த கஷ்ட நஷ்டங்களை உணர முடியாது; இவர்களின் விடா முயற்சியால் கிடைத்த கண்டுபிடிப்புகள் மக்களின் கவனத்தைக் கவர்ந்தன. இதன் பயனுக ஆராய்ச்சிக்கு மேலும் ஊக்கம் கிடைத்தது.

### திரை நீங்குகிறது

புதைபொருளாராய்ச்சித் துறையின் ஒரேயொரு விஞ்ஞானப் பிரசுரம் "எபிகிருப்யா செயிலானிக்கா" (Epigraphia Zeylanica) ஆகும். இது குறிப்பிட்ட தவணையாக வெளிவருவதில்லை, ஆனல் எமது நாட்டின் பழம்பெரும் புதையல்களைப் பிற நாட்டு அறிஞர்கள் பெரிதும் அறிய உதவியாயிருக்கிறது. புதைபொருளாராய்ச்சியின் அங்கங்களான சிற்பம், ஓவியம், நாணயம் ஆகியவற்றைப்பற்றிய ஆராய்ச்சியின் பயனுக இலங்கையின் பழம்பெரும் நாகரிகத்தைச் சுற்றியிருக்கும் திரை நீங்கிக் கொண்டே வருகிறது. இப்பிரசுரத்தில் வெளியாகும் தகவல்கள் மேலும் மேலும் இந்நாகரிகத்தின் மாண்புகளை எமக்கு விரித்தெடுத்துக் கூறுவனவாயமைந்துள்ளன.

### சிகிரியாச் சித்திரமும் பரணவித்தானையும்

இந்நாகரிகத்தின் மகிமை பற்றி எமக்குப் பற்பல துறைகளிலிருந்தும் சான்றுகள் கிடைக்கின்றன; வழிபாட்டுத் தலங்கள் கோட்டை கொத்தளங்கள், கோபுரங்கள், நந்தவனம் இடுகாடுகள், குகைகள் ஆகிய சின்னங்களிலிருந்து நாம் பெறக்கூடிய தகவல்கள் நீண்டகால விசேஷ ஆராய்ச்சிக்குரிய அம்சங்களை அடக்கி வைத்திருக்கின்றன. இதற்கு ஒரு உதாரணமாக கலாநிதி பரணவித்தானையின் சிகிரியா சித்திரங்களைக் கூறலாம். இச்சித்திரங்கள்பற்றி அவர் ஆரம்பித்த ஆராய்ச்சி ஒரு முடிவிற்கு வர 25 வருடப் பரிசீலனை தேவையாயிருந்தது! ஆழ்ந்த ஆராய்ச்சிக்குரிய சின்னங்கள் புதைபொருள் நூதனசாலைகளிலும் தேசிய நூதனசாலைகளிலும் பெருமளவில் நிறைந்து கிடக்கின்றன. இன்று தேசிய நூதனசாலையிலிருக்கும் மிகத் திறமான புதைபொருட்கள், புதைபொருளாராய்ச்சியாளரின் ஆரம்பகாலத்தில் கிடைத்தவைகளே.

### அனுராதபுரம் மீளுகிறது

புதைபொருளாராய்ச்சித் துறைக்கு ஒதுக்கப்பட்ட பணம் குறைவானது. இருந்

(11-ம் பக்கம் பார்க்க)

ஆங்கிலம்

ஆங்கிலம் அழகாகப் பேச, வாசிக்க, எழுத ஆறே மாதங்களில் படிக்க விரும்பினுல் இலவச விபரங்களுக்கு எழுதுக.

அற்லஸ் ஹோல்,
த. பெட்டி: 649,
கொழும்பு.

இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி
மங்கையர் மனதுக்குகந்தது
உஷா தையல் மெஷின்களே



★ மாதத் தவணைக் கட்டணங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
★ இலங்கை பூராகவும் விற்பனையாகிறது.
சோல் ஏஜண்டுகள்:
ரெய்மூ சன்ஸ் லிமிட்டெட்,
88 A, மெயின் வீதி, கொழும்பு-11.
போன்: 4243, 5060
கல்கத்தாவிலுள்ள இந்தியன் என்ஜினியரிங் எக்ஸ்போர்ட் புரொமோஷன் கவுன்ஸிலால் நடாத்தப்படுவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தைத் தொலமி என்பார் தமரிக்கா என்று குறிப்பிட்டார்

## கி. மு. 3000 ஆண்டுகளுக்கு முன்பே தமிழர் நாகரிகம் காணப்படுகிறது

### மொகஞ்சதாரை, ஆரப்பா, அகழ்வுகள் காட்டும் சான்று இது

(பண்டிதர் கா. பொ. இரத்தினம்)

ருஷியத் தலைநகரான மோஸ்கோவில் நடைபெற்ற கீழை நாட்டியல் ஆராய்ச்சிப் புலவர்களின் 25-வது உலக மகாநாட்டில் (25 th International Congress of the Orientalists) இலங்கையின் பிரதிநிதியாகப் பங்கு பற்றிய பண்டிதர் கா. பொ. இரத்தினம் அங்கு ஆற்றிய சொற்பொழிவு இது. இச் சொற்பொழிவுத் தொடர் முடிவுற்றதும், பிரஸ்தாப மாநாட்டைப் பற்றிய விவரங்களையும் ருஷியாவில் கண்டு கேட்டு அறிந்த செய்திகளையும் தொடர் கட்டுரைகளாக எழுதப் பண்டிதர் இரத்தினம் ஒப்புக் கொண்டுள்ளார் என்பதைச் சுதந்திரன் நேயர்களுக்கு மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

—ஆசிரியர்.

இவ்வுலகில் ஏறக்குறைய ஈராயிரத்து எழுநூற்றுத் தொண்ணூற்றிரு மொழிகள் உள. இவற்றுள் பத்துலட்சத்துக்கு மேற்பட்ட மக்களாற் பேசப்படும் மொழிகள் இருநூறு; நாலு கோடிக்கு மேற்பட்ட மக்களாற் பேசப்படுவன இருபது. இந்த இருபது மொழிகளிலே தமிழும் ஒன்றாகும். எனினும் இது சமஸ்கிருதம் கிரீக்கு, இலத்தீன் என்பனவற்றைப் போன்ற தொரு உயர்தனிச் செம்மொழியாகவும் விளங்குகிறது. தமிழோடு பழமை பாராட்டும் மொழிகள் மாற்றமடைந்தும் இறந்தும் போய்விடத் தமிழ்மொழி மட்டும் இன்றும் இளமை யோடு இலங்குகின்றது. மொழிவரலாற்றிலே, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்ததுபோல இன்றும் குன்றாத இளமையுடன் வாழும் உயர்தனிச் செம்மொழிக்கு உதாரணமாகத் தமிழ் மொழியினை மட்டுமே குறிப்பிடலாம்.

#### தமிழகம்

இப்பொழுது தமிழ்மொழி தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் மட்டுமன்றி மலாயா, சிங்கப்பூர், பர்மா, பீச்சித்தீவுகள், மொறிசியசு, தென் ஆபிரிக்கா முதலிய இடங்களிலும் வழங்கி வருகிறது.

"தமிழகம்" என்னுஞ் சொல்லே தமிழ்வழங்கும் நாடுகளைக் குறித்தற்குப் பழந்தமிழ் இலக்கியங்களில் வழங்கப்பட்டுளது. இச்சொல்லை தொலமி என்பார், 'தமரிக்கா' எனக் குறிப்பிட்டனர்.

தமிழகத்திலே தமிழினைப் பேசி வாழ்ந்த மக்கள் தமிழர் எனப்பட்டனர். தமிழர்கள் இந்தியாவின் பழங்குடியினரோ பின்னர் வந்த ஆரியர்களையும் பிற சாதியினரையும் போல வேறிடத்திலிருந்து இந்தியாவுக்குட் புகுந்த குடியினரோ என்பது முன்னர் வாதத்துக்குரியதாயிருந்தது. ஐரோப்பிய அறிஞர்களும் இந்திய அறிஞர்களும் இது பற்றிப் பல கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார்.

#### இலெமூரியாக் கண்டம்

கல்டுவெல், கனகசபைப்பிள்ளை, மாசுமன், பேக்யூசன், கென்னடி, திருப்பதி, முதலானோர் தமிழர் தோன்றியவிடம் இந்தியாவுக்கு வெளியே எனக் குறிப்பிட்டனர். எனினும், அவர்களுடைய கொள்கைகள் பொருத்தமற்றனவெனவும் தமிழர்கள் தென்னிந்தியாவுடன் தொடர்ந்து பரந்திருந்த இலெமூரியாக் கண்டத்தையே தம் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் எனவும் பூரணலிங்கம் பிள்ளை முதலானோர் கூறியுளர். மொகஞ்சதாரை, ஆரப்பா முதலிய இடங்களில் எடுக்கப்பட்ட புதைபொருள்களும் பழந்தமிழ் இலக்கியங்களும் இவர்களுடைய கொள்கையை அரண் செய்கின்றன.

#### தமிழர்: தென்னிந்திய பழங்குடிகள்

இலெமூரியாக் கண்டம் இக்காலத் தமிழ்நாடுகளையுள்ளடக்கி இந்து சமுத்திரத்திற் பெரும் பகுதியிற் பரவியிருந்தது. தமிழ் இலக்கியங்கள் இக்கண்டத்தையே சம்புத்தீவு அல்லது நாவலந்தீவு எனக் குறிப்பிடுகின்றன என்பர். அடுத்தடுத்து உண்டான பெருங் கடல் கோள்களினால் இப்பரந்த கண்டம் மறைந்துபோக விந்தியமலைக்குத் தெற்கேயுள்ள தக்காணம் மட்டுமே எஞ்சிற்று. புவிவரலாற்றியல், மனிதரியல், உலக வரலாறு முதலிய துறைகளிலே தேர்ந்த பேரறிஞர்கள் இக்கடல்கோள்கள் நிகழ்ந்தனவென்பதை ஏற்றனர். பேராசிரியர் சேக்ஸ் மனித இனத்தின் தொட்டிலைப் பற்றிக் கொண்டுள்ள கருத்தும் தக்காணம் மிகப் பழையதொரு நிலப்பகுதியென்பதை வலியுறுத்துகிறது. இறைசிலி என்பார் தக்காணம் உலகின் மிகப் பழைய பூப்பகுதிகளில் ஒன்று என்றுரைத்துளர். இவற்றால், தக்காணம் பல்லாயிர ஆண்டுகளாக நிலைத்துள்ள பூப்பகுதி என்பது

(13-ம் பக்கம் பார்க்க


எனக்கு நெஸ்டோமால்ட் விருப்பம் அது எனக்கு நன்மை அளிக்கின்றது...






குழந்தைகள், வாலிபர், முதியோர் ஆகியோர் எல்லோருமே விரும்பி அருந்தும் இந்த நெஸ்டோமால்ட் அபார நன்மை அளிக்க வல்லது. சூடானதென்ன, ஐஸ் போன்ற குளிர்மையானதென்ன, இழந்த சக்தியை மீட்டுத்தரவும் ஊக்கமூட்டவும் சுவை நிரம்பிய நெஸ்டோமால்டுக்கு நிகர் எதுவுமே கிடையாது. நெஸ்டோமால்டில் ஒரு ஆச்சரியமென்னவென்றால், உங்களுக்கு நன்மையானவையாவுமே அதில் அடங்கிருப்பது தான். இத்தனைக்கும் அதன் சுவை ஒரு தனி ரகம்.

நெஸ்டோமால்ட் ஒரு உன்னத பால் ஆகாரம் இது. மால்ட்டட்பார்லி மற்றும் கோதுமையுடன் முழுப்பாற்சத்துகளை ஒன்றுசேர்த்து கவனமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு உற்பத்தியாகும். இதில் விட்டமின் A, B1, மற்றும் E அதோடு கல்சியம், மக்னீசியம் ஆகியவற்றின் பெருமதியான ஓர் டானிக் பொஸ்பேட்டுகள் மற்றும் ஒவ்வொரு அவுன்ஸ் பவுடருக்கும் 137 யேனிக விட்டமின் D சத்துக்கள் உள்ளன;

தயாரிப்பாளரும் உத்தரவாதமளிப்போரும்

நெஸில்ஸ்

சாம்பிள் இலவசம்

நெஸ்டோமால்ட் சாம்பிள் ஒன்றைப் பெறுவதற்கு தபாற்செலவுக்காக 25 சத முத்திரையுடன் உங்கள் பெயரையும் விலாசத்தையும் எமக்கு எழுதி அனுப்புக.

நெஸில் புரொடக்ட்ஸ் (சிலோன்) லிமிட்டெட் தபாற் பெட்டி 189, கொழும்பு

நெஸ்டோமால்ட்

விட்டமின் D அடங்கியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடுவில் பிரதிநிதிக்கு கூட்டுறவாளர் வரவேற்பு



வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமா அதிகாரசபை அங்கத்தவர்களும் சமாச ஊழியர்களும் தங்கள் அதிகாரசபை அங்கத்தவருள் ஒருவரான திரு. வி. தருமலிங்கம் உடுவில் தொகுதி பாராளுமன்ற பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டதையிட்டு சென்ற 12—9—60-ல் அவருக்களித்த ஒரு தேநீர் விருந்துபசாரக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட படம். விருந்தில் வடமாகாண அரசாங்க அதிபர் திரு. ஸ்ரீகாந்தாவும் கலந்து கொண்டார்.

மேற்படி சமாசத் தலைவர் முதலியார் வை. மகேசன் திரு. வி. தருமலிங்கத்தை வரவேற்றுப் பேசுகையில் அவரின் சமூக சேவையைப் பாராட்டினர். திருவாளர் வி. தருமலிங்கம் இளம் பிராயத்திலேயே சமூக சேவையில் ஈடுபடாதிருந்திருந்தால் இன்று அவர் வாழ்க்கைக்குப் பெரும் வருவாயைக் கொடுக்கக்கூடிய ஒரு பெரும் உத்தியோகம் வகித்திருப்பார் என்று மேலும் கூறினர். விவசாயிகளின் நன்மையைக் கருதி சமாசத்தின் முன்னேற்றத்திற்காக பல துறைகளிலும் உழைக்கும்படி திரு. தருமலிங்கத்தை சமாசத்தின் பேரால் கேட்டுக் கொண்டார்.

திரு. பொ. சிவகுரு-காரியதரிசி பேசுகையில் காலஞ்சென்ற திரு வன்னியசிங்கம் அவர்கள் கோப்பாய்த் தொகுதிப் பிரதிநிதியாயிருக்கும்போது விவசாயிகளுக்காக உழைத்து அவர்களின் நன்மதிப்பைப் பெற்றது போன்று திருவாளர் வி. தருமலிங்கமும் விவசாயிகளுக்கு நன்மை செய்து அவர்களின் நன்மதிப்பைப் பெறுவார் என்பதில் ஐயமில்லையென்று கூறினர்.

சமாச ஊழியர் சார்பில் திருவாளர் க. பொன்னம்பலம், பிரதமலிகிதர் பேசும்போது, திரு. வி. தருமலிங்கம் சமாச ஊழியருக்கு என்றும் அன்பும் ஆதரவாயும் நடந்து கொண்டாரென்று கூறினர்.

சமாச தணிகாரி திரு. இ. பொ. தமாரசுவாமியும் திரு வி. தருமலிங்கத்தின் சேவைகளைப் புகழ்ந்து பேசினர்.

# சாம்பரிலிருந்து மீண்டும் உயிர்பெற்ற போலாந்து

## பிரதமர் சிரங்கோவிச்சிற்கு வரவேற்பு

போலாந்துப் பிரதமர் ஜோசப் சிரங்கோவிச் இம்மாதம் 27ந் தேதி இலங்கைக்கு விஜயம் செய்கிருர். மேற்படி விஜயத்தையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

போலந்தின் பிரதமரான ஜோசப் சிரங்கோவிச் 1911-ல் ஜனனமானர். மாணவராயிருக்கும்போதே சோஷலிஸ்ட் இயக்கங்களில் பங்குபற்றிய சிரங்கோவிச் சட்டத்துறையில் ஒரு பட்டதாரி. பத்திரிகைத் தொழிலில் இவருக்குப் பெரிதும் ஈடுபாடுண்டு. போலாந்துச் சோஷலிஸ்ற் கட்சியின் "முற்போக்கு" என்ற பத்திரிகையில் பெரிதும் பணியாற்றியுள்ளார்.

### யுத்த முனையில்

1933—37-ல் கம்யூனிஸ்ட் கட்சியின் இயக்கங்களில் பங்கு பற்றினர். 1939-ல் இரண்டாவது உலக மகா யுத்தம் ஆரம்பமானதும் தாய்நாட்டின் பிரஜைப் படையில் சேர்ந்து போர் புரிந்தார். யுத்தக் களத்தில் கைதாகித் தப்பியோடிய சிரங்கோவிச் ஜெர்மன் ஆக்கிரமிப்பாளருக்கு எதிராக இரகசிய இயக்கங்களை நடத்தினர். இறுதியில் 1941-ல் ஜெர்மன் இரகசியப் பொலிஸார் இவரைக் கைதாக்கிச் சிறையிலிட்டனர்.

### சிறையிலும் சேவை

சிறையிலிருந்த பொழுதும் வெளியேயுள்ள இரகசிய இயக்கங்களுடன் தொடர்பு கொண்டு, யுத்த முயற்சியில் தொண்டு புரிந்தார். பல யுத்தக் கைதிகள் தப்பியோடி, வெளியிலிருந்து பணி புரிய உதவினர். 1945-ல் சோவியத் துருப்புகள் போலந்தை விடுதலை செய்ததும் சிறையிலிருந்து விடுதலையானர், 1946-ல் மந்திரிசபையில் இடம்பெற்று 1954-ல் போலாந்தின் பிரதமரானர்.

இன்று எமது நாட்டிற்கு விஜயம் செய்யும் ஒரு தியாககுல வீரரை வரவேற்பதில் நாம் மகிழ்ச்சியடைகிறேம்.

சாம்பலிலிருந்து மீண்டும் உயிர் பெற்றது இவரின் தாய்நாடு!

### பெரிய நாடு

ஹிட்லர் போலாந்திற்குள் படையெடுத்தான். 1939-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3-ந் தேதி 2-வது உலக மகாயுத்தம் ஆரம்பமாயிற்று. இந்த யுத்தத்தில் போலாந்து இரண்டு தடவை யுத்தகளமாயிற்று. ஐரோப்பாவின் மத்தியிலிருக்கும் இந்நாடு அக்கண்டத்தில் எட்டாவது பெரிய நிலப்பரப்பைக் கொண்டது. கிழக்கில் சோவியத் யூனியனும் தெற்கில் செக்கோஸ்லோவாக்கியாவும் மேற்கு ஜெர்மனியும் வடக்கில் போல்டிக் கடலும் எல்லைகளாயிருக்கின்றன.



பிரதமர் சிரங்கோவிச்

### பொருள் அழிவும் உயிர் இழவும்

ஜெர்மனியின் அட்டூழியங்களினால் இந்த யுத்தத்தில் போலாந்து அடைந்த நிஷ்டூரம் கொஞ்சமல்ல, சுமார் 5½ லட்சம் கட்டிடங்கள் தரைமட்டமாக்கப்பட்டன. சுமார் 25 நூதனசாலைகள், 1000 தியேட்டர்கள், 1250 ஆஸ்பத்திரிகள், 6000 பாடசாலைகள் நிர்மூலமாக்கப்பட்டன. நாட்டிற்கு முன்னேற்றமளிக்கும் 6000 சட்டத் தொழில் நிபுணர்கள், 5000 ஆசிரியர்கள், பல்கலைக்கழகப்பேராசிரியர்கள், 6000 விஞ்ஞானிகள் 7500 டாக்டர்கள் ஆகியோரின் இரத்தத்தினால் போலாந்து செந்நிறமாகியிருக்கிறது. யுத்தகால வாழ்க்கைத்தர வீழ்ச்சியால் 10 லட்சம் மக்கள் நோய் நொடிகளால் வேறு உயிரிழந்திருக்கிருர்கள். நேரடி யுத்தத் தொடர்பற்ற காரணங்களால் உயிரிழந்த போலிஷ் தியாகிகளின் மொத்த எண்ணிக்கை 5½ லட்சம்! இவற்றுள், ஜெர்மனியரின் கோரச் சிறைகளில் படுகொலை செய்யப்பட்டவர்கள் மாத்திரம் 3½ லட்சம் பேர்! யுத்தம் ஆரம்பமாகுமுன், போலாந்தின் ஜனத்தொகை 3½ கோடியாயிருந்தது யுத்த முடிவில் 1946-ல், இது 2½ கோடியாக வீழ்ச்சியடைந்தது. 1958-ம் ஆண்டு புள்ளி விபரங்களின்படி இந்நாட்டின் ஜனத்தொகை இன்று 3 கோடி.

### சாம்பலிலிருந்து...

யுத்தமென்ற கோரச் சுடுகாட்டின் சாம்பலிலிருந்து இன்று போலாந்து மீண்டும் உயிர்பெற்று விட்டது. நாட்டின் உயிர் நாடியான தொழில் நுட்ப வல்லுநர்கள், என்ஜினியர்கள், ஆசிரியர்கள், விஞ்ஞானிகள், டாக்டர்கள் ஆகியோரை மீண்டும் பெருமளவில் உற்பத்தி செய்து இடிந்து சாம்பரான தொழிற்சாலைகள் உற்பத்தி சாதனங்கள் ஆகியவற்றை மீண்டும் 15 வருடங்களில் கட்டியெழுப்பி, இன்று போலாந்து உலக விவகாரங்களில் உன்னதஸ்தானத்தைப் பெற்று விட்டது.

### தியாக உழைப்பு

யுத்தத்திற்கு முன்பு பொருளாதாரத்துறையில் "மேற்கத்திய நாடுகளின் காலனி"யாக இருந்த போலாந்து இன்று வல்லரசுகள் பட்டியலில் இரண்டாம்

(12-ம் பக்கம் பார்க்க)


## அறிவித்தல்

செப்டம்பர் 26-ம் தேதி எமது ஊனுப்பிட்டியா ஆலை மூடப்பட்டிருக்கும் என்பதை எஸ்டேட் சுப்பிரிண்டென்டன்களுக்கும், பற்றுவாடா செய்யும் ஏஜன்ஸி வியாபாரிகளுக்கும் தெரிவித்துக் கொள்கிறேம்.

கொழும்பு
கொம்மேர்ஷியல் கம்பனி,
த. பெ. இலக்கம் 33,
கொழும்பு.



## தபாற் தந்தி தலைவர் நியமனம்

பரீட்சை ஜனவரி 1961.

இப்போட்டிப் பரீட்சையில் ஒரே முறையில் சித்திபெற்று அரசாங்க சேவையில் சேர வேண்டுமானுல், எமது பரீட்சைத் துணை நூல்களை வாங்கிப் படியுங்கள். பரீட்சைக்கு வரக்கூடிய வினு விடைகளை மட்டுமன்றி, பரீட்சைக்கு எப்படி விடை எழுத வேண்டும் என்னும் விளக்கவுரைகளையும் கொண்டன.

- தமிழ்ப் பாஷை
- பொது விவேகம்
- சரித்திரம்
- ஆங்கிலம்
- எண் கணிதம்
- பூமிசாஸ்திரம்
- பொது அறிவு
- 101 நவீன வியாசங்கள்

ஒவ்வொரு புத்தக விலை ரூபா 5-00.
தபாற் செலவு 35 சதம். வி. பி. பி. கிடையாது.

இலவச விபரங்களுக்கு:
அற்லஸ் ஹோல், 723, மருதானை, கொழும்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாம்பு வகைகள்:

# மக்களை விழுங்கும் மாபெரும் பாம்பு

விஷ வைத்தியர்
க. சிற்றம்பலம்

(4)

### மண்ணுளிப் பாம்பு

இது குப்பை கூளங்கள், இலைச் சருகுகள், மரப்பட்டைகள், மணல் நிலங்கள், சுவர் வெடிப்புகளில் சீவிக்கும். 3 அங்குலம் முதல் 9 அங்குலம் வரை நீளமுடையது. மண் புழுப் போன்ற வளவளப்பான உருவமுடையது. இது தாக்கினால் கொடிய விஷமாகும், பனம் பாத்திகளில் அதிகமாகச் சீவிக்கும். இதற்குப் பல், தலை, கண், முதலியவை உண்டு. ஆனால் பார்வைக்கு தலையில்லாத உருவமாகத் தோற்றும். இதை அடித்துக் கொல்ல முடியாது. நெருப்பால் சுட்டால்தான் இறக்கும். இது நாம் நித்திரையாயிருக்கும்போது காதுத் துவாரத்துள் சென்றால் அபாயமாகும். சில சந்தர்ப்பங்களில் மூக்குத் துவாரங்களுக்குள் சென்று மூளையையும் தாக்கும். இது கொடிய செயலுடைய பாம்பாகும். இதற்குச் சிறுநீர் (மூத்திரம்) பொது மருந்தாக உபயோகிக்கிறார்கள்.

### கோடரிப் பாம்பு

இது வேலிகளிலும் பற்றைகள் செடிகளிலும் வசிக்கும். 1½ அடி முதல் 3 அடி வரை நீளமும் மெல்லியதாகவும் காணப்படும். இது மக்களைத் தாக்கும் போது வாயால் கடித்துக்கொண்டு உடலால் சுற்றிக் கொள்ளும். உதறித் தள்ளினால் தான் விடும். ஆனால் விரைவில் கடியாது. ஆட்களின் சத்தம் கேட்டவுடன் ஓடிப்போய்விடும்; சந்தர்ப்பத்துக் கேற்ப இதிலிருந்து தப்பிக் கொள்ளலாம். கடியுண்டால் வியர்வை அதிகமாக உண்டாகும். அதிகம் விஷமுடையதல்ல.

### நல்ல பாம்பு

பெயருக்கேற்ப பொருத்தமான நாகபாம்புச் சாதியாகும். "குலத்தளவேயாகுமாம் குணம்" என்பது போலப் பெயருக்கேற்ப நற்பண்புகள் உள்ளது. இது மற்ற நாகங்களைப்போலல்ல. இடத்துக் கேற்ப நிறம் மாறும் தன்மையுள்ளது. இது மனிதரைத் தாக்குவது குறைவு. தாக்கினால் கொடிய விஷமாகும். ஆனால் சிகிச்சையால் தப்பலாம். மந்திரம், மருந்து முதலியவற்றுக்கு அடங்கி நடக்கும். இதனை மந்திரத்தால் அழைக்கவும் முடியும்.

### நீர்ப்பாம்புகள்

இவைகளுக்கு விஷம் குறைவு. இவற்றில் கடல் பாம்பு உருவத்தில் பெரிதாக இருக்கும். இவை மூச்சடக்கிச் சீவிக்கும். மீன், இறால் முதலியவற்றை உண்டு சீவிக்கும். இது மீன் பிடிகாரரையும் தாக்கும். ஆனால் விஷமில்லை. பயத்தால் துன்பப்படுபவர்களும் உண்டு. வடலிகளில் வெள்ளங்களில் சீவிக்கும் நீர்ப் பாம்புகளும் உண்டு. அவற்றை நீர்க்கோத்தை என்றும் அழைப்பர். சீறும், ஆனால் கடிக்காது. கடித்தாலும் விஷமில்லை, கையால் பிடித்து விளையாடலாம். மக்கள் அவற்றை அடிப்பதில்லை. தன்னிஷ்டப்படி எங்கும் சென்று இரை தேடும். முட்டைகளை இட்டுக் குஞ்சு பொரிக்கும். வயல்களில் ஒதுக்கான இடங்களில் முட்டையிடும்; தண்ணீரில்லாத காலத்தில் இவை அழிந்து போகும்;

### மலைப்பாம்பு

இது எல்லாப்பாம்புகளிலும் உருவத்தில் பெரியது. மற்றப் பாம்புகள் மக்களைக் கடிக்கும். ஆனால் இது மக்களை விழுங்கும், மிருகங்கள், பறவைகளை விழுங்கிக் கொள்ளும். இதன் தோல், கொழுப்பு முதலியவை மருந்துக்குப் பாவிக்கப்படுகின்றன. வாத ரோகத்துக்கு இதன் எண்ணெய் உபயோகமானது. இதிலும் பலவகைகளுண்டு. ஆனால் ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டதாகும். இதைப்பற்றிப் பலர் பல கதைகள் சொல்வதைக் கேட்க ஆச்சரியமாக இருக்கும். மரங்களின் வேர் என்று பலர் எண்ணி ஏமாந்ததாகவும் கதைகளுண்டு.

இது வரையும் பாம்புகளின் வகைகளையும், அவை மக்களைத் தாக்கும் முறைகளையும், தப்பும் வழிகளையும், விஷம் மக்களைப் பற்றும் தன்மைகளையும் அதனால் தாக்கப்படும் உறுப்புக்களையும், மக்கள் செய்ய வேண்டியவற்றையும் ஆராய்ந்தோம். இனி நம்முடனிருந்து நம்மைத்தாக்கும் விஷ ஜெந்துக்கள் பற்றி அடுத்த கட்டுரையிற் காண்போம்.




## சைவபரிபாலன சபையும் பாடசாலைகளும்

மிகப் பழமை வாய்ந்த ஸ்தாபனமான சைவ பரிபாலன சபையின் நிர்வாகக்குழு 11-9-60-ல் நடந்த கூட்டத்தில் பின்வரும் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது:—

"பாடசாலைகளை அரசாங்கம் மேற்கொள்வது இந்துக்களின் மத கலாச்சார அபிலாஷைகளையும் சைவக் கல்வியையும் பாதிக்குமென்று கருதுவதால் சைவ பரிபாலன சபை நிர்வாகக் குழு அரசாங்கத்தின் இச்செயலைக்" கண்டிக்கிறது. பாடசாலைகளை அரசாங்கம் மேற்கொள்வதினால் அகற்ற நினைக்கும் குறைபாடுகளை வேறு தகுந்த சட்டங்கள் மூலம் நிவர்த்திக்க முடியும்.

எனவே, தற்போதைய கல்வி முறையைப் பரிசீலனை செய்யும் பொருட்டு ஆணைக்குழு ஒன்றை நியமிக்கும்படி இக்குழு வேண்டிக் கொள்கிறது. அத்துடன் மேற்படி விஷயமாகக் கல்வி மந்திரியையும் பிரதமரையும் பேட்டி காண சைவ பரிபாலன சபைத் தூதுகோஷ்டி ஒன்றிற்கு விரைவில் ஒரு சந்தர்ப்பம் அளிக்கும்படியும் இந்நிர்வாகக் குழு கேட்டுக் கொள்ளுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் தம்பி.. எந்தத் தொழிலையும் உயர்வாக மதிக்கும்படி வளர்க்கப்பட்டவர் வன்னியசிங்கம்

காலஞ்சென்ற அமரர் வன்னியசிங்கம் அவர்களைப் பற்றி அவருடைய மூத்த சகோதரியார் திருமதி இராஜ ராஜேஸ்வரி கணேசலிங்கம் "என் தம்பி வன்னியசிங்கத்தை உருவாக்கிய பரம்பரையும் சூழலும்" என்ற தலைப்பில் எழுதும் தொடர் கட்டுரையின் இரண்டாவது பகுதி இது.

(சென்றவாரத் தொடர்ச்சி)

போலிக் கௌரவத்தையும் ஆடம்பரத்தையும் பொருள் என மதியாமை எங்கள் தாயாரின் உதிரத்திலேயே ஊறிப்போன ஒரு குணம். தந்தையார்—இரண்டாம் மாமனும் கூட—சற்றே உல்லாசப்பிரியர். ஆனால் தாயாரும் மூத்த மாமனும் ஆடம்பரத்தை அறவே விலக்கியவர்கள். "இப்போதல்லவா இவர் பிரக்கிராசியார் மனைவி என்று பெருமை பாராட்டுகிறார். இவர் புல்லுக் கட்டும் இலைக் கட்டும் சுமந்தது நான் அறியேனோ' என்று "வசை" பாடியவருக்கு "பிரக்கிராசியார் மனைவியாக வாழும் இன்றும் நான் இலைக் கட்டும் விறகுக் கட்டும் சுமந்துதான் வருகிறேன். மாட்டுக்குத் தீனியும் வீட்டுக்கு விறகும் சுமப்பது வடுவா?' என்று பதிலளித்தவர் எங்கள் தாயார். இந்த மனப்பான்மை கருவிலேயே அமைந்துவிட்டது வன்னியசிங்கத்துக்கு. அவ்வப்போதிருக்கும் "பாஷனுக்கு" ஏற்றபடியோ, தேர்தல் சமயத்துக்கு ஏற்றபடியோ தேசிய வேஷம் போடுவர் சிலர். அந்த வேஷத்தினூடே உண்மை ஆசாமியை அறியும் திறமை திருவாளர் பொதுஜனம் அவர்களுக்கு உண்டு. உதட்டளவில் உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்யும் சில தொழிற் சங்கத் தலைவர்களைப் போலன்றி எந்தத் தொழிலையும் அகௌரவமென மனத்தால் மறந்தும் நினையாதபடி வளர்க்கப்பட்டவர் வன்னியசிங்கம்.

## பாமரருள்—ஒருவர்

சில "தலைவர்"களுடைய ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு அங்க அசைவும் அவர்கள் எங்கோ உயர் பதவிப்பீடத்திலிருந்து சிரமப்பட்டு இறங்கி வந்து சாதாரண மக்களுடன் சிறிது நேரம் வேண்டா வெறுப்பாக உறவாடத் திருவுளம் இசைந்தருளினமையைத் தெளிவாகக் காட்டிவிடும். வன்னியசிங்கமோ இயல்பாக எத்தொழிலையும் எவரையும் கீழாகமதிப்பதில்லை. வஞ்சனை, சூது, பொறாமை ஆகிய தீமைக் குணங்களையும் அவற்றை உடையவரையுமே கீழாக எண்ணுவது அவர் இயல்பு. என்றுமே ஆடம்பரமற்ற அமைந்த உடையும் வாழ்வும் வாய்ந்த அவரைத் தம்மில் ஒருவராகவே கருதிப் பொதுமக்கள் அன்பு செலுத்தினர்; அவரைத் தம் பிரதிநிதியாக உவந்து ஏற்றுப் போற்றினர்.

## அவர் தந்தை

தந்தையாரிடமிருந்து வன்னியசிங்கம் பிதுரார்ஜிதமாகப் பெற்ற குணங்களும் சாமானியமானவையல்ல. பொதுநலத்தில் கரிசனமும் ஈடுபாடும் தந்தையாரிடமிருந்தே பெறப்பட்ட அருங்குணங்களாம். தமக்கமைந்த நாளாந்த கடமைகளின் புகுந்து அடங்கி இருப்பது தாயாரிடமும் அவர் சகோதரரிடமும் நாம் கண்ட தனிப் பண்பு. அத்துணை ஒதுங்கி வாழ்வார் பிறரை உலகில் காண்டல் அரிது. தந்தையார் தான் பொதுக் கூட்டங்களுக்கோ கோவில் திருவிழாக்களுக்கோ போய் கலந்துகொள்வார்; உற்றார் உறவினர் அயலார் நண்பர்களது மங்கள நிகழ்ச்சிகள் கொண்டாட்டங்களிற் சமுகந் தந்து பங்குகொள்வார்; இழவிலும் துக்கம் விசாரித்து துன்பத்திலும் பங்குகொள்வார்.

## ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்

அக்காலத்தில் சட்டசபை அங்கத்தினராக வடமாகாணத்துக்குப் பிரதிநிதித்துவம் வகித்த சேர் பொன். இராமநாதனவர்கள் அத்தி பூத்தாற்போல் தம் தொகுதிப் பிரமுகர்களை அழைத்து நடத்தும் அரசியல் ஆலோசனைக் கூட்டங்களுக்கும் அவரது அழைப்பை ஏற்றுச் சமுகமளிப்பார். பத்திரிகைகளுக்கு விஷயதானம் செய்வார். ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் நிறுவப்பட்டபோது அதற்கு அடிநிலையிட்டவர்களில் எங்கள் தந்தையாரும் ஒருவர். பல ஆண்டுகள், குறித்த சங்கத்தின் உபதலைவராகவும் பரீட்சகருள் ஒருவராகவும் தொண்டு புரிந்தார். தெல்லிப்பழைக் கிராமச் சங்கத்தின் தலைவராகவுமிருந்தார். சிலகாலம் சுற்றுப்புறக் கிராமங்களின்—விசேஷமாகக் கீரிமலையின்—பொதுநலப் பணிகளில் ஈடுபட்டார்

## ஒன்பது வயதில் இந்திய ஞானம்

சிறு வயதிலிருந்தே வன்னியசிங்கம் பொது விஷயங்களில் ஈடுபாடு உடையவராக இருந்தார். மகாத்மா காந்தி முதல் முறையாக இந்தியாவில் ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்தபோது வன்னியசிங்கத்துக்கு வயது ஏறக்குறைய ஒன்பது இருக்கும். ஒன்பது வயதுச் சிறுவனே ஆனாலும் அந்த இயக்கத்தின் பெரிய நிகழ்ச்சிகள், இயக்கத்தைச் சேர்ந்த பிரமுகர்களது பெயர்கள் எல்லாம் தெரிந்து வைத்திருந்து உடன் பிறந்தவரான எங்கள் மூவருக்கும் கூறுவார். அந்த இயக்கத்துக்கு உயிரும் சக்தியும் ஊட்டி வந்த தேசியப் பாடல்களையும் பாடிக் காட்டுவார். எப்போதுமே கலகலப்பாகப் பேசுவது அவர் சுபாவம். அவருக்கு இரண்டு வயது பெரியவளாக இருந்தும், இராமநாத வித்தியாலயத்தில் கற்று வந்த நான் அவர் மூலம்தான் இந்திய சுதந்திரப் போராட்டத்தைப்பற்றி முதலில் அறியலானேன். இந்த விஷயங்களைப்பற்றிச் சகோதரிகளுக்கும் தமக்கு ஆறு வயது சிறியவரான தம்பிக்கும் சொல்லிக்கொடுப்பதில் அவருக்கு வெகு பிரியம். பெரிய சொற்பொழிவுகளே ஆற்றிவிடுவார். பல்முறை தாய் தந்தையர் அவரது பேச்சுக்களை நிறுத்திப் பள்ளிப் பாடங்களைப் படிக்கும்படி கூப்பிட்டு உட்கார வைப்பதுண்டு.

## போராட்டத்தில் கரிசனை

என்றுமே வார்த்தைகளை அளந்துதான் பேசும் சுபாவமுள்ள மற்றத் தம்பியை ஆழ்ந்த அறிவுடையவர்

திருமதி இராஜ ராஜேஸ்வரி கணேசலிங்கம்
B. A (Hons), (Lond), M. Litt

எனக் கணித்தார்கள்; மதித்தார்கள். ஆனால் எல்லாருக்குமே எவருடனும் கலகலப்பாகப் பேசிப் பழகும் சுபாவமுடைய வன்னியசிங்கத்திடமே சற்று அதிகப் பிரியம் எனலாம். இன்றும் நிலைமை அதிகம் மாறவில்லை, பொதுமக்கள் தம் இதயபூர்வமான அன்பை ஆராமையுடனேயே வன்னியசிங்கத்துக்கு அளிக்கின்றனர்.

இந்திய சுதந்திர இயக்கமும் வளர்ச்சியடைய வன்னியசிங்கமும் வளர்ந்து வந்தார். அந்த இயக்கத்தினதும் அதன் அடிப்படைக் கொள்கைகளிலும் அவருக்கு அக்கறையும் பற்றும் கூடவே வளர்ந்து வந்தன.

## தாயாரின் பழக்கம்

கண்ணோட்டமும் பிறருக்கு உதவி மகிழும் தன்மையும் தந்தையாரிடமிருந்து தனியுரிமையாக அவர் பெற்றவை. நிதி வேண்டுவோர் எமது தாயாரிடமும் அவர் சோதரிகளிடமும் அது தப்பாமற் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் அவர்களை அணுகுவாராம். அவர்களிடம் உதவியோ கண்ணோட்டமோ எதிர்பார்ப்பவர்களுக்கு ஏமாற்றம்தான் காத்திருக்கும். ஏவற் சுற்றத்தாருக்குங்கூட அவரவர் செய்த சிறு உதவிகளுக்கும் தேவைக்கும் ஏற்ப அளந்தே பொருளுதவி செய்வார் தாயார். அங்கவீனருக்கும் நோய்ப்பிணியாளருக்கும் தமது பொருள் வசதிக்கு ஏற்ப உதவுவார். அங்கவீனர் என்று பொருள் உதவப் பெற்றவர் மது, அபின், கஞ்சாப் பழக்கமுடையவர் என்று பிறகு அறிந்து அவ்வுதவியை நிறுத்தியதும் உண்டு. இத்தகைய அனுபவங்களால் பாத்திரமறிதல் ஒரு பெரும் பிரச்சினையாகிவிடும். குறிபெதிர்ப்பையாகக் கொடுத்தல் வாங்கல் செய்வதும் மிகக் குறைவு. கடும் நட்பு பகை காட்டும் என்பதைக் கடைப்பிடித்து எவரோடும் இழைந்து பழகுவதில்லை. எவரிடமும் உதவி பெறுவதும் குறைவு; எவருக்கும் உதவி அளிப்பதும் குறைவு. தாயார் வழிவந்த இந்தச் சுபாவமே மற்ற மூவரிலும் படிந்திருப்பதாக எனக்குத் தோன்றுகிறது.

## "பழகின தோஷம்"

ஏவற் சுற்றத்தார்க்குப் பொருளுதவும் பொறுப்பை முழுதும் தம்மிடமேவிட்டு வெறுமனே முகமன் பேசிப் பொருள் உதவி பெற வருவோர்க்கெல்லாம் பொருளுதவி செய்வதாகத் தந்தையாரைக் குறை கூறுவார் தாயார். பாத்திரமறிதலில் அவ்வளவு கண்டிப்பு இல்லாமையால் தந்தையாரது ஈகை சத்பாத்திரமல்லாதவரிடமும் சேரும். பொதுநலப் பணிகளுக்கென்று அளிக்கும் பணம் அப்பணிகளுக்கே போய்ச் சேர்ந்திருக்கலாம்; அவ்வாறு சேராமல் திடீர்தன்ட வந்தவரது வயிற்றை நிரப்பவும் போயிருக்கலாம். கொடுத்த பொருள் எவ்வகையில் செலவாகிறது என்பதை ஆராய மாட்டார்; அதுபற்றிக் கவலைப்படமாட்டார் தந்தையார். "பழகின தோஷம்", ஒன்றுக்காகவே—வேறு காரணம் எதுவும் இன்றி உதவி கேட்பவருக்கு மறுக்காமல் பொருள் உதவி செய்வதுமுண்டு. தந்தையார் தமது நன்மைக்காக வாய்மை தவறியதாக நான் கேட்டதில்லை; தம்மைச் சார்ந்தவரது நன்மைக்காக வாய்மை தவறியும் சார்ந்தவருக்கு உதவியதாகக்கேள்விப்பட்டிருக்கிறேன். வாய்மையினும் கண்ணோட்டத்தைப் பெரிதாக மதித்து நடந்திருக்கிறார் தந்தையார்.

## தன்னுதவியும் பிறருதவியும்

தந்தையாரது சுபாவம் தாயாரது சுபாவம் இரண்டும் ஒன்றையொன்று நிரப்புமளவில்—ஒன்றையொன்று மட்டுப்படுத்திச் செப்பம் செய்யுமளவில்—வன்னிய சிங்கத்தின் சுபாவத்தில் கலந்து விளங்கின. பிறருக்கு உதவுவதில் மகிழ்ச்சி கண்டார் வன்னியசிங்கம். கொடுப்பதற்காகவே வாங்கினர் என்று பண்டைக்கால வள்ளல்களைப் புகழ்வர் பாவலர். அதுபோல, பலரது உதவியையும் பெற்றால் தான் பலருக்கும் உதவுவதும் சாத்தியமாகும். வன்னியசிங்கம் பலரோடும் பழகினர். பிறர் உதவியையும் மறுக்காமல் ஏற்றார்; பற்பலருக்கும் உதவினர். பெரும்பாலும் பாத்திரமறிந்தே, நேர்மை வாய்மை தவறாமலே உதவி வழங்கினர்.

## தந்தையாரின் சட்ட வன்மை

நுண்மாணுழை புலமும் கூரிய மதியும் தந்தையாரிடமிருந்து அவருக்குக் கிடைத்த அரிய செல்வங்கள். சிவில் (Civil) வியாச்சியங்களுக்கு முறையீட்டுப் பத்திரம் தயாரிப்பதில் ஒப்புயர்வற்ற திறமையுடையவராக விளங்கியவர் தந்தையார். பிறிதோர் சொல் அச்சொல்லை வெல்லும் சொல் இன்மையறிந்து, தமது கட்சியை ஏதுக்கள் சான்றுகள் காட்டி நிறுவி, முறையீட்டுப் பத்திரம் எழுதிவிட்டாராகில், வழக்கு வெல்லும் வேலையில் முக்கால் வாசி முடிந்துவிடும். சாட்சிகளின் வாக்குமூலம் மற்றக் கால் பங்கு. நோயாளிபோல நீதிமன்றங்களுக்குப் போவதை நிறுத்திய பிறகும் பெரிய வழக்குகளுக்கு அவர் கைப்பட முறையீட்டுப் பத்திரம் தயாரிப்பிக்கக் கட்சிக்காரர்களும் நியாயவாதிகளுமாக அவரைத் தேடி வருவதுண்டு. சாட்சியத்தில் மாறுகொளக் கூறல் முதலிய குற்றங்கள் ஏற்படுமளவுக்கு சாட்சிகளை உருட்டி மிரட்டித் திணறடிப்பதாலும் வாயாடித்தனத்தாலும் வெற்றிபெறுதற்குரிய (கிரிமினல்-Criminal) குற்ற வழக்குகளில் தந்தையார் சோபித்ததில்லை. வன்னியசிங்கமும் தந்தையாரைப் போலவே சிவில் வியாச்சியங்களிலேயே திறமையுடையவராக விளங்கினர்.

கல்லாமற் பாதி குலவித்தை என்பது பழமொழி. தந்தையாருக்கு முன் அவரது மாதாமகரும் தாய் மாமனும் பிரக்கிராசித் தொழிலில் பிரசித்திபெற்று விளங்கியவர்கள். நியாயவாதிகள் பரம்பரையில் உதித்த வன்னியசிங்கத்துக்குச் சிறு வயது முதற்கொண்டே தந்தையார் வழக்குகளை அலசி ஆராயும் வகைகளையும் தமது வாதத்துக்கு அரண் கோலும் முறைகளையும் கையாளும் யுக்திகளையும் அவதானிக்கவும் சாத்மித்து (Assimilate) க்கொள்ளவும் வாய்ப்பு இருந்தது.

## கிரிமினல் வழக்கும் சிவில் வழக்கும்

தர்க்கநூலோர் பிறர் கட்சிகளை (பரபக்கங்களை) யெல்லாம் தவிடுபொடியாக்கிவிட்டு, தன் கட்சியை (சுபக்கமாக) எதையும் கூறி நிறுவாமலே தான் வெற்றிபெற்றுவிட்டதாகக் கருதி இறுமாப்பதை இடக்கு என்பர். இப்படி இடக்குப் பேசும் திறமை கிரிமினல் வழக்குகளில் எதிர்பக்க நியாயவாதிக்கு வெற்றிதரப் போதுமானது. சந்தேகத்துக்கு இடமிருந்தால் எதிரிக்கே சாதகமாகத் தீர்ப்பு அமைய வேண்டும் என்ற விதி எதிர்த்தரப்பு வக்கீலின் வேலையைச் சுலபமாக்கி விடுகிறது.

(12-ம் பக்கம் பார்க்க)



[illegible] "பாரத சபாடிகளுடன்" [illegible] அமரர் வன்னியசிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1960 செப்டம்பர் மாதம் 25-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183.

# இலங்கையில் முதல்முறையாக அமுலாகும் தொழில்வரி

## இராணி அப்புக்காத்துமாருக்கு வருடம் ரூபாய் 10,000

## நிதியமைச்சர் பண்டாரநாயகாவின் வரவு செலவுத்திட்டம்

செப்டம்பர் மாதம் 15ந் தேதி "வன்மை நிறைந்த இளம் நிதியமைச்சர்" திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். மேற்படி திட்டத்தின் சுருக்கம் பின்வருமாறு:-

1960-61 மதிப்பீட்டின் படி வசூலிக்கப்படும் வருமான வரியில் மேலதிகமாக 15% அறவிடப்படும். 100 ஏக்கர் நிலத்துக்கு மேல் வைத்திருப்பவர்கள் ஒவ்வொரு ஏக்கருக்கும் வருடத்திற்கு ரூபா 15-00 வரி செலுத்த வேண்டும். கம்பனிகளில் பங்குதாரர்களாயிருப்பவர்களிடமிருந்து ஒவ்வொரு ரூபா 10 000த்திற்கும் ரூபா 50-00 வசூலிக்கப்படும். ஆனால் அரசாங்க கூட்டுத் தாபனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், இன்னும் சில அனுமதி பெற்ற கைத்தொழில்கள் ஆகியவை இவ்வரியிலிருந்து விலக்குப் பெறும்.

'வியாபார ஸ்தாபனங்கள் பதிவு செய்தல்' சட்டத்தின் கீழ் இலங்கையாளரிடமிருந்து ரூபா 1000மும் ஏனையவரிடமிருந்து ரூபா 250-ம் அறவிடப்படும். பிற நாட்டவர் 3 மாத காலத்திற்குமேல் விசாவில் நின்றால் வருடமொன்றிற்கு ரூபா 400 செலுத்த வேண்டும். ஆனால் அனுமதிபெற்ற அயல் நாட்டு மூலதனங்களில் அரசாங்க அல்லது உள்ளூராட்சி மன்றங்களிலும் பணிபுரிவோர் இவ்வரியிலிருந்து விதிவிலக்குப் பெறுவார்கள்.

மோட்டார் கார் லைசன்ஸ் கட்டணமாக மேலதிகம் ரூபா 25ம், வியாபார ஸ்தாபனங்களிலுள்ள டெலிபோன் கட்டணமாக வருடமொன்றிற்கு மேலதிகமாக ரூபா 250ம் செலுத்த வேண்டும். திறந்த கடிதங்களுக்குரிய 4 சதச் சலுகை வாபஸ் பெறப்படும். எந்தக் கடிதத்திற்கும் குறைந்த பட்ச முத்திரை 10 சதமாகவே இருக்கும்.

இவ்வருட வரி முறையில் புதுமையாக இடம்பெற்றிருக்கிறது தொழில் வரி. கைக்காரர்கள் வருடமொன்றுக்குச் செலுத்த வேண்டிய வரி ரூபா 250. கட்டட நிர்மாணிகள், ஆலோசனை என்ஜினியர்கள், ரூபா 1000; வருடம் 10 லட்சம் ரூபாவிற்கு மேற்பட்ட அரசாங்க கொந்தராத்துக்காரர்கள், ரூபா 2000; 10 லட்சத்திற்கும் 5 லட்சத்திற்குமிடைப்பட்ட ஒப்பந்தகாரர், ரூபா 1000; ஏனைய ஒப்பந்தக்காரர் ரூபா 500.

10 வருட அனுபவமுள்ள டாக்டர்கள், ரூபா 500; இதற்குக் குறைந்த சேவையிலுள்ளவர்கள் ரூபா 250; வைத்திய நிபுணர்களும் சுய தொழில் புரிய அனுமதி பெற்ற அரசாங்க வைத்திய நிபுணர்களும், ரூபா 5000.

பிரக்கிராசிமார் பதிவுக் கட்டணம் மேலதிகமாக ரூபா 20 5 வருடத்திற்குக் குறைந்து தொழில் பார்த்த அப்புக்காத்துமாருக்கு வரியில்லை; 5 வருடத்திற்கும் 10 வருடத்திற்குமிடைப்பட்ட அனுபவம் கொண்டவர்கள் ரூபா 50; 10 வருடத்திற்கு மேற்பட்டவர்கள் ரூபா 1000; இராணி அப்புக்காத்துமார், வருடம் ரூபா 10,000!

இவ்வரி விகிதங்களுக்குரிய சட்டங்கள் தயாரிக்கப்படும் பொழுது விசேஷ நிலைமைகளை அனுசரித்துத் தேவையானவர்களுக்கு நிவாரணம் காட்டப்படும்.

புதிய வரவு செலவுத் திட்டத்தில் பாராட்டக் கூடிய ஒரே வரி, 100 ஏக்கருக்கு மேலதிகமாக காணி நிலம் வைத்திருப்போருக்கு ஏக்கர் ஒன்றிற்கு ரு 15-00 விதம் விதிக்கப்பட்டிருக்கும் வரியாகும்.

ஒரு தனி மனிதனுக்கு 100 ஏக்கருக்கு மேல் எந்தக் காரணம் பற்றியும் நிலம் தேவையில்லை. பல நிலப் பிரபுக்கள் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களைப் பூதங்காத்தது போல் கட்டிக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். பல ஏக்கர்கள் தரிசு நிலமாகக் கிடந்தும் ஏழை எளிய மக்கள் குடிசை கட்டி வாழவும் அதைக் கொடுக்காமல், தாங்களும் பயன்படுத்தாமல், வெறும் வரட்டுப் பெருமை மட்டும் பேசிக் கொண்டு, வைக்கோல் பட்டறை நாய் போல வாழுகிறார்கள் சில நிலச்சுவான்தார்கள்.

இப்படியான இரும்பு நெஞ்ச நிலப் பிரபுக்களைப் பாதிக்கும்வண்ணமாக நூற்றுக்கு மேற்பட்ட ஏக்கருக்கு வரி விதித்ததை நாம் வரவேற்கிறோம். இதற்காகப் புதிய நிதி மந்திரியைப் பாராட்டுகிறோம். தரிசாய்க் கிடக்கும் நிலத்தைக் கணக்கிட்டு அதற்கு இன்னும் அதிகமாக வரி விதித்தாலும் அதை நாம் இரட்டிப்பு மடங்கு வரவேற்போம். இப்படியான வரி விதிப்பின் மூலம் நிலத்தின் விலை வீழ்ச்சியடைந்து, நிலமற்றவர்களுக்கு நிலம் கிடைக்க வழி பிறந்தால் அது நிலத்தை நம்பி வாழும் ஏழை மக்களுக்கு [illegible]

# செட்டியார் நட்டம் ஊர்மேலே

இலங்கையின் புதிய நிதியமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா ஸ்ரீமாவோ அரசாங்கத்தின் முதலாவது வரவு செலவுத் திட்டத்தைக் கடந்த வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

வரி வசூலிப்பு விஷயமாக அவர் கடைப்பிடித்துள்ள வழிவகைகள் இந்த நாட்டுக்குச் சற்றுப் புதுமையானவையாகவும், புரட்சியானவையாகவும் அமைந்துள்ளன. பல பொருட்களின் மீது வரிகள் உயர்த்தப்படும் என்றும், பல போகப் பொருட்களின் இறக்குமதி தடுக்கப்படும் என்றும் வர்த்தகர்களும் பொதுமக்களும் எதிர்பார்த்தார்கள். எல்லாரையும் ஏமாற்றி விட்டு புதுவகையான வரிகளைப் புகுத்தி விட்டார் புதிய நிதியமைச்சர்.

புதிய வரவு செலவுத் திட்டத்தைச் சாதாரண பொது மக்கள் 'நல்ல வரவு செலவுத் திட்டம்' என்று வரவேற்பதாகத் தெரிகிறது. பெரிய வர்த்தகர்களும், வியாபாரிகளும், அதிக வருமானமுள்ள தொழில் துறையாளர்களும, நிலப்பிரபுக்களும் வரவு செலவுத் திட்டத்தைக் கண்டிக்கிறார்கள் தங்களைத்தான் இந்த வரவு செலவுத் திட்டம் அதிகம் பாதித்து விட்டது என்று அவர்கள் குறைபடுகிறார்கள்.

'வரவு செலவுத்திட்டம், வரிகளைப் பொறுத்தவரையில் ஏழைப் பொதுமக்களைப் பாதிக்கவில்லை யென்பது ஓரளவு உண்மையான போதிலும், பொது மக்களுக்கு நன்மை பயக்கும் உருப்படியான காரியம் எதையும் சாதிக்கப் போவதாக அது உறுதியளிக்க வில்லை,' இவ்வாறு மற்றொரு சாரார் கூறுகிறார்கள். வளர்ந்து வரும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வரவு செலவுத் திட்டத்தில் எதுவித மார்க்கமும் வகுக்கப்படவில்லை யென்பதை அவர்கள் உதாரணமாகச் சுட்டிக் காட்டுகிறார்கள்.

புதிய வரவு செலவுத் திட்டம் பொது மக்களைப் பாதிக்கவில்லை யென்ற கூற்று முற்றும் சரியானதல்ல. பொது மக்களை நேரடியாகப் பாதிக்க மாட்டாது என்பதுதான் உண்மை; மறைமுகமாக அது பொது மக்களைப் பாதிக்கவே செய்யும்.

வரி விதிப்பதில் இரண்டு முறைகள் கையாளப் படுவதுண்டு ஒன்று நேரடி வரி விதிப்பு முறை (Direct Taxation) மற்றொன்று, மறைமுக வரி விதிப்புமுறை (Indirect Taxation) பிரஜையிடம் நேரடியாக வரித் தொகையை அறவிடுவது நேரடி வரியாகும் வருமான வரி, வீட்டு வரி, மோட்டார் வாகன வரி முதலியன இதற்கு உதாரணங்களாம்.

மறைமுக வரியை, பிரஜை 'வரி செலுத்துகிறோம்' என்பதைத்தான் நேரடியாக அறியாமலும், உணராமலும், அரசாங்கத்திற்குச் செலுத்துகிறான்.

ஒரு யார் வெள்ளைத் துணியை ஒரு வியாபாரி ரு 2-00-க்கு இறக்குமதி செய்ய முடிகிறது என்று வைத்துக் கொள்வோம். அந்தத் துணிமீது அரசாங்கம் எதுவித வரியும் விதிக்கா விட்டால் வியாபாரி அந்தத் துணியை ரு 2-10-க்கு விற்றுப் பத்துச் சதம் ஆதாயம் அடைவான். அந்தத் துணிமீது அரசாங்கம் 25 சதம் இறக்குமதி வரி விதித்தால், வியாபாரி அந்த 25 சதத்தை அரசாங்கத்துக்கு செலுத்திவிட்டு, அதைப் பொது மக்களிடமிருந்தே பெற்றுக் கொள்வான் அதாவது ரு 2-10-க்கு விற்ற துணியை ரு 2-35-க்கு விற்பான். ரு 2-35-க்குத் துணியை வாங்கும் பொதுஜனம் அந்தத் தொகையில் 25 சதத்தை அரசாங்கத்துக்கு வரியாகக் கொடுப்பதை உணராமலே கொடுக்கிறது. இதுவே மறைமுக வரியாகும்.

புதிய வரவு செலவு திட்டத்தில் தொழில் வரி விதிக்கப்பட்டுள்ளது டாக்டர்களும், வழக்கறிஞர்களும், மற்றும் சிலரும் தொழில் வரி கொடுக்க வேண்டும் என்பது விதி. அவர்கள் இந்த வரியைத் தங்கள் பழைய வருமானத்தில் இருந்தா கொடுக்கப்போகிறார்கள்? புதிய வாடிக்கைக்காரர்கள் அல்லது கட்சிக்காரர்கள் வந்ததும், வரியை மனதில் வைத்துக் கொண்டு, அவர்களிடம் மேலதிக கட்டணம் வசூலிக்கவே செய்வார்கள். அப்போது வரி செலுத்துபவர்கள் யார்? தொழில் அதிபர்களா பொது மக்களா?

தனிப்பட்ட வைத்திய மனைகளில் ஏற்கனவே நோயாளிகள் டாக்டர்களால் கொள்ளையடிக்கப்பட்டு வருகிறார்கள். தனிப்பட்ட வைத்திய மனைகள் அறவிடக் கூடிய கட்டணம் இவ்வளவுதான் என்று அரசாங்கம் உச்ச வரம்பு கட்டிக் கட்டுப்பாடுகளை எதுவும் கொண்டு வராமல் டாக்டர்களிடமிருந்து வரி கேட்பதால் மட்டும் பொதுமக்கள் தப்பிவிட முடியாது. டாக்டர்களும், வழக்கறிஞர்களும், வர்த்தகர்களும் பொதுமக்களிடம் பிடுங்கித்தான் தங்கள் வரித்தொகையைச் செலுத்தப் போகிறார்கள். எனவே முடிவில் பாதிக்கப்படப்போவது பொதுமக்கள் தாம் என்பதில் ஐயமேயில்லை.

'செட்டியார் நட்டம் ஊர் மேலே' என்று ஒரு பழமொழியுண்டு. பலசரக்கு மளிகை வைத்திருக்கும் செட்டியாருக்கு ஒரு பொருளில் நட்டம் ஏற்பட்டால் அவர் அந்த நட்டத்தைத் தாமே பொறுத்துக் கொள்வதில்லை. தம்மிடம் உள்ள இதர பொருட்களின் விலையை அற்பம் அற்பமாகக் கூட்டி, தமது நட்டத்தை ஊர்ப் பொது மக்கள் தலையில் சுமத்தித் தமது பணத்தை மீட்டுக் கொள்வதுதான் வழக்கம். இதனாலேயே மேற்படி பழமொழி வழக்கில் வந்திருக்கிறது. டாக்டர்களையும், வழக்கறிஞர்களையும், வர்த்தகர்களையும் பொறுத்த அளவில் இந்தப் பழமொழிதான் நடைமுறைக்கு வரப் போகிறது.

# அரசாங்கம் பாடசாலைகளைக்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று சொல்லி அங்குள்ள கல்வி வசதிகளைக் குறைக்க அரசாங்கம் முற்பட்டால் என்ன செய்வது? பிற்பகுதியின் தாழ் நிலையை உயர்த்துவதற்குப் பதிலாகத் தமிழ்ப் பகுதியில் உள்ள உயர் நிலையைத் தாழ்த்திச் சமன் செய்வது அரசாங்கம் ஒரு விசித்திரமான மேற்கொள்ளலாம் அல்லவா? பாடசாலைகளைத் தரத்தில் உயர்த்துவதை வரவேற்கலாம். தாழ்த்தும் நிலை வந்தால் அதை நாம் பொறுத்துக் கொண்டிருக்க முடியுமா? அரசாங்கத்தின் கையில் சிக்கிய பாடசாலைகளுக்கு இத்தகைய கதியும் ஏற்படலாம் என்று தோன்றுகிறது"

இவ்வாறு கூறிய அப் பிரமுகர் மேலும் தெரிவித்ததாவது:

"வடக்கு கிழக்கு மாகாணங்களிலும், அரசகரும மொழி என்ற போர்வையில் சிங்கள மொழியைப் போதிக்க அனுமதித்தால் தமிழ்பேசும் மக்கள் தன் தனித்தன்மையைப் படிப்படியாக இழந்து கால வரையில் நீர்கொழும்பு, சிலாபப் பகுதிகளைப்போல் சிங்களமயமாக்கப்பட்டு விடும். இந்தப் பேராபத்திலிருந்து தமிழ் பேசும் இனத்தைக் காப்பாற்ற வேண்டும்"

இவ்வாறு அவர் கூறி முடித்தார்.

## ஊடுவில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமரின் ஞாபகார்த்தத் திறப்பு விழிவு கொடுக்கும் செயலிது.

கடைசிப் பகுதியிலிருப்பது தற்கமைய வட்டார வித்தியாபதிக்கு ஏன் ஓர் அறிக்கை அனுப்பப்பட வேண்டும்? அவ்வறிக்கையில், பங்குபற்றிய மாணவர்கள், ஆசிரியர்களின் தொகை, பேச்சாளர்களின் பெயர்கள், நிகழ்ச்சிகளின் சுருக்கம் ஆகிய விவரங்கள் ஏன் கோரப்படுகின்றன என்ற கேள்வி எழுகின்றது

இவ்வறிக்கை அனுப்பப்படாவிட்டால் முகாமைக்காரர்களும், தலைமை ஆசிரியர்களும் கல்விப் பகுதியாரின் அதிருப்திக்கு ஆளாகி, நோமையற்ற, கடுமை வழிகளில் நடத்தப்படுவார்கள் என்பதுதான் இதன் அர்த்தமா?

இக்கடிதத்தில் மறைந்திருக்கும் பயமுறுத்தல் இறந்துபோன ஒருவருக்குக் கட்டாயத்தின்பேரில் அஞ்சலி செய்யும்படி கோருவதேயல்லாது வேறல்ல. காவிடுக

(9-ம் பக்கம் பார்க்க)

## அரசியல் வழிகாட்டிகள்

அரசாங்கம் பாடசாலைகளைக் கையேற்பதால் ஆசிரியர்களுடைய அரசியல் உரிமை பறிக்கப்பட்டு விடுமோ என்ற கவலையும் தெரிவிக்கப்படுகிறது. கிராமாந்தரங்களில் இன்று தமிழ் ஆசிரியர்கள்தாம் தமிழ் பேசும் மக்களுக்கு அரசியல் விழிப்பை யூட்டும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

கிராமச் சங்கம், அரியல் சபை, போன்ற ஸ்தல ஸ்தாபனங்களில் குடி இயல் தொண்டு புரிபவர்கள் பெரும்பாலும் ஆசிரியர்களாகவே இருக்கிறார்கள். பல அரசியல் கட்சிகளும் ஆசிரியர்களாலேயே இயங்கி வருகின்றன. இவர்களுடைய அரசியல் உரிமை அபகரிக்கப்பட்டால் கிராம மக்கள் தங்கள் அரசியல் வழிகாட்டிகளை இழக்க வேண்டியவர்களாவார்கள். ஜனநாயகம் தழைக்க வேண்டிய ஒரு நாட்டிற்கு இந்நிலை பெரும் குந்தகமானதாகும் என்றும் சுட்டிக் காட்டப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை

# அரசாங்கம் கையேற்பதற்கு ஆட்சேபனை

## ஹோமியோபதிக்கு ஆதரவளிக்க அரசாங்கம் ஆலோசனை

### சுகாதார அமைச்சர் ஜயசூரியா டாக்டர் மூர்த்தியிடம் தெரிவித்தார்

"ஒரே தொழில் புரியும் மக்கள் அனைவரும் ஒன்று கூடிச் சங்கரீதியாக இயங்கும் காலம் இது. தனிப்பட்ட மனிதனுடைய குரலைவிட சங்கத்தின் குரல் அதிக மதிப்புவாய்ந்தது. எனவே ஹோமியோபதியர்களும் ஒன்று கூடிச் சங்கரீதியாக இலங்க முடியுமானால் அதிக பலம்வாய்ந்தவர்களாக விளங்க முடியும். ஹோமியோபதியர்களின் குறை நிறைகளையும் கோரிக்கைகளையும் அரசாங்கமும் பொதுமக்களும் அக்கறையோடு செவிகொடுத்துக் கேட்கும்படி செய்ய முடியும். எனவே ஹோமியோபதியர்கள் தங்கள் சங்கத்தைப் புனருத்தாரணம் செய்துகொள்வது வரவேற்கத்தக்கதாகும்"

மேற்கண்டவாறு கடந்த வாரம் (13-9-60) கொழும்பு விவேகானந்த சபையில் நடைபெற்ற அகில இலங்கை ஹோமியோபதி டாக்டர்களுடைய சங்கத்துக்கு தலைமைதாங்கிப் பேசிய கும்பகோணம், ஹோமியோபதி இன்ஸ்ரிடியூட்டின் தலைவர் டாக்டர் வி. ஆர் மூர்த்தி கூறினார்.

பல ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்ட அகில இலங்கை ஹோமியோபதி வைத்தியர்கள் சங்கத்தைப் புனருத்தாரணம்செய்வதற்காகவும், டாக்டர் வி. ஆர். மூர்த்திக்குப் பிரியாவிடை அளிப்பதற்காகவும் மேற்படி கூட்டம் கூட்டப்பெற்றது.

#### சம்மேளனம்

இலங்கைக்கு விஜயம் செய்த டாக்டர் வி ஆர். மூர்த்தி இரண்டு வாரங்களாக இலங்கை முழுவதிலும் சுற்றுப்பிரயாணம் செய்து ஆங்காங்கே ஹோமியோபதி பற்றிச் சொற்பொழிவுகள் ஆற்றிவிட்டுத் தாயகம் திரும்பினார்.

யாழ்ப்பாணத்திலும், பதுளையிலும் ஹோமியோபதியர்களின் இரண்டு சங்கங்கள் அமைக்கப்பட்டிருப்பதாகவும், கொழும்பு சங்கமும் சேர்ந்து ஒரு ஹோமியோபதியர்கள் சம்மேளனமாக இயங்கலாம் என்றும் டாக்டர் மூர்த்தி ஆலோசனை கூறினார்.

#### அரசாங்க அங்கீகாரம்

தாம் இலங்கையின் சுகாதார அமைச்சர் திரு ஏ. பி. ஜயசூரியாவைச் சந்தித்துப் பேசியதாகவும், இலங்கை அரசாங்கம் விரைவில் ஹோமியோபதியர்களின் பிரச்னைபற்றி ஆலோசித்து அவர்களுக்கு அங்கீகாரம் அளிப்பதுபற்றி முடிவு செய்யவிருப்பதாக அவர் தம்மிடம் நம்பிக்கைகொள்ளும் அளவிற்கு அபிப்பிராயம் தெரிவித்துள்ளார் என்றும் டாக்டர் மூர்த்தி தெரிவித்தார்.

#### அறிக்கை சமர்ப்பிப்பார்

அத்தோடு, தாம் இந்தியா சென்றதும் இலங்கையில் ஹோமியோபதியின் எதிர்காலம் பற்றி ஒரு விரிவான அறிக்கையைத் தயாரித்து சுகாதார அமைச்சருக்கு அனுப்பி வைக்க ஒப்புக்கொண்டுள்ளதாகவும், அதில் இந்தியாவில் ஹோமியோபதியின் வளர்ச்சியை ஆதாரபூர்வமாக விளக்கி இலங்கையிலும், ஹோமியோபதிக்கு அரசாங்க ஆதரவு கிடைக்கும்படி வற்புறுத்தப் போவதாகவும் பலத்த கரகோஷத்தினிடையே மொழிந்தார் டாக்டர் மூர்த்தி. டாக்டர் என். வி. சத்தியாலயம், திரு. எஸ். டி. சிவநாயகம், டாக்டர் ஏ. இராமையா ஆகியோரும் பேசினர்.

அதன் பின்னர் அகில இலங்கை ஹோமியோபதியர்கள் சங்கத்தின் சார்பில் டாக்டர் மூர்த்திக்குச் சில அன்பளிப்புகள் வழங்கப்பட்டன. தொடர்ந்து சங்கத்துக்குப் புதிய உதியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர்: டாக்டர் என். வி. சத்யாலயம், துணைத் தலைவர்: டாக்டர் கே. கே கோபால்தாஸ், செயலாளர், டாக்டர் பி. ஐ. இம்மானுவேல், பொருளாளர்: டாக்டர் (செல்வி) ஏ. கணேசாள், டாக்டர்கள் ஏ. வி. கே. தோமஸ், எச். வி. வி. பீக்பேயர், ஆர். தேவதாஸ், டி. பொன்னுச்சாமி, எம். டானியல், திரு எஸ். டி சிவநாயகம் ஆகியோரைக் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

சங்கத்தின் காவலராக டாக்டர் மூர்த்தி ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப் பட்டார்.

## ஊ டுவில்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

லில் ஒப்பாரி வைப்பதற்குக் கூலிக்கு ஆள்பிடிப்பதிலும் பார்க்கக் கேவலமான செய்கை இது. இவ்வகையான கட்டாயத்தின்பேரில் மக்கள் தனக்கு அஞ்சலி செய்ய நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள் என்பதை திரு பண்டாரநாயகாவே அறிந்தால், இடங்கிலுள்ள அப்பெரியாரின் சடலமே துடிதுடிக்கும்!

அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்ற பின் நிகழப்போகும் சம்பவங்களுக்கு, இச்சுற்று நிருபம் ஒரு முன்னோடியாயமைந்தது என்று எடுத்துக்காட்டுகிறீர்களா? தேசிய கல்வித்திட்டம் என்பது இதுதானா? இதுதான் அந்தப் புனித திட்டமானால் சிந்தனை, செயல் ஆகிய சுதந்திரங்களுக்கும் தரமான கல்விக்கும் இந்நாட்டில் நாம் முழுக்குப் போட வேண்டியவர்களே; சுதந்திர வாழ்க்கைக்குப் பதிலாகக், கல்வித் துறையில் நாம் யதேச்சாதிகாரத்தைத் திணிப்பவர்களே யாவோம்; அதிகாரத்திலிருப்பவர்கள் கயிறிழுக்க, பொம்மைக் கூத்தாடும் அடிமைகள் தான் எமது பாடசாலைகளிலிருந்து உற்பத்தியாவார்கள்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கலூரி நிர்வாகிகள் சார்பில் நான் இதை எழுதுகிறேன். ஒரு பாராளுமன்றப் பிரதிநிதி என்ற முறையில் இக்கடிதம் முற்றிலும் விவேகமற்றதும் கண்ணியத்திற்கு அப்பாற்பட்டதுமென்றே நான் கருதுகிறேன், பாடசாலை முகாமைக்காரர், மாணவர்கள் ஆகியோர் கண்களில் மாத்திரமல்லாது, இந்நாட்டின் பொதுமக்கள் கண்களிலுமே இவ்வரசாங்கத்தை மதிப்பிழக்கச் செய்யும் கடிதம் இது.

இச்சுற்று நிருபம் எவ்வளவு விரைவில் வாபஸ் பெறப் படுகிறதோ அவ்வளவு தூரம் இது சம்பந்தப்பட்ட அனைவருக்குமே நன்மை பயக்கும்.

இக்கடிதத்தின் பிரதியொன்றை நான் கௌரவ கல்வி மந்திரிக்கும் அனுப்பி வைக்கிறேன்.

வி. தர்மலிங்கம்

## அகில இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கம் தீர்மானம்

"உதவி நன்கொடை பெறும் மதஸ்தாபனப் பாடசாலைகளை அரசாங்கம் கையேற்பது என்று செய்யப்பட்டிருக்கும் முடிவு மொழியாலும் மதத்தாலும் சிறுபான்மையினராக உள்ள மக்களுக்குப் படுபாதகமாக அமையும் என்ற காரணத்தால் அரசாங்கத்தின் மேற்படி முடிவினை அகில இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கம் பலமாக எதிர்க்கிறது" என்ற சாரப்பட ஒரு தீர்மானம் கடந்த சனிக்கிழமை கொழும்பு விவேகானந்த வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற சங்கத்தின் 14-வது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

பிரஸ்தாப தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது அரசாங்கம் பாடசாலைகளை எடுப்பதை எதிர்த்து 87 வாக்குகளும் ஆதரித்து 14 வாக்குகளும் பதிவாகின. அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் சுமார் 3500 தமிழ் ஆசிரியர்களின் பிரதிநிதித்துவ ஸ்தாபனம் என்பது குறிப்பிடத்தக்கது.

வருடாந்த மாநாடு மாஜி தலைவர் ஆசிரியமணி கே. எல். இராஜேந்திரம் தலைமையில் ஆரம்பமாயிற்று. அமரர் வன்னியசிங்கத்தின் ஞாபகார்த்தமாக இரண்டு நிமிடம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

#### தமிழை வளர்த்தவர்கள்

மேல்மாகாண ஆசிரியர் சங்கக் காரியதரிசி திரு ஏ. நாகராசா வரவேற்புரை கூறுகையில், "பத்திரிகைகளோ, பாராளுமன்றப் பிரதிநிதிகளோ தமிழை வளர்க்கவில்லை. தமிழாசிரியர்களே தமிழை வளர்த்தார்கள். அரசாங்கம் பாடசாலைகளைக் கையேற்பதை ஆசிரியர்கள் எப்படி எதிர்க்க முடியும்? கோழியைக் கேட்டா ஆணம் காய்ச்சுவார்கள்?" என்று கூறினார்.

சங். சகோ டபிள்யு. ஏ. பீரிஸ் பொன்னுடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டார். அன்னாருக்கு ஆசிரியமணிப் பட்டமும் வழங்கப்பட்டது. அவர் சேவையைக் குறித்து திரு வி. என். பிள்ளை, வித்துவான் வேதநாயகம் ஆகியோர் பேசினர்.

பாடசாலைகளை அரசாங்கம் கையேற்கும் விஷயத்தில் காரசாரமான விவாதம் நடைபெற்றது. திரு டொ. சை. க. வணசிங்கா அரசாங்கம் பாடசாலைகளைக் கையேற்பதை வன்மையாக எதிர்த்துப் பேசினார்.

#### உத்தியோகத்தர் தெரிவு

மதிய போசனத்தின் பின் உத்தியோகத்தர் தெரிவு நடைபெற்றது.

தலைவர் பதவிக்கு திருவாளர்கள் கு. வி. செல்வத்துரை, த. ச. சண்முகநாதன் ஆகிய இருவரும் போட்டியிட்டனர். 80 வாக்குகளும் 44 வாக்குகளும் பதிவாகின. திரு கு. வி. செல்வத்துரை தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

பொதுச் செயலாளராக திரு ம. சிவநேசராசாவும் பொருளாளராக திரு வ. நடராசாவும் தெரிவுபெற்றனர்.

## அறிவித்தல்

மணியோடர், தந்தி மணியோடர், காசுக் கட்டளைகளின் மூலம் பணம் அனுப்பினைவப்பவர்கள், கீழ்க்கண்ட விலாசத்திற்கே அனுப்பி வைக்க வேண்டுமென இத்தால் அறிவித்துக் கொள்கிறோம்.

"மானேஜர்
சுதந்திரன்,
கொழும்பு"



இலங்கை வந்திருந்த கும்பகோணம் ஹோமியோபதி டாக்டர் வி. ஆர். மூர்த்திக்கு கடந்த வாரம் கொழும்பு விவேகானந்த சபையில் வைத்து அகில இலங்கை ஹோமியோபதி வைத்தியர்கள் சங்கத்தினர் ஒரு பிரியாவிடை அளித்ததோடு, அவர் தலைமையில் சங்கத்தினைப் புனருத்தாரணமும் செய்தனர். மத்தியில் மாலை அணிந்திருப்பவர் [illegible] ஹோமியோபதி [illegible] அமர்ந்திருப்பவர் சங்க[illegible]




சி. சி. சி. நெற்பயிர்

உரக்

கலவைகள்

உலகிலேயே மிகச் சிறந்தவை

கொழும்பு
கொமேர்ஷல்
கொம்பனி லிமிட்டெட்
(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது. அங்கத்தவர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)

தபால் பெட்டி 33, கொழும்பு.

CCC 926


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல்த் தோணி!

சிறுகதை — எழுதியவர்: "அமுதக்குமரன்"

கடல்த் தோணி ஒன்றை வாங்கி விட்டால், கணவன் கஷ்டம் கலங்கிக் கப்பலேற்றிவிடுவான் என்று கனவு கண்டாள் தங்கம்மா. அதன் பொருட்டுத் தன் தாலியையும் விற்றுவிட்டு 'அறுத்துக் கழுவின மீன்' மாதிரிக் காட்சி தர அவள் தயாரானள்.

ஆனல்—

ஒருவன் தனது ஊக்கத்தாலும் விடா முயற்சியாலும் வாழ்க்கையில் முன்னேற்றம் அடைவதைக் கண்டு பொருமைப் படாமல் இருக்க இந்த உலகத்தில் எத்தனைபேர் தயாராக இருக்கிருர்கள்?

அன்று மத்தியானம் கடலுக்குப் போன எல்லாத் தோணிகளுமே திரும்பி வந்து விட்டன— செல்லையாவின் தோணியைத் தவிர.

அது திரும்பவில்லை.

தங்கம்மா நெற்றிக்கு மேலே கையை வைத்துக் கடலை நோக்கிக் கண்ணேட்டம் விட்டாள். கண்ணுக்கெட்டிய தூரம்வரை எந்தத் தோணியுமே காணப்படவில்லை. அதற்கப்பாலும் கொஞ்சத் தூரம் வரை அது தெரியவில்லை. என்பதை அவள் எங்கே அறியப்போகிருள்! எத்தனை நேரம்தான் அவளும் கரையோரத்தில் கால் கடுக்க நின்று கொண்டிருக்க முடியும்?

மகன் மனோகரனும் எங்கு நின்றே ஓடிவந்து அம்மாவைக் கட்டிக் கொண்டான். அவன்தான் துடுக்கு நிறைந்தவன் ஆயிற்றே! அவளின் மனதிலே குடி கொண்டிருந்த கவலை அந்தச் 'சிறிசு'க்கு எப்படித் தெரியப் போகிறது. கடல் அலையை நோக்கி ஓடுவதும், அது அவனை நோக்கிக் கரைக்கு வரும்போது ஓடிப்போய் தாயாரின் சேலையைப் பற்றிக் கொள்வதுமாயிருந்தான்.

தங்கம்மாவுக்கு அப்போதிருந்த நிலைமையில் அவனது விளையாட்டைப் பார்த்து ரசிக்கவும் முடியவில்லை, பொறுமை படவும் இயலவில்லை. அவனைப் பார்க்கக் கோபம் கோபமாய் வந்தது அவளுக்கு. கால்கள் ஒரு பக்கம் வலிக்கத் தொடங்கின. கடற்கரைக்குக் கொஞ்சத் தூரத்தில் இருந்த நாவல் மரத்தின் கீழ் போய் அமர்ந்து கொண்டாள். மனோகரனும் தாயோடு ஒட்டிக்கொண்டான். தங்கம்மாவின் கண்கள் மட்டும் கடற் பரப்பில் மேய்ந்து கொண்டேயிருந்தன.

அவள் இடிந்து போய் உட்கார்ந்திருக்கிறாளே என்று காலம் தனது கடமையில் தவறி விடுமா, என்ன? மணி ஐந்தரையாகிவிட்டது. நேரம் செல்லச் செல்ல அவளது மன அமைதியை விழுங்கியவண்ணம் இருள் மூடிக் கொண்டு திரண்டது.

கடல் கலக்கமற்ற மனிதனைப்போல் எதுவித சலனமுமின்றிப் பரந்து கிடந்தது. மனோகரனும் நிர்விகாரமாய்த் தாயின் மடியிலே தூங்கிக் கொண்டிருந்தான்.

மனோகரனின் முதுகிலே மெதுவாகத் தட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தாள் தங்கம்மா. புற்றிலிருந்து எழும் ஈசல்களைப் போல அவளது மனதிலும் சந்தேகங்கள் ஒன்றன்பின் ஒன்ருய்த் தலையெடுத்து அவளுடைய வேதனையை அதிகப்படுத்தின. யோசித்து யோசித்து மனம் களைப்படைந்தது. அத்துடன் மத்தியானம் தொடக்கம் ஒன்றுமே சாப்பிடாததால் பசிக்களை வேறு. எல்லாமே ஒன்ருய்ச் சேர்ந்து கொண்டதால் சோர்வு அதிகரிக்கவே அப்படியே அந்த மரத்திலே சாய்ந்து கொண்டாள்.

●

அமிர்தகளி ஆற்றங்கரைப் படிக்கட்டில் நின்று கொண்டு ஆற்றுப்பக்கம் நோக்கினுல் 'எழுவான்கரை' தென்னை மரச் சோலையாகவே காட்சியளிக்கும். ஆதவன் எழுந்து வரும் திசையை "எழுவான் கரை" என்ற காரணப் பெயர் ஏற்பட்டு போலும்!

அதை ஒரு பக்கம் கடலும் மறுபக்கம் மட்டக்களப்பு வாவியும் சூழ்ந்து கொண்டு தங்கள் சொந்தக் குழந்தையைப் போல் பேணி தென்னை, நாவல் போன்ற மரங்கள் ஆகிய அணிகள் பூட்டி அம்மண்ணை அழகுறச் செய்திருந்தன. எழுவான் கரையை ஒரு பெரிய ஊர் என்று சொல்ல முடியாது போனாலும், ஒரு நீண்ட சிறிய தீவு என்று சொல்லலாம். அதையண்டி எப்படியோ குறையாமல் நூறு குடும்பங்கள் வரை வாழ்ந்து வந்தன. அவ்வளவு பேரும் மீன் பிடிப்பதைத் தொழிலாகக் கொண்டவர்கள்.

செல்லையாவின் தோணி இழுக்கப்பட்டிருக்கும் வேப்பு மர நிழலில் அவனது தோணியைக் காணவில்லையென்ருல், அதற்குப் பதிலாக ஒரு கூட்டம் அவனுக்காகக் காத்துக் கொண்டிருக்கும். எல்லோரும் அவனிடம் மீன் வாங்கும் வாடிக்கையாளர்கள். செல்லையா அங்குள்ள எல்லோருக்குமே தெரிந்த ஒரு பேர்வளி. அவன் எல்லோரிடமும் நாணயமாகவும், மரியாதையுடனும் நடந்து கொள்வதிலிருந்து சனங்களுக்கு அவனிடம் ஒரு தனி மதிப்பு.

இதைக் காணும் அவனது சக தொழிலாளிகளுக்கு அவன் மீது பொறாமை அதிகமாகிக் கொண்டே வந்தது; ஒருவன் பட்டினி கிடக்காமல் வேளாவேளைக்குக் கஞ்சியாவது குடிக்கும்போது அவனை உயர்ந்த படியில் உள்ள கற்றறிந்த 'நல்ல மனிதர்கள்' முன்னால் பார்த்து வயிறு எரியும் போது, பாவங்கள்! அதே மண்ணில் பிறந்த இந்தப் படியாத பாமர மக்களைக் குறை சொல்லி என்ன பயன்?

'கொடுவாய் மீன் சீஸன்' என்றொரு காலம் வரும். அந்தக் காலம் முற்றுகச் செல்லையாவின் வீட்டில் — ஏன் மீன்பிடிகாரர்கள் எல்லோர் வீட்டிலும் 'சித்திரை வருஷ'ப் பிறப்பாகத்தானிருக்கும். செல்லையாவுக்கு இந்த நாட்களில் 'இராவேலை'. அந்தி மயங்கும் வேளையில் தோணியில் ஏறிப்போய் விடுவான். காலையில் திரும்பி வரும் போது அவனது தோணி பாரம் தாங்க முடியாமல் ஆடி அசைந்து வந்து கொண்டிருக்கும்!

இது போல ஒரு 'கொடுவாய் சீஸனி'ல் உழைத்த உழைப்புத்தான் தங்கம்மாவின் கழுத்திலே மின்னிக் கொண்டிருந்த தாலிக் கொடி! அதுவுமில்லையென்ருல் "இராப்பகலாய் உழைக்கிருன் பாவி, பெண்சாதி எப்போதும் 'அறுத்துக் கழுவின மீன் போலதான்' இருக்கிருள்" என்று தங்கத்துக்கும் பழகிப் போன அந்தப் பொன்மொழியை அந்தத் தெருவிலுள்ள அத்தனை பெண்களுமே சொல்லியிருப்பார்கள்.

செல்லையாவும் என்னதான் நேரம் காலம் இல்லாமல் உழைத்தாலும் "மச்சம் பிடிப்பவனுக்கு மிச் [illegible] சாதிக்காரர்கள் சொல்லி வைத்த பழமொழி இவனளவில் சரியாய்த்தானிருந்தது.

●

செல்லையா குடிப்பை வாசலில் நின்ற தென்னங் கன்றிலே சாத்தி விட்டுத் 'தங்கம்' வலையைத் தைக்கவாக் குடிலே வைத்தவன் சோர்வுடன் பெருமூச்சொன்றை வெளியிலே தள்ளி விட்டுச் சுவரிலே சாய்ந்து கொண்டான்.

தங்கம்மா கணவனைக் கண்டதும் அடுக்களையிலிருந்து காப்பியுடன் வந்தவளுக்குக் கணவனின் முகத்தைப் பார்க்கப் பரிதாபமாய் இருந்தது. "ஏன் ஒரு மாதிரி இருக்கிறீங்க?" என்று அவனைப் பார்த்து கேட்டுக் கொண்டே காப்பித் தம்ளரைக் கொடுத்தாள்.

"என்ன மாதிரி...? ரெண்டு 'பிறை' முடிஞ்சாச்சு. ஒரு சதக் காசைக் கையாலே தொட்டு ரெண்டு மாசமாகுது" எல்லோரும் பாடும் பல்லவியை அவனும் பாடினான்.

"ம்......! அதுக்கென்ன செய்வது?" என்று சமாதானம் சொன்னவள் அவனுக்குப் பக்கத்திலேயே மணலில் உட்கார்ந்து கொண்டாள்.

"ராத்திரி முழுக்க அலைஞ்சன் கறியாவது பிடிக்கலாமென்று... ஒரு மச்சம்...? ச்சீ! என்ன பிழைப்பு!" செல்லையா அலுத்துக் கொண்டான்.

உண்மையிலேயே இரண்டு மாதங்களாக ஆற்றிலே உழைப்பு மிகக்குறைவுதான். அது செல்லையாவுக்கு மட்டும் அல்லவே! ஆற்றுப் பிழைப்புக்காரர் அத்தனை பேருக்கும் ஏற்படும் சிறிது காலத் தரித்திரம் அது.

"நாம மட்டுமா கஷ்டப் படுறம், நம்மட சாதிக்காரர்கள் எல்லோரும்தானே?" தங்கம்மா தத்துவம் பேசிக் கணவனைத் தேற்ற முயன்ருள்.

"எல்லாரையும் எப்படித் தங்கம் சொல்லலாம்? போய்ப்பார் கடலுக்குப் போகிறவனுகள் உழைக்கிற உழைப்பை!" அவன் முகத்திலே சோகம் தாண்டவமாடியது; ஏக்கம் துணை புரிந்தது.

"அதைப்பத்தி ஏன் பேசுறீங்க. நம்மிடம் என்ன கடல் தோணியா இருக்கு?" என்று தங்கம்மா கேட்டதும் செல்லையாவுக்கு என்னவோ போல இருந்தது.

"அதைத்தானே தங்கம் நானும் யோசிக்கிறேன். நேற்று உபபோடையில் ஒரு கடல் தோணியைப் போய்ப் பார்த்தன், தரா......! ஐந்நூறு ரூபாயாம், நம்மட தோணியையும் கொடுத்து ஒரு நூறு ரூபாயும் கொடுத்தா அதை வேண்டி விடலாம்," என்று ஆசை ததும்பக் கூறிய அவனது முகத்தை அந்நேரம் பார்க்க வேண்டுமே! அதை வாங்குவதற்கு அவனுக்கிருந்த பிரியத்தை அவனது முகம் நன்கு பிரதிபலித்தது.

அவன்தான் என்ன செய்வான்? குடியிருக்கும் வீடு வளவும் குழந்தைவேல் பரியாரியிடம் ஈட்டில் இருந்தது. யோசித்துக்கொண்டு இருந்தவளுக்கு மனதிலே ஏதோ பட்டிருக்க வேண்டும், திடீரென்று!

"ஏனுங்க, நம்மட கொடியை வித்துப் போட்டு வாங்கிறதில் என்ன?" பெரியதோர் வழியைக் கண்டு பிடித்து விட்ட களிப்பு அவளுக்கு; அமெரிக்காவைக் கண்டுபிடித்த கொலம்பஸ் எம்மாத்திரம்?

'சரீர்' என்றது செல்லையாவின் நெஞ்சில். ஏதோ கேட்கக்கூடாத ஒன்றைக் கேட்டு விட்டதாக ஒரு உணர்வு பிறந்தது அவனுக்கு. எனினும் அந்த உணர்ச்சியை அவன் முகத்திலே காட்டவில்லை. "பைத்தியக்காரி, அதொன்றுதான் 'கல்லுவ நெல்லு முன்னச்சாப்பட்டன்ற' கழுத்திலே தொங்கிக் கொண்டு இருக்கு. அதையுமா கழற்றப் போற?" என்று கூறிய அவன், முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டான்.

"இதென்ன பெரிசு, காசு கிடைச்சா இன்னொரு நேரம் செய்யவா ஏலாது!"

அவள் தந்திரமாகப் பேசினாள்.

"வேண்டாம் தங்கம்" என்று சொல்லும்போது அவனுக்குத் துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது.

கணவன்மாரைத் தங்கள் பக்கம் திருப்பும் ஜால வித்தையைப் பெண்கள் யாரிடம்தான் கற்றுக் கொண்டார்களோ! தங்கம் செல்லையாவைக் கெஞ்சி மிஞ்சிக் கரைத்து ஒருவாறு சம்மதிக்கச் செய்துவிட்டாள்.

'கடவுள் கண்வைத்தால் இந்தக்கொடி நாலு நாளைக் காசு' என்று எண்ணிய செல்லையாவும் ஒருவாறு ஒப்புக் கொண்டான்.

செல்லையா அன்றுடம் உழைத்துத் தனது வயிற்றை நிரப்பிக் கொள்வதைக் கண்டு தங்களது வயிற்றிலே புளியைக் கரைத்துக் கொள்ளும் கூட்டத்திலே சின்னத்துரை முதலாளி ஆள். செல்லையா கடல் தோணி வாங்கியதைக் கேள்விப்பட்ட அவனுடைய மனதிலே இவ்வளவு நாட்களாய் கிடந்து, குமைந்து, புழுங்கிக் கொண்டிருந்த பொருமைத்தணல் ஆத்திரம் என்னும் பஞ்சுடன் சேர்ந்து எரியத் தொடங்கியது.

அவன் நானூற்றி எழுபத்தைந்து ரூபாய் வரை கேட்டு விட்டு வந்த தோணியைச் செல்லையா ஐந்நூறு ரூபாய் கொடுத்து வாங்கி விட்டதை நினைத்தபோது செல்லையா மீது சின்னத்துரைக்கு எழுந்தது கோபம்.

சின்னத்துரையிடம் கடல் தோணி இல்லாமல் அல்ல. கடலிலே பிழைப்பு நடக்கும் இந்த வேளையில் இந்த தோணியையும் வாங்கிப் போட்டு விட்டால் கை வரண்டவர்களிடம் வாடகைக்கு விட்டே முதலை மீட்டுவிடலாமே. ஆனல் இடை நடுவில் ஒரு செல்லையா முந்தித் தனது திட்டத்தைக் கவிழ்த்து விடுவான் என்று அவன் எண்ணத்தைக் கண்டான்.

செல்லையாவின் கடல் தோணி அலைகளை அணைத்தவாறே மெதுவாக மிதந்து கொண்டிருந்தது. அதைத் தொடர்ந்து இன்னும் இல...

(13-ம் பக்கம் பார்க்க)

★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா

கண்ணைக் கவரும் வண்ணங்களிலும்

கருத்தைக் கவரும் வடிவங்களிலும் சிறந்த பாவனையிலும் உறுதியான சாயத்திலும்

முன்னணி வகிக்கிறது

லதா

கேம்பிரிக்

சட்டை, ஜாக்கெட், கவுன் பாவாடை இரவுடை முதலியவைகளுக்குச் சிறந்தது.

இலங்கை முழுவதிலுமுள்ள புடவை வியாபாரிகளிடம் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

குண்டன் மால்ஸ்,

26, கெய்சர் வீதி, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தும், எந்த நாட்டிலும் கிடையாதென்று கருதக்கூடிய வகையில் சிற்சில துறைகளில் ஆராய்ச்சி நிகழ்த்தத் திட்டம் போட்டிருக்கிறார்கள். ஒரு முழுப் பட்டினத்தையே தோண்டி ஆராய்ச்சி செய்யும் முயற்சி ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டது. இப்பட்டினத்தின் எல்லையுமோ சிறிதல்ல. தற்கால வாழ்க்கை மெல்ல மெல்லமாக அகற்றப்பட்டு, அனுராதபுரம் ஆராய்ச்சிப் பிரதேசமெனஒதுக்கப்பட்டு வருகிறது. அத்துடன் மத சம்பந்தமான வேறு சில நகரங்களும் ஆராய்ச்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாராய்ச்சியால் பழங்காலத்தைப்பற்றிக் கிடைக்கும் அறிவு ஏனைய துறைகளிலுள்ளவர்களுக்கும் உபயோகமாயிருக்கும்.

## நுண்கலை உத்தியோகஸ்தர்கள்

பிறநாட்டிலுள்ள பேரறிஞர்களிடம் புதைபொருளாராய்ச்சியில் விசேஷ பயிற்சி பெறும் எமது இளைஞர்களின் தொகை அதிகரித்துக் கொண்டே போகிறது.

முன்னாட்களில் நிர்த வசதியற்றிருந்தார்கள் எமது ஆராய்ச்சியாளர்கள். இப்பொழுதோ நிலைமை மாறியிருக்கிறது. புதுப்புதுச்சாதனங்கள் ஆராய்ச்சியில் கையாளப்படுகின்றன, முடிவெதற்கும் வராது ஒத்திவைத்தவிஷயங்களில், ஆவக்கம் மேலும் மேலும் பெருகிக்கொண்டேபோகிறது. முன்னாட்களில் பிறநாடுகளிலிருந்தே 'புதைபொருள் இரசாயனத்துறை'யில் உதவி பெற்று வந்தோம். இன்றோ இதற்கென ஒரு உத்தியோகத்தரை இங்கேயே நியமித்திருக்கிறார்கள்;

## பு. பொ. ஆராய்ச்சியும் தேசாபிமானமும்

புதைபொருள் ஆராய்ச்சி மக்கள் பொதுவாழ்விலும் ஒரு இடத்தைப் பெற்றுவிட்டது. புதைந்து கிடந்த நகரங்களிலிருந்து இன்று நாம் மீட்டெடுத்திருப்பவை உல்லாசப் பிரயாணிகளுக்கு நாம் பெருமையுடன் காண்பிக்கக்கூடியன. இந்தச் சின்னங்கள் இலங்கை மக்களின் உணர்ச்சிகளுடன் கலந்துறவாடித் தேசிய மனப்போக்கையும் தேசாபிமானத்தையும் ஊட்டுவனவாயமைந்துவிட்டன. அரசியலிலும்கூட புதைபொருள் ஆராய்ச்சித் துறை இடம் பெற்றுவிட்டது. இன்றேல் 'அனுராதபுரப் பாதுகாப்புச் சட்டம்'' பாராளுமன்றத்திற்கே வந்திருக்க முடியாது; பழம்பெரும் நகரங்கள் பக்திசிரத்தையான வைபவங்களுக்கு உரிய இடங்களாகத் தெரிந்திருக்கப்படவும் மாட்டாது.

## தேசிய ஒற்றுமை

எல்லா இன மக்களும், வித்தியாசம் பாராட்டாது சம உரிமையுடன் இந்தப் பழமைமிகு மாண்பில் பங்கு கொள்ளுகிறார்கள். புதைபொருள் ஆராய்ச்சித் துறை நிறுவப்பெற்று இன்று 70 வருடங்களாகி விட்டன. இந்தக் காலத்திற்குள் இலங்கையிலுள்ள பல்வேறு இன மக்களிடையே கூட்டுறவு உணர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது இந்த ஆராய்ச்சி. மக்கள் தாய்நாட்டிற்கு அளிக்க வேண்டிய காணிக்கை இத்தக் காணிக்கையை அந்தக் கூட்டுறவுணர்ச்சி இலங்கை மாதாவின் மக்கள் தம் உள்ளம் நிரம்பச் சமர்ப்பித்து விட்டார்கள்.

தமிழாக்கம்: செ. குமாரசாமி.

# இஸ்ரேலில் புதை பொருளாராய்ச்சி

## சின்னங்கள் எதுவும் வெளிநாடு செல்ல முடியாது

—o—

## புகைப்படங்கள் மாத்திரமே அனுமதிக்கப்படும்

நாகரிகத்தின் ஆரம்ப காலங்களில் உச்சநிலையிலிருந்த நாடுகள் மத்தியகிழக்குப் பிரதேசங்களிலுண்டு. எகிப்து, பாலஸ்தீனப் பிரதேசங்களில் நூற்றுண்டு காலமான ஆராய்ச்சிக்கு இடமிருக்கிறது. சமீபத்தில் 1948-ல் சுதந்திரம் பெற்ற இஸ்ரேல் அரசாங்கம் ஹிபிரேய மொழியை வளர்ப்பதிலும் யூத பக்கவின் புராதன மகத்துவத்தைத் துலக்குவதிலும் பெரும்பாடு படுகின்றது. இந்தப் பிரதேசங்களில் புதைபொருள் ஆராய்ச்சி நடத்துபவர்களுக்கு ஊக்கமளிக்கிறது. உலகின் பல பாகங்களிலுமிருந்து அறிஞர்கள் போய் ஆராய்ச்சி நடத்துகிறார்கள். இவர்களில் ஒருவர் அமெரிக்காவைச் சேர்ந்த எட்வின் லிங்க் என்பவர். சிசேறியா துறைமுகத்தில் நீருக்கடியில் ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தவர். கடலுக்கடியில் ஆயிரமாயிரம் ஆண்டுக்கு முந்திய பெரிய இராக்ஷஸ உருவமொன்றிருப்பதைக் கண்டு பிடித்திருக்கிறார். ஒரு புதைபொருள் ஆராய்ச்சியாளன் தன் வாழ்நாள் முழுவதிலும் பணியாற்றுவதற்கு வேண்டிய பொருட்கள் கிடைத்திருப்பதாகக் கூறுகிறார்.

### பிரமாண்டமான நூதனசாலை

மின்னஸொற் வாவிக் கடியில் இவர் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் மிகவும் அபூர்வமான மட்பாண்டங்கள் பலவற்றைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இவை ஒரு வள்ளத்தில் ஏற்றிய வண்ணம் புதைந்திருப்பதாக லிங்க் கருதுகிறார். மட்பாண்டங்களை விட கல்லால் ஆன நங்கூரங்கள், உலோகத்தால் செய்த யுதத கலக் கோடரிகள், வெவ்வேறு பல காலத்தைச் சேர்ந்த எண்ணெ விளக்குகள் ஆகியவை—ஒரு பிரமாண்டமான நூதனசாலையே நிரப்பக் கூடியளவு பொருள்கள் கிடைத்திருக்கின்றன.

இவற்றிலெதையும் லிங்க் தன்னாட்டிற்குக் கொண்டு போக முடியாது; இஸ்ரேல் இராச்சியத்தில் நூதனசாலைகள் கட்டப்பட்டு இவை அங்கேயே வைக்கப்படும். ஆனால் ஒவ்வொரு பொருளும் அடையாளம் துலக்கப்பட்டு, அட்டவணை தயாரிக்கப்பட்டபின் அப்பொருட்களைப் புகைப்படங்கள் எடுத்து, அவற்றை மாத்திரம் லிங்க் அமெரிக்காவிற்குக் கொண்டுசெல்ல அனுமதிக்கப்படுவர்.

ஒரு நாடு தன்னாட்டின் பழமையையும் பெருமையையும் எப்படிப் பேணிப் பாதுகாத்துக் கொள்ளுகிறது என்பது தெரிகிறதல்லவா? இலங்கைத் தமிழர்களின் 2000 வருடச் சரித்திரத்தின் பழமை, பெருமைக்குரிய சின்னங்கள் எங்கே? யார் இவற்றைத் தோண்டித் துலக்கப் போகிறார்கள்? எப்போது?


## சிங்கள நாவலுக்குப் பரிசு

இவ்வருடத்திய டொன் பெட்றிக் இலக்கியப் பரிசு "ஐந்து ஏக்கர்" என்ற நாவலை எழுதிய எம். இரத்னாயக்கா என்பவருக்குக் கிடைத்திருக்கிறது. ஒவ்வொரு வருடமும் சிங்களத்தில் சிருஷ்டிக்கப்படும் இலக்கியப் படைப்புகளில் சிறந்தவற்றிற்கு வழங்கப்படும். இப்பரிசின் தொகை ரூபா 1000/-

# திபெத்தில் சிங்கள ஓலைச்சுவடி

## மிகப் புராதனமானது என்கிறார், பிக்கு ராகுல

சிங்களத்தில் எழுதப்பட்ட மிகப்பழைய சுவடி எனக் கருதப்படும் ஓலை ஒன்று திபெத்திலுள்ள செயிஸ்கிய புத்த மடாலயத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இலங்கையில் அண்மையில் நிறுவப்பட்ட பௌத்த சர்வகலாசாலையான வித்தியாலங்கார பல்கலைக் கழகத்தில் பேராசிரியராயிருக்கும் ராகுல சங்கிரித்தியான என்பவர் இதைக் கண்டு பிடித்தார். இச்சுவடியின் புகைப் படமொன்றைப் பேராசிரியர் வித்தியாலங்காரப் பல்கலைக் கழகத்திற்குக் கொண்டுவந்து கொடுத்திருக்கிறார். இந்தச் சுவடி 13-ம் நூற்றுண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படுகிறது.

# நீங்கள் இல்லாவிட்டால்

நீங்கள் இல்லாத காலத்தில் உங்கள் குடும்பம் ஒதுக்கி வைக்கப்படலாம் என்ற எண்ணம்; குடும்பத்தின் வருங்காலத்திற்கு தகுந்த பாதுகாப்பளிக்கவில்லையே என்ற கவலை; மனதிலுள்ள பதை பதைப்பு—இவைதான் ஒவ்வொரு குடும்பஸ்தரும், ஏழையாயிருந்தாலும் சரி, பணக்காரராயிருந்தாலும் சரி, மனதை உறுத்தும் விஷயங்களாகும்.

அதிர்ஷ்ட வசமாக, கூட்டுறவு இன்சூரன்ஸ் அலுவலகம், ஒவ்வொரு பொலிசியையும் நிர்ணயிக்கும் பொழுது, உங்களை ஞாபகத்தில் வைத்துக் கொண்டது. குறித்த காலங்களில் சிறு முதலீடு, உங்கள் குழந்தைகளின் கல்விக்கும், குடும்பத்தின் வருங்கால தேவைக்கும் நிச்சயமான பாதுகாப்பு, ஆகியவைகளை ஒவ்வொரு சாதாரண மனிதனுக்கும் வழங்குகிறது.

வாழ்க்கை, நெருப்பு, ... பொறுப்பேற்கிறது.

கூட்டுறவு இன்சூரன்ஸ் உலகசேவை புரிகிறது.

கூட்டுறவு இன்சூரன்ஸ் இலாகா,

கூட்டுறவு மொத்த விற்பனை இலாகாவின்
இனை ஸ்தாபனம்

CWE

102, சதாம் வீதி, கொழும்பு-1.
போன்: 5266, 5267.

UAB-CWE-1858-60


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் தம்பி..

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

முறையீட்டாளியின் வாதத்தைத் தகர்த்தால் போதும்; வெற்றி கிடைத்துவிடும். தான் ஒன்று கூறி அதை நிறுவ வேண்டிய அவசியம் இல்லை. சிவில் வியாச்சியங்களில் எதிரியின் வாதத்தைத் தகர்த்தால் போதாது. தன் கட்சியை நிறுவினுலன்றி தனக்குச் சாதகமாகத் தீர்ப்புக் கிடைக்காது. தன் கட்சியின் ஒரு கூறுமட்டும் நிறுவினுல் நிறுவிய நிலையே சாதகமாக அமையும் தீர்ப்பு; மறுகூறு எதிரிக்குச் சாதகமாகலாம்; அன்றேல் இன்னெரு வியாச்சியத்திற்கு விதையுமாகலாம். சிலசமயம் தன் கட்சியில் அரைக் கூறு நிறுவுவது அரைக் கிணறு தாண்டிய கதையாகவும் முடியலாம்.

## உதாரணம்

ஒரு காணியைத் தான் ஆட்சிபண்ணி வந்ததாக நிரூபிக்க வேண்டி அக் காணிக்குரிய நாலு ஐந்து வருடக் குத்தகைப் பணத்தைத் தான் வாங்கி அநுபவித்ததாக ஒரு கட்சிக்காரர் சொல்கிருர். குத்தகைகாரரும் அவரிடமே பணம் கொடுத்ததாகப் பொய்ச் சாட்சி கூறுகிருர். இந்த அரைக்கூறு நிறுவிய கட்சிக்காரர் மற்ற அரைக் கூறு நிறுவமுடியவில்லை. வேறுபல தர்க்க ஏதுக்கள் சாட்சிகளால் காணி எதிர்க்கட்சிக்காரருக்கு உரியதென்பதும் ஐயந்திரிபற நிறுவப்படுகிறது. அதிக்கிரமமாக வாங்கிய பணத்தை உரியவனிடம் கொடு என்று தீர்க்கிருர் நீதிபதி. பொய்ச்சாட்சி சொல்லப் பொருள் கொடுத்தது போதாமல் வாங்காத பணத்தையும் கொடுக்க நேருகிறது.

## தன்னுலே தான் கெட்டால்......

எதிரியின் பலத்லதச் சரிவரக் கணியாமல் தான் ஒரு வழியில் செல்லத் துணிந்து இன்னெரு வழியை அடைத்துவிட்டு, எதிரியால் தான் செல்லும் வழியும் அடைபடச் செல்வழி காணுமல் திண்டாடும் கட்சிக்காரரும் உண்டு. "இந்தக் காணியில உனக்கு அரைப் பரப்புக்கு உரிமை உண்டு. அதை ஒரு பக்கமாக அளந்து எல்லை குறித்து எடுத்துக்கொள்" என்று A என்பவர் B என்பவரைக் கேட்கிருர். B என்பவரோ "நீர் குறித்த உரிமைக்கு அமைந்த அரைப் பரப்பு இந்தக் காணிக்குட் பட்டதல்ல. இந்தக் காணி முழுவதும் என்னுடையது" என்கிருர். மறுமொழிப் பத்திரத்தின் ஒரு வசனத்தினுல் தமக்கு A தந்த அரைப்பரப்பின் உரிமையை உதறி எறிகிருர், விசாரணைக்குப் பிறகு காணி A என்பவருக்கே உரியது என்று தீர்ப்பாகிறது. B என்பவர் தமக்குரிய அரைப்பரப்பு C என்பவரின் காணிக்குள் இருக்கிறது என்று வழக்குத் தொடர்கிருர். C என்பவர் இதை வன்மையாக மறுத்து அந்த அரைப்பரப்பு தன் காணிக்கு வெளியே B என்பவரின் காணியைச் சேர்ந்தே இருக்கிறது என்று நிரூபித்துவிடுகிருர். நீதிபதியும் அவ்வாறே தீர்ப்பளிக்கிருர். B யின் அரைப்பரப்பு எங்கே? அவர் தாமாகவே அதை வேண்டாமென்று ஒரே வாக்கியத்தால் ததிதம் செய்துவிட்டாரே! தன்னுலே தான் கெட்டால் தம்பிரான் என்ன செய்வார்?

## குலவித்தை

இத்தகைய வித்தைகள் பலவற்றைச் சிறு வயது முதலே கண்டு பழகியவர் வன்னியசிங்கம். தமது கட்சிக்காரர் இப்படி ஏதாவது தவறு செய்ய முற்படும்போது தந்தையார், இப்படிப்போனுல் இன்ன விபரீத விளைவுக்கு இடம் உண்டு என்பதைச் சிலசமயம் பாமரர் மனதிலும் பதியும்படி விளக்கிக் கூறுவதை அடிக்கடி கேட்டவர். முறையீட்டுப் பத்திரமோ மறுமொழிப் பத்திரமோ தயாரிக்கும்போது சர்வஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதை உதாரணமூலம் உணர்ந்தவர். எதிரியின் தவறுகளைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தத் தந்தையார் கையாளும் யுக்திகளையும் கவனித்தவர்.

## வன்னியசிங்கத்தின் குரு

தன் கொள்கையைக் கூறுமுன் அதைத்திர ஆராய்ந்து, எழக்கூடிய ஆட்சேபங்களை யூகித்து, அவற்றுக்கெல்லாம் சமாதானம் தேடிக் கண்டு, கொள்கையில் சிறு பிழை கண்டாலும் அது பிழைதானு என்று தூக்கி, பிழையானுல் அதைத் திருத்தி, இவ்வாறு பலமுறை ஆராய்ந்து தேர்ந்த பின், கொள்கையைப் பிழையறக் கூறித் தெளிவாக விளக்கி, தடைகளுக்கெல்லாம் விடைகூறித் தன் கொள்கையை (சுபக்கத்தை) ஏதுக்கள், மேற்கோள்கள் காட்டி நிறுவும் தர்க்க நிபுணன்போல் சிவில் நியாயவாதியும் எதிரி என்ன என்ன தடை கிளப்பக்கூடும் என்பதை யூகித்து அவற்றை அகற்ற வழிகோலிக் கொண்டால்தான் வெற்றி கிடைக்கும் என்ற உண்மையைச் சாதித்துக்கொண்டவர். நியாயவாதத் தொழில் முறையிலும் அரசியலிலும் வன்னியசிங்கத்துக்குக் குருவான திரு செல்வநாயகம் அவர்களும் புகழ்பெற்ற சிவில் வியாச்சிய நிபுணரே. அவரது செல்வாக்கும் இத்துறையில் வன்னியசிங்கத்தின் அபிவிருத்திக்குப் பெரிதும் துணைபுரிந்திருக்கும். பரம்பரையாலும் பழக்கத்தாலும் சிவில் வழக்குகள் தயாரிப்பதில் வன்னியசிங்கம் அடைந்த திறமையும் பயிற்சியுமே அரசியல் துறையிலும் சில பல காரியங்களைச் சாதிப்பதில் அவருக்குத் துணை நின்றன எனலாம்.

வெற்றிக்கு அடிகோலும் முறையில் சிவில் வழக்குகளை ஒத்ததே அரசியல் சதுரங்க ஆட்டமும். மதிநுகம்

---

நாடடுப்பா

## பெய்யலியே!

கஞ்சிக் கலயங் கொண்டு
 *கருதறுக்கப் போற பொண்ணே!
களத்தில பெய்த மழை—உன்
 கலயம் நனையப் பெய்யலியே!

பொட்டுமேல பொட்டு வைச்சு
 பொட்டலிலே போற பொண்ணே
பொட்டலிலே பெய்த மழை—உன்
 பொட்டு ருகப் பெய்யலியே!

அரவிந்த சேலே கட்டி
 அன்னநடை போடும் பொண்ணே
அருகில பெய்த மழை—உன்
 அரவிந்தம் அலையப் பெய்யலியே!

தளுக்கு நடை போட்டு
 சையலாகப் போற பொண்ணே
தரையில பெய்த மழை—உன்
 தடம் பதியப் பெய்யலியே

—க. பிள்ளையார்

*கருதறுக்க—கதிர் அறுக்க

---

## சாம்பரிலிருந்து...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வரிசைக்கு உயர்ந்து விட்டது:

நாட்டின் மூலவளங்கள், அவற்றை வளப்படுத்தும் நிபுணர்கள் அத்தனையையுமே பறிகொடுத்துப் பரதவித்த போலாந்து மக்கள் தியாகம் ஒன்றினுல் மாத்திரமே தமது தாய் நாட்டை இன்று பொன் கொழிக்கும் தேசமாக மாற்றியிருக்கிருர்கள்.

இன்று அடிமைப்பட்டிருக்கும் தமிழ் பேசும் இனம் மீண்டும் தன்பழம் பெருமையை நிலை நாட்டுவதற்கும் தனது பிரதேச வளங்களைப் பெருக்குவதற்கும் இந்த வீர மக்களின் தியாகம் பலமிக்க உதாரணமாகத் திகழ வேண்டும்;

தமக்கே தனியுரிமை, பிறருக்கு மதியூசம் கிடையாது என்று எண்ணுமல், வன்னியசிங்கமும் அவரது நண்பர்களும் கூடி, "நாம் இன்ன திசையில் முன்னேறினுல் எதிரி இன்ன வழியில் தாக்க நம் வழி அடைபட்டுவிடும்; இப்படி முன்னேறலாகாது. இன்ன திசையில் முன்னேறினுல் எதிரி தாக்குதற்கு இன்ன இன்ன வழிகளே உண்டு; இன்ன வழித் தாக்குதலை இன்ன வழியிற் சமாளிக்கலாம்; மற்ற வழித் தாக்குதலுக்கு பதில் தாக்குதல் செய்யும் வழி இது; இத்திசையில் முன்னேறுதலே சிறந்தது" என்றெல்லாம் முன்கூட்டியே சிந்தித்துத் தெளிந்து திட்டம் வகுத்ததனுலேயே தமிழரசுக் கட்சி இரண்டு மூன்று "யுத்திப் போராட்டங்களில்" வெற்றி பெறுதலும் சாத்தியமாயிற்று எனக் கூறுதல் மிகையாகாது.

(தொடரும்)

---

## ஆனந்தா இளைஞர் சங்கம்

ஆனந்தா இளைஞர் சங்கத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டி கடந்த 10-9-60-ல் நடைபெற்றது. சங்கத்தின் போஷகர் திரு. வ. கணபதிப்பிள்ளை, டாக்டர் துரைசாமி, திரு. கந்தையா ஆசிரியர் ஆகியோர் பிரசன்னமாயிருந்தனர். திருவாளர்கள் க. சிவானந்தன், சி. துரைசிங்கம், க. தியாகராசா, ஆகியோர் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர் திரு. த. கந்தையா ஆசிரியர் பரிசில்களை வழங்கினர்.

முதலாவது இடத்தைப் பெற்ற நெப்போலியன் இல்லத்துக்கு "வல்லிபுரம் சலேஞ் கிண்ணம்" வழங்கப்பட்டது. கிட்லர் இல்லம் 2-வது இடத்தைப்பெற்றது.

---


# ஜீ. சீ. ஈ. தமிழ் பரீட்சை
## டிசம்பர் | ஆகஸ்ட்

அற்லஸ் ஹோல் அளிக்கும் விளக்கமான பாடங்களைப் படிப்பதன் மூலம் ஜீ. சீ. ஈ. பரீட்சையில் சித்தியடைவது மிக எளிதாகி விட்டது.

* பரீட்சையின் புதிய நிபந்தனைகள்
* எமது புதிய பாடங்கள்
* 101 வினு விடைகள்
* கடந்த கால வினு விடைகள்

போன்றவற்றிற்கு இன்றே எழுதுங்கள்.

விபரங்கள் இனும்:-

அற்லஸ் ஹோல் த. பெ. 649, கொழும்பு.


---


# "பெண்ணரசி உன் அழகால் என்னையே நான் மறந்தேனே"

என்று உங்கள் அழகினைப் போற்றவைக்க இதோ!!!

## எலைட் சுப்பர்லோன் ஜோர்ஜெட்!!

மங்கையரை மகிழ்விக்கும் மங்காத கண்கவர் நிறங்கள்; நவீன பல டிசைன்கள்; குறைந்த விலை; சிறந்த தரம்; அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்றது.

எலைட் சுப்பர்லோன் ஜோர்ஜெட் ஒன்றே!



இன்று மாலை
நாலு நாற்பத்திஐந்திலிருந்து ஐந்து மணிவரை இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பில் குண்டன்மால்ஸ் ஸ்தாபனத்தார் அளிக்கும் மாலைகீதம் நிகழ்ச்சியைக் கேட்டு மகிழுங்கள்.

* * *

ஏக விநியோகஸ்தர்கள்:-

↓

## குண்டன்மால்ஸ் லிமிட்டெட்,

சில்லறை வியாபாரப் பகுதி: 110 & 114, மெயின் வீதி.

கொழும்பு.

மொத்த வியாபாரப் பகுதி: 26, செட்டியார் வீதி.

Mylads 350/60


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தைத் தொலமி . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தெளிவாகின்றது. எனவே, இறைசினி என்பார் கூறுவது போலத் தக்காணத்திலே தமிழர் சரித்திர காலத் தொடக்கம் மட்டுமன்றி, அளவிட்டுக் கூற முடியாத காலந்தொடக்கம் வாழ்ந்து வருகிறார்கள் எனலாம். தமிழ்ச் சொற்களையும், தமிழ் மக்களின் பழக்கவழக்கங்களையும் ஆராய்ந்து தமிழர் தென்னிந்தியாவின் பழங்குடிகளே என, பி. ரி. சிறீனிவாச ஐயங்கார் முடிவு செய்துளர்.

### இலக்கியச் சான்றுகள்

இவ்விடத்திலே திருக்குறட் செய்யுள் ஒன்றிலே வரும் 'பழங்குடி' எனுஞ் சொல்லுக்குப் பரிமேலழகர் கூறும் விளக்கவுரை குறிப்பிடத்தக்கது. "தொன்று தொட்டு வருதல் சேரசோழ பாண்டியரென்றாற்போலப் படைப்புக் காலந்தொடங்கி மேம்பட்டு வருதல்" என்கிறார் பரிமேலழகர். புறப்பொருள் வெண்பாமாலையிலே ஒரு குடியின் பழமை "கற்றோன்றி மண்தோன்றாக் காலத்தே முற்றோன்றி மூத்த குடி" எனக் கூறப்பட்டுளது. இவையெல்லாம் தமிழர் கடல்கோள்களினுல் மறைந்துபோன இலெமூரியக் கண்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதையும், இக்கண்டத்தில் இப்பொழுது தக்காணமே எஞ்சியுளது என்பதையும் நன்கு புலப்படுத்துகின்றன.

### எதிர்மறைச் சான்றுகள்

"திராவிடர்களின் பிறப்பிடம் இந்தியாவின் தென்பகுதி எனக்கொள்ளலே மிகப் பொருத்தமானது. இந்தியாவுக்கு வெளியேயுள்ள எப்பகுதியுடனும் அவர்களை இணைக்கும் ஐதிகக் கதை ஒன்றுமில்லை. அவர்கள் உறவுகொண்டாடத் தக்க இனத்தவர்களும் இந்தியாவுக்கு வெளியேயில்லை. யாமறிந்த அளவில் அவர்கள் இந்தியாவின் பழங்குடிகளே யாவர்" எனக் கலாநிதி பேகருழுசன் கூறியுளர். இவருடைய கூற்றைக் கலாநிதி இறையேசனும் வலியுறுத்தியுளர். 'இந்தியாவின் மொழியியற் கணிப்பு' எனும் நூலில் இறையேசன் பின் வருமாறு கூறியுளர்: "திராவிடர்கள் பொதுவாக இந்தியாவிலே அன்றேல் தென் இந்தியாவிலே தோன்றியவர்கள் என்றே கொள்ளப்படுகின்றனர். இவர்கள் தென்னிந்தியாவின் பழங்குடிகள் அல்லர் என்பதை அறிவிக்கும் சான்றொன்றுமில்லை." டாக்டர் மாக்கின் என்பவரும் இக்கருத்தையே வெளிப்படுத்தினர்.

### சிந்து நதி தீரம்

இலெமூரியாக் கண்டத்தில் அன்றேல் அதன் ஒரு பகுதியான தக்காணத்தில் வாழ்ந்த பழந்தமிழர் வட இந்தியாவுக்கும் இந்தியாவுக்கு வெளியிலும் சென்று வாழ்ந்தனர். இதனுலேயே கி. மு. 3000 ஆண்டில் மொகஞ்சதாரை ஆரப்பா எனுமிடங்களிலே மிகச் சிறந்த நாகரிகம் படைத்த மக்கள் வாழ்ந்தனரென அறிகிறோம். மொகஞ்சதாரை நாகரிகத்தைக் கெராஸ் அடிகளார் திராவிடரின் நாகரிகத்துடன் இணைத்துக் காட்டியுளர். திராவிடருக்கு இத்தகைய பழமையை அளிக்க விரும்பாத சிலர் மொகஞ்சதாரை நாகரிகத்தை இன்னும் திராவிட நாகரிகம் என்று முற்றாக ஒப்புக்கொள்ளவில்லை.

### மத வழிச் சான்று

சிவ வழிபாடு தென்னிந்தியத் தமிழருக்கேயுரிய தனி வழிபாடென்பதை மாக்ஸ் முலலர், போப் போன்ற மேனுட்டு அறிஞர்களும் ஒப்புக்கொண்டுளர். சிவன் திராவிடருடைய கடவுளே என்பதை கே. எம். பணிக்கர் அவர்களும் இந்திய வரலாற்றுக் கணிப்பு எனும் தமது நூலிற் சிறப்பாக எடுத்துக் காட்டி நிறுவியுளர். மொகஞ்சதாரை மக்களிடையே காணப்பட்ட சில வழிபாடு அவர்களைத் திராவிடருடன் எவ்வித ஐயத்துக்குமிடமின்றி இணைக்கின்றது.

### ஆரிய நாகரிகத்துக்கு முந்தியது

சேர் யோன்மாசல் என்பவர், "மொகஞ்சதாரை நாகரிகம் பிறநாடுகளிலிருந்து புகுந்தது என்றே, அதன் இடல்பு பிறநாடுகளாற் பாதிக்கப்பட்டதென்றே கொள்ளுதற்கு எவ்வித காரணமுமில்லை" என்று எழுதியுளர். எனவே மொகஞ்சதாரை நாகரிகம் ஆரிய நாகரிகத்துக்கு முந்திய இந்திய நாகரிகத்தின் ஒரு பகுதியென்பதும், அந்நாகரிகம் திராவிட நாகரிகமே என்பதும் நன்கு புலப்படுகின்றன. "இந்தியக் குடாநாட்டின் பழங்குடிகள் திராவிடரேயாவார். அவர்களுடைய நாகரிகமே மெசப்பொத்தேமியாவுக்குப் பரவிச் செமிற்றிக்கு நாகரிகத்தின் அடிப்படையாக விளங்கிற்று" என்று இறைசினி கூறுவதும் கருதத்தக்கது. "அவிளமக் கிழைநாடுகளின் பழைய வரலாறு" எனும் நூலில் ஒல் என்பாரும் இத்தகையகருத்துக்களை வெளியிட்டுளர். "இந்திய நாகரிகமும் பண்பாடும் ஆரியர் வருகைக்கு முன்பே தோன்றியன; இந்திய ஆரியருடைய நாகரிகமும் தாழ்வும் திராவிடராலேயே உண்டானவை" எனவும் ஒல் கூறியுளர்.

(தொடரும்)

# கடல்த் தோணி!

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

தோணிகள் சென்றன. கடைசியாக வெகு நேரம் கழித்து ஒரு கடற்தோணி சென்றது அதில் சின்னத்துரையும் வைரவனும் இருந்தனர்............!

ஆனல்—

சின்னத்துரை எத்தனை தோணிகளை வைத்து ஆண்டு அனுபவித்து வந்தபோதிலும், மீன் பிடிக்க வென்று கடலில் போவதில்லையே, அவனுக்கு இன்று மட்டும் என்ன வந்தது?

❁

ராஜோகாளபுரண்டு படுக்கும் பொழுது விழித்துக்கொண்ட தங்கம்மா, தான் அயர்ந்து தூங்கிப் போய்விட்டதை அப்போது தான் உணர்ந்தாள்.

கிழக்குப் பக்கம் சிறிது சிறிதாக வெளுத்துக் கொண்டு வந்தது. கடற் பக்கமாகக் கண்ணோட்டம் விட்ட தங்கம்மாவுக்கு அந்த மங்கலான வெளிச்சத்திலும் ஒரு தோணி ஆடி அசைந்து வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

தங்கம்மா தோணியைக் கண்டதுதான் கண்டாள். அவளுடைய மனம் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தது. அவளுக்கு இருப்புக் கொள்ளவில்லை. மடியிலே கிடந்த மகனை மணலிலே வளர்த்தி விட்டுக் கடற்கரையை நோக்கி ஓடினாள்.

தங்கம்மாவும் கரையை அடையத் தோணியும் தரையில் தட்டியது. அது செல்லையாவின் தோணியேதான், சந்தேகமில்லை!

ஆனல்—

அது வெறும் தோணி!

# ஆசை

(14-ம் பக்கத் தொடர்ச்சி)


ருய். என்ன பாதகம்! இது உன்னை விடுமா! மக்கள் போதங்களைப் புசிக்கவொட்டாமல் அவர்களைக் கவலை இன்ன லைக்கின்ருய். முகமெல்லாம் பள்ளம் விழுந்து தலையெல்லாம் நரைத்து, சரீரமும் ஒடுங்கி, இந்திரியங்களும் தளர்ந்து போயினும் நீ மாத்திரம் சற்றும் நரையாது இளம்பருவம் கொண்டு ஆடுகின்ருய். இது வன்றோ விந்தை! இவ்வுலகமெல்லாம் கஷ்டப்படுத்தும் உன்னை சத்துருவென்றெண்ணுமல் மித்துருவாக மக்கள் பாவிக்கிருர்களே. இதென்ன பேதமை! விவேகனது கூட்டுறவால் உன்னைப் பிரிந்து மாந்தர் எப்போது சுகமடைவார்களோ, இதனை யாரறிவர்?

—ஏ. வர்ணன்

திருகோணமலை.


வெற்றிகரமான 4-வது வாரம்!

சென்ட்ரல் (கொழும்பு) ஓடியன் (கல்கிசை) ராணி (யாழ்ப்பாணம்) ராஜேஸ்வரா (மட்டக்களப்பு) ஜோதி (திருகோணமலை)



இவ்வாண்டின் ஈடு இணையற்ற முழு நீள நகைச்சுவைப் படம்.
விலா குலுங்கக் குலுங்கச் சிரிப்பூட்டிக் களிப்பூட்டும் சிங்காரச் சித்திரம்.
அஞ்சலிதேவியின் அற்புதமான நடனங்களும், காதுக்கினிய பாடல்களும் நிறைந்த படம்.
நீங்கள் ஒவ்வொருவரும் பார்த்து மகிழ வேண்டிய படம்.

டி. ஆர். ராமச்சந்திரன்—அஞ்சலிதேவி
தங்கவேலு—ஏ. கருணாநிதி
கே. சாரங்கபாணி—பிரண்ட் ராமசாமி
சட்டாம்பிள்ளை வெங்கட்ராமன்,
பக்கிரிசாமி—டி. பி. முத்துலட்சுமி
எம். சரோஜா
முதலியோர் நடித்த

அஞ்சலி பிக்சர்ஸ்

## அடுத்த வீட்டுப் பெண்

இசை—தயாரிப்பு: ஆதிநாராயணராவ் ★ டைரக்ஷன்: வேதாந்தம் ராகவையா


பின்னணி-
பி. ஸ்ரீனிவாஸ், சீர்காழி கோவிந்தராஜன்,
ராகவன், எஸ். சி. கிருஷ்ணன், பி. சுசீலா,
ஜானகி, டி. வி. இரத்தினம்.



குதூகலமான 2-வது வாரமாக காண்பிக்கப்படுகிறது!

எல்பின்ஸ்டன் [கொழும்பு] — ரெக்ஸி [வெள்ளவத்தை] — வின்சர் [யாழ்ப்பாணம்] — வேல்ஸ் [கண்டி]

இம்பீரியல் [மட்டக்களப்பு] — நெல்சன் [திருகோணமலை] — கிங்ஸ் [பதுளை] — அசோகமாலா [நீர்கொழும்பு]



தலைசிறந்த நடிகர்கள் பலர் முதன் முதலில் ஒன்றுசேர்ந்து திறம்பட நடிக்கும் படம்.
அற்புதமான நடனங்களும், பயங்கரமான வாள்ச் சண்டைகளும் நிறைந்த படம். நீங்கள் ஒவ்வொருவரும் தவருது பார்த்து மகிழவேண்டிய படம்.
3 வருடங்களாக 25 லட்சம் ரூபா செலவில் அதி உன்னதமாக தயாரிக்கப்பட்ட படம்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன்,
வைஜயந்திமாலா, பத்மினி, பானுமதி,
பண்டரிபாய், நம்பியார், பாலையா,
இ. வி. சரோஜா, டைன்ட சோமு
முதலியோர் நடித்த

## ராஜபக்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்குறண்டலுக்கு என்ன செய்வது?

நாயிலைப் பிடிப்பதற்கு நீங்கள் வேகமாக நடக்கின்றீர்கள். ஆனால் திடீரென்று உங்கள் காலிலே கண்டு இழுத்துப் பிடித்துக்கொள்கிறது. வலி தாங்க முடியவில்லை.

அல்லது நீங்கள் ஆற்றிலே நீந்திக்கொண்டிருக்கலாம். நெடுகாலத்திற்குப் பிறகு இன்று வந்திருக்கிறீர்கள். ஆதலால் தண்ணீரை விட்டு வெளியே வர உங்களுக்கு மனம் இல்லை. உடனே திடீரென்று கால் குறண்டி இழுக்கிறது.

ஆனால் காலில் மட்டுமே குறண்டல் வாதம் (Cramps) வரும் என்று கருதல் ஆகாது. மற்ற இடங்களிலும் வரலாம். குமாஸ்தாக்கள், எழுத்தாளர்கள் முதலியோர் நெடுநேரம் எழுதிக்கொண்டிருந்தால் சிலசமயம் கையில் மரமரப்பும் வலியும் உண்டாகும். இதை எழுத்தாளர் குறண்டல் (Writer's-Cramp) என்பார்கள் சிலருக்கு அடிவயிற்றில் ஏற்படலாம். ஆனால் பெரும்பாலும் ஆடுசதையிலே, அதாவது, காலின் பின்பக்கத்தில் உள்ள பெரிய தசையிலேதான் குறண்டல் உண்டாகும்.

கால் குறண்டலை ஒரு நோய் என்று சொல்ல முடியாது. ஆடுதசையிலே இரத்த ஓட்டம் குறைந்துவிட்டது என்று காட்டும் ஒரு குறியாகவே அதைக் கருத வேண்டும். இரத்த ஓட்டக் குறைவுக்கு காரணம் இரத்தக் குழாய்கள் சிறுத்துப் போதலேயாகும். அவை ஏன் சிறுக்கின்றன? சாதாரணமாக இரண்டு காரணங்களைச் சொல்லலாம். ஒன்று நாடி குறுக்க நோய் (Arteriosclerosis). மற்றது உடற்பயிற்சியின்மை. நாம் ஒழுங்காக உடற்பயிற்சி செய்யாவிடில் நமது உடல் தசைகள் வலுவற்றுப்போகின்றன. அது மட்டுமா அவைகளுக்கு இரத்தம் கொண்டு வரும் இரத்தக் குழாய்களின் துவாரம் மிகவும் குறுகிவிட அது வழியாக இரத்தம் வர முடியாதுபோகிறது. இச்சீர்கெட்ட நிலையிலே நாம் இருந்தாற்போல, ஏதோ ஒரு தசையை அளவுமீறி அல்லது கடுமையாக வேலை வாங்கினால் அது அவ்வருத்தத்தை ஆற்றமாட்டாது. குறண்டி இழுக்கத் தொடங்கிவிடுகிறது.

இது தவிர வேறு காரணங்களாலும் தசைகளில் குறண்டல் ஏற்படலாம். முக்கியமாக நமது ஆகாரத்திலே கண்ணாம்புச் சத்து (Calcium) குறைவாக இருந்தால் ஏற்படும்.

வயது முதிர்ந்தவர்கள் ஒவ்வொரு வேளை உணவுடனும் ஒரு குவளை பால் அருந்துவது அவசியம் பாலிலே இந்தச் சத்து பேரளவு இருக்கிறது.

ஒழுங்காக உடற்பயிற்சி செய்வதும் இன்றியமையாதது. நாள்தோறும் ஒரு மைல் தொலைவாகிலும் வேகமாக நடந்து வர வேண்டும்.

காலில் குறண்டல் உண்டானால் உடனே உட்கார்ந்து காலை ஆற்றிவிட வேண்டும். இதற்கு சூடான ஒத்தடம் கொடுப்பது மிகவும் நல்லது. இருபது நிமிஷம்வரை போடலாம். வலி நின்ற பிறகு தேய்த்து நீவிவிடலாம். விரைவில் குணம் ஏற்படாவிடில் மருத்துவரை வரவழைக்க வேண்டும்.

—ஐ. பாலசுப்பிரமணியம்




# இளைஞரின் சிந்தனைக்கு....

—நா. சிவதாஸன்—

உலகம் சுழன்றுகொண்டேயிருக்கிறது. அதற்கு ஓய்வு இல்லை. உறக்கமில்லை. கணக்கற்ற மனிதர்களையெல்லாம் விழுங்கிவிட்டு அதே வாயால் ஏப்பம் விட்டபடியிருக்கிறது. அதன் கடின உழைப்பிற்கு இந்த உணவு தேவைபோலும். அது விழுங்கும்போது இளமையையோ முதுமையையோ பார்ப்பதில்லை. தாரதம்மியம் என்பதே கிடையாது. ஆனால் அது சுக்கும்போது விழிப்புடனும் கண்டிப்புடனும் இருக்கிறது. அதாவது பால் குடிக்கும் பாலர்களாகவே கக்குகிறது. நாங்கள் இப்போது இருக்கும் வாலிபத்துடனா பிறந்தோம்? இல்லையே. பாலர்களாக வந்து பின் பருவமுள்ளவர்களாக மாறியிருக்கிறோம்.

மனித சமுதாயம் தோன்றிய காலம் தொடக்கம் வளர்ந்துகொண்டேயிருக்கிறது. அன்று கானகத்தில் மிருகங்களுடன் மிருகமாக வாழ்ந்த மனிதன் இன்று பகுத்தறிவுள்ளவனாக; படாடோபமாக வாழ்கிறான்.

அன்று கதைக்க முடியாது கஷ்டப்பட்டவன் இன்று கதைக்காமல் இருக்க முடியாது கஷ்டப்படுகிறான். அன்று இயற்கைச் சூழ்நிலையால் தாக்கப்பட்டவன் இன்று தனக்கு ஏற்றதாக அதை மாற்றியமைக்கிறான். உலகம் முழுவதும் வளர்ச்சியும் புரட்சியுமாக இருக்கிறது. மனிதன் சிந்தனை செய்யும் ஆற்றல் உள்ளவன் அதனால்தான் அவனால் இந்த நிலைக்கு வர முடிந்தது.

இன்று நாம் அணுவுகத்தில் வாழ்கின்றோம். அதாவது "ரொக்கெட்" உலகில். இன்றைய உலகம் அறிவுலகம் அறிவும் ஆற்றலும் உள்ளவர்களைத்தான் உலகம் மதிக்கிறது. கௌரவிக்கிறது.

ஆகவே நாங்கள் யாவரும் அறிவும் ஆற்றலும் உள்ளவர்களாக வர வேண்டும் அதற்கு இப்பொழுது தொடக்கம் முயற்சி செய்ய வேண்டும். 'முயற்சி திருவினையாக்கும்' என்பதை யாம் புறக்கணிக்க முடியாது. அறிவும் ஆற்றலுமுள்ளவர்களால்தான ஆக்கப்பாதை வகுக்க முடியும் அப்பாதை சிறந்ததாய்; நல்லதாய் சீரிய தன்மையுள்ளதாய் இருக்கும் என்பதில் கிஞ்சித்தும் ஐயமில்லை.

இன்றைய இளைஞர்களாகிய நாம் தான் வருங்காலப் பிரஜைகளாவோம். நாம் தான் இந்த உலகை ஆளப்போகின்றோம். ஆகவே இந்த உலகில் வாழத் தகுதியும் தன்மையும் உடையவர்களாக நாம் இருக்க வேண்டாமா? இன்று உலகில் நடக்கும் சீர்கேடுகள்; பித்தலாட்டங்கள் எங்கள் ஆட்சிக்காலத்திலாவது இல்லாது இருக்க வேண்டும். எங்கள் ஆட்சி நல்லதாக, சிறந்ததாக மற்றவர்கள் பின்பற்றக்கூடியதாக இருக்க வேண்டும்.

மனிதன் பிறக்கிறான், இறக்கிறான். அந்தப் பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடைப்பட்ட காலம்தான் அவனுடைய வாழ்நாளாகும். அந்தப் பொன்னான வாழ்நாளை வீணே கழித்துவிடக்கூடாது. காலம் சும்மாய் இருக்காது. அது கழிந்துகொண்டேயிருக்கும். அதைத் திரும்பப் பெற முடியாது. ஆகவே காலத்தின் பெருமையையும் அருமையையும் உணர்ந்து நடக்க வேண்டும். அப்படி உணர்ந்து நடந்தவர்கள்தான் இன்று போற்றப்படுகின்றனர்.

இராமன் ஆண்டாலென்ன? இராவணன் ஆண்டாலென்ன? என்ற எண்ணமுடையவர்களாக இருக்கக்கூடாது. நாம் ஒவ்வொருவரும் இலட்சியமுள்ளவர்களாக இருக்க வேண்டும். எம் வாழ்வும் கொள்கையைக் குறிக்கோளையுடையதாய் இருக்க வேண்டும். இலட்சியமற்றவனை உலகம் மதிக்காது. நாம் எமக்காக மாத்திரம் வாழக்கூடாது. பிறருக்காகவும் வாழ வேண்டும். நாமும் வாழ வேண்டும். அதே நேரத்தில் மற்றவர்களையும் வாழ வைக்க வேண்டும். 'வாழு; வாழவிடு' என்ற சிறந்த சீரிய பரந்த மனப்பான்மையுடையவர்களாக இருக்க வேண்டும் புத்தர், யேசு, காந்தி [illegible] பெருமையும் இன்றும் என்றும் இந்த உலகம் உள்ளமட்டும் இருக்கும் என்பதை யாம் மறந்துவிட முடியாது. இதை மறுக்கவும் முடியாது. ஆகவே இளைஞர்களாகிய நாம் அறிவும் ஆற்றலும் கொள்கையும் குறிக்கோளும் உள்ளவர்களாக வரத் தெண்டிக்க வேண்டும். நல்லதையே சிந்திக்க வேண்டும். அந்த நல்லதையே செய்ய வேண்டும். இதனால் நாம் நல்லவர்களாக வர முடியும் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். நாம் அப்படி வர இந்த நிமிடம் தொடக்கம் முயற்சி செய்வோமாக.

# ஆசை

ஏ! ஆசையே! நீ மக்களை என்னபாடு படுத்துகின்றாய்! எழுந்து உப்பரிகையில் தென்றலைப்பருகி தேன்நிழலைச் சுவைத்து வாழ்பவரையேனும் அனுகாதிருந்தனையோ? ஏகசக்ராதிபத்தியம் செய்யும் அரசரையேனும் விட்டு நீங்கினையோ? உலகமெலாம் துச்சமெனத் துறந்த துறவிகளையும் வாட்டுகின்றாயே, உனக்குச் சற்றும் இரக்கமில்லையா? என்ன கொடுமை செய்கின்றாய்.

இடைப்ப தொன்றுமில்லையாயினும் சொல்லுதற்கரிய அநேக தேசங்களில் உலவச் செய்கிறாய். சாதி, குலம் என்ற அபிமானங்களைத் துறந்து, ஊழியஞ் செய்து, ஏமாறச் செய்கிறாய். இத்தனை செய்தும் நீ சற்றும் திருப்தியடைகின்றாயுமில்லை. உனது கொடுமையைச் சகிப்பது அரிதாகவே இருக்கின்றது செல்லாக்காக கிடைக்காவிடினும், புதையலுக்காகப் பூமியைத் தோண்டவும், பொன்னுண்டாக்குவதற்காக மலையிலுள்ள கற்பொடிகளை உலையில் வைத்து ஊதவும், திரவியந்தேடத் திரைகடலோடவும், அரசரை மகிழ்விக்கப் பல உபாயங்கள் செய்யவும் தூண்டுகின்றாயே. ஏ! ஆசையே உனக்கு மனிதர் மீது சற்றும் கருணையில்லையா? உன்னால் ஏவப்பட்ட மக்கள் விவேகத்தைக் கைவிட்டு என்னதான் செய்யச் சகிக்கிறார்கள்! துஷ்டர்களைச் சார்ந்து, அவரது கொடுஞ்சொற்கள் தங்கள் கன்னங்களில் கண்ணீரைப் பெருக்குவனவாயினும் அவற்றைப் பொறுத்துப் புன்னகை புரிகிறார்கள். பணவெறியில் மதியிழந்த மடார்களையும் கைகூப்புகிறார்கள். மானமிழந்து, தம் புகழைத் தாமே பாடிக்கொள்கிறார்கள். ஆ! ஹா! உன்வல்லமையை என்ன சொல்வது!

ஏ! ஆசையே! உன்னைத் துறந்தவரன்றோ முனிவர் எனப்படுவார்? ஆனால் நீ யாரையும் விட்டு நீங்காமலே அவர்க்கெலாம் முனிவராது தன்மை வரச் செய்கின்றாயே! இதென்ன ஆச்சரியம்! மக்கள் உனக்கிடங்கொடுத்து முனிகளைப்போல எவ்வித அவமானத்தையும், சம்சார சுகத்தையும் துறக்கின்றார்கள். அதுமாத்திரமா? கொடு வெயிலையும் கடுங் குளிரையும் சகிப்பதோடு இராப்பகலாய் நித்திரையின்றித் தியானமும் செய்கிறார்கள். இவ்வாறு முனிவர் செய்யும் யாவற்றையும் செய்தும், அந்தோ! அவற்றின் பயனை மாத்திரம் அடைகிறார்களில்லை. நீ அவர்களிடம் தங்கியன்றோ அவர் குடியைக் கெடுக்கின்

(13-ம் பக்கம் பார்க்க)

# வளர்மதி புதிய மருமக்கள்

3104 செல்வி கோகிலா சின்னப்பு, சரசாலை வடக்கு.
3105 செல்வி மேலின் எதிர்மாணிக்கம், வத்தளை.
3106 செல்வி இரா. மாரி. அறிவுச்செல்வம், இல: 4, கொச்சடை ஆஞ்சல், மதுரை.
3107 க மகேந்திரன், கிரிமலை.
3108 மா. குலேந்திரன், யாழ்ப்பாணம்.
3109 கு சைப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை, கிளிநொச்சி.
3110 எஸ். நடராஜா, கொழும்பு—5.
3111 பொ. தனபால சுப்ரமணியம், கொக்குவில் கிழக்கு.
3112 நா. முகம்மது மன்சூர், மாதம்பை.
3113 பெ. நடராசா, மாத்தளை.
3114 ச. பாலேந்திரா, திருநெல்வேலி தெற்கு.
3115 செல்வி வீ மனோரஞ்சிதம், திருகோணமலை.
3116 ந. சுவர்ணராசா, தெல்லிப்பழை.
3117 வி. கதிரவேலுப்பிள்ளை, காத்தான்குடி.
3118 த. சிவபாதம், திருகோணமலை.
3119 செல்வி செ. மேரி பத்மிமா, பழுகாமம்.
3120 சி. தர்மகுலசிங்கம், திருமலை.
3121 ஆ. குமாரகுலசிங்கம், திருமலை.
3122 பி. சுந்தரலிங்கம், திருகோணமலை.
3123 மு. யூசுப், திருகோணமலை.
3124 பொ. தியாகராசா, நோர்வுட்.
3125 செல்வி யோ. சிவசெல்வரி, தெல்லிப்பழை.
3126 சோ. ஞானச்சந்திரன், மட்டுவில் தெற்கு.
3127 பா சிறீபிரியதர்சன், பருத்தித்துறை.
3128 வ. திருமுருகராசா, சாவகச்சேரி.
3129 நா. இரத்தினகுமார், மாவிட்டபுரம்.
3130 நா. அருளானந்தம், அளவெட்டி வடக்கு.
3131 செ. நவரட்னராசா, பருத்தித்துறை.
3132 எம். அமீன், புத்தளம்.
3133 சா. அ. இ. ஜெயராசா, பருத்தித்துறை.
3134 க. குமரவேலன், மட்டக்களப்பு.
3135 சி. பொன்னுத்துரை, காத்தான்குடி.
3136 செல்வி வ. திருமங்களநாயகி, சாவகச்சேரி.
3137 ஏ. சி. எம். அன்ஸாரி, காலி.
3138 வெ. நாச்சிமுத்து, உடகரவிட்ட.
3139 எம். எம். முகம்மது, வெலிகம.
3140 எ. எம். எம். ஹுஸைன், தெனியிட்டிய.
3141 செல்வி வல்லிபுரம் தவமணி, கல்முனை.
3142 கு. அகிம்ஸருடு, யாழ்ப்பாணம்.
3143 பொ. ஏகாம்பரநாதன், யாழ்ப்பாணம்.
3144 இ. ஜீவகாருணியம், ஊர்காவற்றுறை.
3145 செல்வி எலிசபத் டேவிட், மாத்தளை.
3146 செல்வி சகுந்தலா இரத்தினசபாபதி, சுன்னாகம்.
3147 செல்வி நேசமணி கந்தையா, காங்கேசன் துறை.
3148 செல்வி க. பர்வத பத்மினி, கொடிகாமம்.
3149 ஏ. சின்னத்தம்பி, மாவிட்டபுரம்.
3150 சி. பெருமாள், கண்டி.
3151 செல்வி ரஞ்சிற் சிங்கநாயகம், கொழும்பு-6.
3152 ஏ. வி. கிருஷ்ண பிள்ளை, களுதாவளை.
3153 சோ. விஜயசுந்தரி, கொழும்பு—13.
3154 இ. ரவீந்திரன், திருகோணமலை.

வளர்மதி—சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும்.

## வளர்மதி

## சுதந்திரன் மாணவர் மன்றம்

### அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 1.

பெயர் ..................................................

பாடசாலை ..................................................

விலாசம் ..................................................

..................................................

.............................. ..............................
பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## கலைச்செல்வி கலா மன்றம்

கலைச்செல்வி கலா மன்றத்தின் ஆதரவில் பாரதி தினக் கூட்டம் கடந்த 11-9-60-ல் மன்றக் காரியாலயத்தில் மன்றத் தலைவர் திரு. வீரசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

பாரதியின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் பொருட்டு இரண்டு நிமிட நேரம் மௌனம் அனுஷ்டித்ததைத் தொடர்ந்து, திரு. வி. பாலதாசனின் இன்னிசைக் கச்சேரியும், திரு. என். அச்சுதனின் "பாரதி கண்ட சமுதாயம்" என்னும் தலைப்பில் சொற்பொழிவும் நடைபெற்றன. மன்றத்தாரின் முதலாவது நாடகம் அங்கு ரார்ப்பணஞ் செய்யப்பட்டதைத் தொடர்ந்து முதல் ஒத்திகையும் நடைபெற்றது. திரு. நா. வீரசிங்கத்தின் நன்றியுரையுடன் விழா இனிது முடிவுற்றது.

## அகில இலங்கை திராவிடர் முன்னேற்றக் கழகம்

அகில இலங்கை திராவிடர் முன்னேற்றக் கழக செயற்குழுக் கூட்டம் கடந்த 4-9-60-ல் கொழும்பு பஞ்சிகாவத்தை வொக்கேட் லேன் 41-ம் இலக்க இல்லத்தில் கூடியது.

கூட்டத்திற்கு கழகப் பொதுச் செயலாளர் திரு. அ. ம. அந்தோனிமுத்து தலைமை வகித்தார்.

சென்ற கூட்டத்தின் நிகழ்ச்சி படிக்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டது. கழகத்திற்கு வந்திருந்த முக்கியமான கடிதங்கள் படிக்கப்பட்டு கழக வளர்ச்சிக்கான திட்டங்கள் தீட்டப்பட்டன. பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:-

(1) இலங்கை இனச் செய்தித் தாள்களை ஆட்சியினர் ஒரு கார்ப்பரேஷன் கீழ் எடுக்க விருக்கும் முயற்சி நாட்டு மக்களின் எழுத்துரிமையையும் கருத்துச் சுதந்திரத்தையும் பறித்து, சர்வாதிகார ஆட்சி ஏற்பட வழி வகுப்பதாயிருக்கும் என இப்பொதுக் குழு அச்சமிப்பதுடன் இம்முயற்சியை உடனடியாக கைவிட வேண்டுமென கேட்டுக் கொள்கிறது.

(2) அகில இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்தின் மேற்கு மாநில மாநாட்டையும் சமூக சீர்திருத்த மாநாட்டையும் திராவிட மகளிர் மாநாட்டையும் நடத்த ஒரு வரவேற்புக் குழுவை இப்பொதுக் குழு தெரிவு செய்கிறது. அகில இலங்கை திராவிட முன்னேற்றக் கழக மேற்கு மாநிலமாநாட்டுக்கு திரு கெ. தமிழ்நாதனை வரவேற்புக் குழுத் தலைவராகவும் சமூக சீர்திருத்த மாநாட்டுக்கு ஜெ ஏ சுந்தரத்தை வரவேற்புக் குழுத் தலைவராகவும் திராவிட மகளிர் மாநாட்டுக்கு திருமதி வசந்தா அப்பாத்துரையை வரவேற்புக்குழுத் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டது.

மாநாட்டு இதர நிருவாகிகள் விவரம் பின்வருமாறு:- இணைச் செயலாளர்கள்: திரு ஏ. வி. அழகேசன், திரு. என். சண்முகநாதன், பொருளாளர்: திரு. டி. தாசன், தொண்டர் படைத் தளபதி: திரு. எம். என். குமார். 40 பேர்கள் அடங்கிய வரவேற்புக்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## பண்டாரவளை இ. தி. மு. க. கிளை

தமிழ் நாட்டுத் தலைவர்களை இ. தி. மு. க. மாநாட்டுக்கு அழைத்து வர கடந்த 7-9-60-ல் விமான மூலம் தமிழகம் சென்ற மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் தோழர் மு. அ. வேலமுருகனை, பண்டாரவளை, பூணாகலை, ராசாத்தோட்டம், பல்லகலை, நிலுவை, கும்பால்வளை, மாளிகாதன்னை ஆகிய கிளைக் கழகங்களின் செயலாளர்கள் மலர்மாலைகள் அணிவித்து வழியனுப்பி வைத்தனர்.

## தொட்டிலடி சனசமூக சேவா சங்கம்

சங்கானை—தொட்டிலடி சனசமூக சேவா சங்கத்தின் விளையாட்டுப் போட்டி கடந்த 28-8-60-ல் நடைபெற்றது. சங்கானை பட்டின சபைத் தலைவர் திரு. நா. முத்தையா குத்துவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்.

பலவகைப்பட்ட விளையாட்டுக்களில் இரு இல்லங்களைச் சேர்ந்த ஆண், பெண் இரு பாலாரும் பங்கு பற்றினார்கள். ஆண்கள் விநோத உடைப்போட்டியில் மீன் விற்பனை செய்யும் பெண், வேடன், குருட்டுப் பிச்சைக்காரன் என்பவர்கள் முறையே பரிசில் பெற்றனர். பெண்கள் விநோத உடைப்போட்டியில் ஔவையார் ஐயர், உழவன் என்பவர்கள் முறையே பரிசில் பெற்றனர். நாவலர் இல்லம் விளையாட்டுப் போட்டியில் முதலிடம் பெற்று இவ்வருட வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத் தொகுதிப் பாராளுமன்றப் பிரதிநிதி திரு அல்பிரட் துரையப்பா, வட்டுக்கோட்டைத் தொகுதிப் பாராளுமன்றப் பிரதிநிதி திரு அ. அமிர்தலிங்கம், ஆசிரியர் க. பொன்னம்பலம் ஆகியோர் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள்.

வலிகாமம் மேற்குக் காரியாதிகாரி திரு. டப்ளியு. செல்வரத்தினம் பரிசில்களை வழங்கினர். திரு. ஆ. முருகேசு நன்றியுரை கூறினர்.

## ஜும்ஆ மஸ்ஜித் பரிபாலன சங்கம்

மாபோலை ஜும்ஆ மஸ்ஜித் பரிபாலன சபையைச் சேர்ந்த ஜமா அத்தார்களின் பொதுக் கூட்டமொன்று கடந்த 31-7-60ல் மாபோலை அரசினர் முஸ்லிம் பாடசாலையில் சபைப் போஷகர் ஜனுப் எம். எல். எம். நிஸார் தலைமையின்கீழ் கதீப் ஈ. ஆர். இஸ்மாயில் கிருஅத்துடன் ஆரம்பமாயது.

கூட்டத்தில் பள்ளி வாயலினதும் சபையினதும் முன்னேற்றத்துக்கு வேண்டிய நற்கருத்துக்கள் பரிமாறப் பட்டபின் நடப்பு வருடத்துக்கான உத்தியோகத்தர் தெரிவில் ஜனுப் எம். எல். எம். நிஸார் போஷகராகவும், ஜனுப் எம். ஏ. எம். வாஹித் (அமீர், மாபோலை தப்லீக் ஜமாஅத்) தலைவராகவும், ஜனுப் எம். ஐ. முஹம்மது தாஜுதீன் (முஸ்லிம் விவாகப் பதிவுகாரர், அழுத்குறு கோறளை தெற்குப் பிரிவு) கௌரவ செயலாளராகவும், ஜனுப் எஸ். எம். அபுல் ஹஸன் உதவிச் செயலாளராகவும், ஜனுப் ஓ. ஏ. சமத் பொருளாளராகவும், ஜனுப் கே. சி. எப். டீன் கணக்குப் பரிசோதகராகவும், ஜனுப்களான ஆர். எம். ஷம்சுதீன், எஸ். எம். அப்துல் ஹமீத், எம். பீ. எம். தாஜுத்தீன், எஸ். எம். இஸ்மாயீல், டி. அஹ்லாத், ஆகியோர் சபை உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர். [illegible] நன்றி கூறலுடன் [illegible] பட்டுபாதிஹா [illegible] கூட்டம் இனிது கலைந்தது.

## அகில இலங்கை அருந்ததியர் சங்கம்

அகில இலங்கை அருந்ததியர்சங்கத்தின் செயற்குழு கூட்டம் கடந்த 4-9-60-ல் சங்கப் பணிமனையில், தலைவர் திரு. எம். வேலாயுதம் தலைமையில், நடைபெற்றது. அவ்வமயம் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

(1) பிரதம மந்திரியைக் கூடிய விரைவில் பேட்டி கண்டு, அருந்ததிய சமூக மக்களின் குறைகளை நிவர்த்திக்க நடவடிக்கை எடுப்பது.

(2) சங்கத்தின் வேண்டுகோளின்படி, கள்ளுத் தவறணைகளுக்குச் செல்லும் பெண்களையும் பிள்ளைகளையும் தடுப்பதில் வெகு சிரத்தை காட்டிவரும் கலால் பொலிஸ் அதிகாரிகளையும், குறிப்பாக பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல், கலால், கமிஷனர், கொழும்பு பொலிஸ் சூப்பிரிண்டண்டன் ஆகியோர்களின் ஒத்துழைப்பையும் இக்கூட்டம் பாராட்டுகிறது.

(3) அருந்ததியர் சங்கத்தின் நடவடிக்கைகளுக்கு பூரண ஆதரவளித்துவரும் சுதந்திரன் மற்றும் பத்திரிகைகளுக்கு இச் சங்கம் தனது நன்றியறிதலை தெரிவித்துக்கொள்ளுகிறது.

ஈற்றில் பொதுச் செயலாளர் ஏ. பி. சுந்தரராசனின் நன்றியுரையுடன் கூட்டம்முடிவுற்றது.

## தோட்டக் கமிட்டி உறுப்பினர்கள் கூட்டம்

கம்பளை கதிரேசன் கோவில் மண்டபத்தில் கடந்த 4-9-60-ல் நடைபெற்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் கம்பளை மாவட்டத்தைச்சேர்ந்த 75 தோட்டக் கமிட்டி உறுப்பினர்கள் கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன:-

(1) லெட்சுமி தோட்டத் தொழிலாளர்களை வஞ்சம் தீர்க்கும் நோக்கமாக, தோட்ட நிர்வாகிகள் நடந்துவருகிருர்கள். தொழிலாளர்களது வீடுகளை காடையர்களைக் கொண்டு உடைத்து, பெறுமதியான சொத்துக்களைப் பறிமுதல் செய்து, காடைத்தனத்தைப் புகுத்தி, சங்கத்தை நசுக்கி, தொழிலாளர்கள்—பெண்கள், பிள்ளைகளை இரக்கமின்றி துன்புறுத்தி இவர்களை வெளியே விரட்டி யிருக்கின்றனர். உயிருக்குப் பயந்து தப்பி ஓடிய, பெண்கள் பிள்ளைகள், பக்கத்துத் தோட்டங்களிலும், கிராமங்களிலும் அடைக்கலம் புகுந்திருக்கிருர்கள். இவை சமீபத்தில் நடந்த தகராறுகளிலிருந்து உண்மையாகிறது. பாமர தொழிலாளர்களை ஈவு இரக்கமின்றி நடத்தி வரும் இத்தோட்ட நிர்வாகத்தின் முறைகேடான செய்கைகளை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கின்றது

(2) உயிரை காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென நினைத்து பயந்து ஓடிய தொழிலாளர்கள், பெண்கள் பிள்ளைகளை ஆதரிக்க முன் வந்து உதவிய பிட்டக்கந்தை கிராம மக்களின் அரும்பெரும் சேவையை இக்கூட்டம் பாராட்டுகின்றது.

(3) இத்தோட்டத் தொழி[illegible] செய்து பரிகாரம் தேடவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை உடனே எடுக்கவேண்டுமென அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வதோடு, உடனுக்குடன் தொழிலாளர்களுக்கெதிராக நிலவி வரும் துப்பாக்கிப் பிரயோகம், துஷ்பிரயோகம் ஆகியவற்றை விசாரணை செய்ய ஒரு கமிஷன் நியமிக்க வேண்டுமென்றும் இக்கூட்டம் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறது.

இத்தீர்மானங்களைத் தந்தி மூலமாக பிரதம மந்திரிக்கும் தொழில் மந்திரிக்கும் அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது.

## குருணுகல் சைவ மகா சபை

குருணுகல் சைவ மகா சபையினரால் கடந்த 5-9-60-ல் சிவானந்த ஜயந்தியும், திவ்ய ஜீவன சங்க வெள்ளி விழாவும் கொண்டாடப்பட்டது. புரட்சித் துறவி சுவாமி சச்சிதானந்த யோகி பேசும்போது மக்கள் அனைவரும் சாந்தி பெறக் கூடிய பல நற் போதனைகளை எடுத்துக் கூறினர்

தமிழ்மக்கள்பெரும்பாலும் ஜாதிப் பிரிவினையின் மூலம் முன்னேற்றம் காண முடியாமல் தவிப்பதாகவும், மந்திரங்களை அடிக்கடி நாள் தவருமல் ஜெபிப்போமாயின் யாவருமே தெய்வீக சக்தியை உணர்ந்து பணிபுரிய ஏதுவாகும் என்று சுவாமிகள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டார். சைவ மகா சபைத் தலைவரும் விழாவில் பேசினர்.

## நெடுந்தீவு சமூக முன்னேற்றச் சங்கம்

நெந்தீவு சமூக முன்னேற்றச் சங்க அங்குராப் பணக் கூட்டம் அணிமையில் புதுச் செட்டித் தெருவிலுள்ள கணபதிப் பிள்ளையின் இல்லத்தில் கூடியது. அத்தருணம் நெடுந்தீவின் தேவைகள்குறித்து பரிசிலனை செய்யப்பட்டு அத்தேவைகளை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்ள முயற்சியெடுப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

பின்னர் திரு. வி. பொன்னம்பலம், தலைவராகவும், என். சுவாம்பிள்ளை, உப தலைவராகவும், சு. கணபதிப் பிள்ளை, செயலாளராகவும், சத்தியபால் உப செயலாளராகவும், க. சோமசுந்தரம் பொருளாளராகவும், பி. அல்பிரட் உப பொருளாளராகவும், க இராமனுதர் கணக்குப் பரிசோதகராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

## புங்குடுதீவு மகாசன சபை

அகில இலங்கை புங்குடுதீவு மகாசன சபையின் பொதுக் கூட்டமொன்று கடந்த 11-9-60-ல்கொழும்பு மேட்டுத் தெரு விவேகானந்த சபை மண்டபத்தில் தலைவர் திரு. ந. ஆ. வைத்தியலிங்கம் தலைமையில் நடைபெற்றது. தலைவரின் தலைமையுரையின் பின்னர் சங்கத்துக்குரிய அமைப்புச் சாசனத்தைச் செயலாளரினால் படிக்கப்பட்டுச் சபையோரின் சம்மதம் பெறப்பட்டது. பின்னர் புங்குடுதீவு வாசிகளின் நன்மைக்குரிய முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டன. அவற்றைச் செயல் படுத்துவதற்குச் சபை முன்வந்துள்ளது. ஈற்றில் இறைவணக்கத்துடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

## செந்தமிழ் மன்றம்

அலவத்துகொடை செந்தமிழ் மன்றத்தின் சார்பில் கடந்த 4-9-60-ல் அண்ணல் திரு. முகமது நபி (ஸல்) அவர்களின் பிறந்த தின விழா திரு வி ஏ. இராமையா தலைமையின்கீழ் சிறப்புற நடைபெற்றது

மன்றத் தலைவர் திரு. ஏ. எல். ஏ. அஸீஸ் "நபிகள் நாயகமும் இஸ்லாமும்" என்னும் பொருள்பற்றி பேசினர்.

திருவாளர்கள் எம் எஸ். ஸெய்னுல் ஆப்தீன், கனகராஜ், எம். கே. பாலு உட்பட மற்றும் பலர் நபிகள் நாயகத்தின் சிறப்புப்பற்றி சொற்பொழிவாற்றினர். திரு. வேலுவின் கிளாரினட் இசைக் கச்சேரியுடன் விழா இனிது முடிவுற்றது.

## முத்தமிழ் மாணவர் மன்றம்

மாணவர்களின் சக்தி மகத்தான வல்லமை வாய்ந்தது. அந்த சக்தியை உறுதுணையாகக் கொண்டு அவர்களால் எதையும் ஆக்கவும் அழிக்கவும் முடியும். ஆதலால் மகத்தான சக்தியை தங்களகத்தே கொண்டிருக்கும் மாணவர்கள் நமது முன்னேர்கள் விட்டுச் சென்ற பெரும் பணியான கலைவளர்க்கும் பண்பை தொடர்ந்து ஆற்றுதல் வேண்டும்." இவ்வாறு கொழும்பு ஜெம்பட்டாத் தெரு 23/47-ம் இலக்க இல்லத்தில் நடைபெற்ற முத்தமிழ் மாணவர் மன்றத்தின் முதல் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசிய இ. சுப்பிரமணியம் கூறினர்.

திரு. மா. பி. தமிழ்நெஞ்சன் பேசிய பின்னர் மன்ற உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:—

தலைவர்: திரு. பி. பொன்னக்கோன், உப தலைவர்: செல்வன். இ. சுப்பிரமணியம், செயலாளர்: செல்வன் இ. சண்முகநாதன், உப செயலாளர் செல்வன் ச. கிருஷ்ணன், பொருளாளர்: செல்வன் ஜோ. ஜி ஜெயசீலன், உப பொருளாளர்: செல்வன் வெ. திசைநாதன். செயற்குழு உறுப்பினர்களாக திருவாளர்கள் த. சண்முகம், மா. பி. தமிழ்நெஞ்சன், இ. சோமாஸ்கந்தன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

## கணபதி வித்தியாலயத்தில் பாரதி விழா

கொழும்பு கட்டாதெரு கணபதி வித்தியாலயத்தில் அணிமையில் பாரதி விழா அதி விமரிசையுடன் கொண்டாடப்பட்டது. விழாவுக்கு தலைமைவகித்த வித்துவான் திரு. இ. சி சோதிநாதன் தமது தலைமையுரையில் "பாரதியின் கவிநயம்" பற்றி கற்ரோர்களுக்கும் கல்லாதோர்களுக்கும் பயன்படும்படி நனி சொட்டச் சொட்ட, கூறினர். ஆசிரியர் திரு ச. சிவலிங்கம் "பாரதி கண்டகனவு" என்னும் விடயம்பற்றியும், ஆசிரியர் திரு ஏ. சபாரத்தினம் பாரதி காட்டிய நெறி என்னும் விடயம் பற்றியும், வித்வான் மு. கணபதிப்பிள்ளை "பாரதியும் குழந்தைகளும்" என்னும் விடயம்பற்றியும், இலக்கிய மாணவ மன்றச் சார்பில் செல்வன் த. நந்தகுமார் "பாரதியின் வாழ்க்கை" என்னும் விடயம்பற்றியும் உரை நிகழ்த்தினர்கள். வித்தியாலய மாணவிகளால் பாரதியின் இன்னிசைக் கீதங்கள் இசைக்கப்பட்டன. இறுதியில் ஆசிரியர் திரு. த. சிவரத்தினம் நன்றியுரை நிகழ்த்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப்டம்பர் 30-ம் தேதி வெள்ளி முதல்
# குதூகலமான ஆரம்பம்!

## கிங்ஸ்லி [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை] நவா [கும்பனித்தெரு]
## வெலிங்டன் [யாழ்ப்பாணம்] விஜயா [மட்டக்களப்பு] ஸ்ரீ கிருஷ்ணு [திருகோணமலை]

### அண்ணனின் அறிவுரை:-

இணைபிரியா இதயங் கொண்டவர்கள் நாங்கள். என் தம்பியின் உள்ளத்திலே பிரமிக்கத்தக்க பாசம் தலை தூக்கியது. மயிர் கூச்செறியும் சூழ்நிலையிலே, தலை கொடுக்கும் தம்பியாக மாறிவிட்டான். பிரமை தட்டும் புயல் வாழ்வில் சிக்கிய எங்கள் உள்ள முருக்கும் வரலாற்றை உங்களுக்கு நேரில் விவரிக்க மேலே கூறிய தியேட்டருக்கே மாடர்ன் தியேட்டர்ஸ் "தலை கொடுத்தான் தம்பி" படத்தில் வருகிறோம். அப்பொழுது விவரமாக உங்களுக்கு எல்லாம் புரியும்.

வணக்கம்.

**கே. ஆர். ராமசாமி**

### தம்பியின் சபதவுரை:-

என்னைப் பெற்றெடுத்தவள் என் முதல் தாய். நான் பிறந்த பொன்னாடு என்னுடைய மற்றொரு தாய். நாட்டைப் பழித்தவன் தேவனானாலும், அவனைத் தப்பிச் செல்ல விடமாட்டேன். தாயின் நெஞ்சத்திலே துயரைக் கொடுத்தவன் உயிரோடு இருக்கக்கூடாது. சூழ்நிலையின் கோளாறால் எரிமலையாய்க் கிளம்பி அன்பு வழி மறந்து ஆத்திர வழியில் நான் செல்லும்போது, அண்ணா என் வாழ்வில் குறுக்கிட்டார்............அண்ணா............அவர்தான் அறிவுக் கடவுள், அன்புத் தெய்வம். அவர் உணர்த்திய சீரிய வழியில் சென்று, அவர் அன்புக்காக தலை கொடுக்கும் தம்பியாகவே மாறிவிட்டேன். புரட்சிகரமான என் வாழ்க்கையை நீங்கள் புரிந்து கொள்வதற்காக, சுற்றுப் பிரயாணமாக நானும் அண்ணாவும் மேலே கூறிய தியேட்டர்களிலே காட்சியளிப்போம். வந்து கேளுங்கள் விரிவான என் வரலாற்றை.

அண்ணா வாழ்க!

வணக்கம்:

**எஸ். எஸ். ராஜேந்திரன்**

## எஸ். எஸ். ராஜேந்திரன் - கே. ஆர். ராமசாமி



மாலினி-தாம்பரம் லலிதா
எஸ். மனோகர்,
வி. ஆர். ராஜகோபால்,
டி. கே. ராமச்சந்திரன்,
டி. பி. முத்துலட்சுமி, பி. எஸ். ஞானம்,
பேபி உமா
முதலியோர் நடித்த



# தலை கொடுத்தான் தம்பி

பின்னணி:
டி. எம். சவுந்தரராஜன்—சீர்காழி கோவிந்தராஜன்—எஸ். சி. கிருஷ்ணன்—ஏ. எல். ராகவன்
ஜிக்கி—பி. சுசீலா—ஜமுனாராணி—என். எல். கானசரஸ்வதி.

டைரக்ஷன்: **டி. ஆர். சுந்தரம்** ★ திரைக் கதை-வசனம்: **முரசொலி மாறன் எம். ஏ.**

இப்பத்திரிகை கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை [illegible] சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக பண்டாரநாயக்க மாவத்தை [illegible] அச்சகத்தில் பதிப்பித்து 1960 செப். 25-ம் தேதி பிரசுரிக்கப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org